Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් டிச. 08-14, 2002

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 489




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# ஆன்மீகம்

## புனிதமான மாதங்கள்

ஆடி, மார்கழி, புரட்டாதி போன்ற மாதங்களைப் பீடை மாதங்கள் என்று சொல்வார்கள். இது தவறு.இவையெல்லாம் 'பீட மாதங்கள்' எனப் பெயர் பெற்றவை. நாளடைவில் 'பீடை' மாதங்கள் என மருவிவிட்டது. ஆடி மாதம் தெய்வத்துக்குரிய மாதமாகும். ஆடி அமாவாசை, ஆடிப் பெருக்கு போன்ற விசேசங்களும், இது தவிர பல அம்மன்களுக்கு கொடை விழாவும் ஆடியில் வருகின்றன. மார்கழி மாதம் ஒரு நல்ல மாதமாகும். பாவையர்கள் நோன்பு நோற்று வழிபட, அவர்களுக்கு நல்ல வாழ்க்கை கிட்டும். ஆண்டாள் கண்ணனைக் கணவனாக அடையத் திருப்பாவை பாடித் தவமியற்றிய மாதமாகும். சிவன் கோவில்களிலும் 'திருவெம்பாவை' பாடி பஜனை செய்வது மார்கழியில்தான். இது உள்ளத்திற்குப் பேரானந்தத்தைக் கொடுக்கும். புரட்டாதி மாதம் பெருமாளுக்குரியது. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் பெருமாள் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்வது சிறப்பானது. சில பெருமாள் கோவில்களில் எண்ணெய்க் காப்பு உற்சவம் நடைபெறும். இவை ஆண்டவனை வழிபடப் புனிதமான மாதங்கள்.

தி.குணவர்த்தன, களுவாஞ்சிகுடி.



## இயேசுவின் அன்பு என்றும் குறையாது

மனிதன் பாவ வாழ்க்கை வாழ்வதை முற்றிலும் விரும்பாத இயேசு, மனிதன் இரட்சிப்படைய வேண்டுமென்பதற்காக நம் பாவங்களையெல்லாம் சிலுவையில் சுமந்து, அதே சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டு தாங்கொணா வேதனையோடு தன்னுயிரையே உனக்காகவும் எனக்காகவும் இழந்தார்.

"மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன் மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது, என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது என்கிறார் உனக்கும் எனக்கும் இரக்கம் காட்டும் ஆண்டவர்.

(ஏசாய 54-10)

பார்த்தீர்களா! அன்புச் சகோதரங்களே! அவர் எம் மீது எவ்வளவு அன்பு வைத்துள்ளாரென்று.

அப்போ நீங்கள் பாவ வாழ்க்கை வாழ்ந்து மீண்டும் இயேசுவை சிலுவையில் அறைந்து இரத்தம் சிந்த வைக்கப்போகின்றீர்களா? அல்லது தூய வாழ்வு வாழத் தொடங்கி அவரது குறைவற்ற நிறைந்த ஆசிகளைப் பெற்று மகிழ்ச்சியோடு வாழப்போகின்றீர்களா? முடிவு உங்கள் கரங்களில்.

ஜோசப் அருள்சாமி.

## லைலதுல் கத்ரின் சிறப்புகள்

புனித ரமழான் மாதத்திலுள்ள ஓர் இரவுக்கு "லைலதுல் கத்ர்" எனக் கூறப்படுகிறது. அது மிகுந்த பரக்கத்துகளும் நன்மைகளும் பொருந்திய இரவாகும். "அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது" என அல்லாஹுு தஆலா தன் பரிசுத்த வேதத்தில் குறிப்பிட்டுள்ளான். ஆயிரம் மாதங்கள் என்பது எண்பத்து மூன்று ஆண்டுகளும் நான்கு மாதங்களும் ஆகும்.

இது உண்மையிலேயே அல்லாஹுு தஆலாவின் மாபெரிய பாக்கியமாகும். மதிப்பை உணர்ந்தவர்களுக்கு மகத்தானதொரு பாக்கியத்தை அவன் அருளியுள்ளான். எனவே நாமும் இந்த இரவில் அதிகமான அமல்களைச் செய்து அல்லாஹ்விடம் மகத்தான கூலியையும் அருளையும் பெறுவோமாக.

எம்.ஜே.எ.ஃப். நுஸ்லா, நிககொல்லை.

## கவிதைப் போட்டி இல.486

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### பரிசுக்குரிய கவிதை

### வாழ்த்துக்கள்!

போர் மலைகளை...!
தகர்த்தெறிந்து விட்டு!
ஓய்வெடுக்கும் சிற்றுளியே!
சமாதான தந்தைக்கு
சிலை வைக்கவா?
ஆணியுடன்!
ஆலோசனை நடாத்துகிறாய்?

ஹப்புத்தளையூர்,
மனோ கோபாலன்.

### மனிதனைத் தேடி

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு
ஒரு புனிதனின் இரத்தத்தை
ஒன்றாய் சுவைத்த நீங்கள்-இன்று
ஒரு மனிதன் கூட இல்லாமல்
மாண்டு போய் விட்டீர்களோ?

சி. இந்திரன், வவுனியா.

### மயான பூமி

அறைவதற்கு ஆணி உண்டு
சுத்தியலும் உண்டு
அறைபடுவதற்கு இயேசு இல்லை
சிலுவையும் இல்லை
ஏனெனில் எல்லோரும் யூதர்கள்,

பெ. விக்னேஸ்வரன், ஹட்டன்.

### சிற்றுளியும் சுத்தியலும்

சீண்டுவாரின்றிக் கிடப்பதேன்?
சமாதானச் சிலை ஒன்றை
அமைத்திட தயக்கமேன்
சிற்பிகளே கிளம்புங்கள்-உங்கள்
சிந்தனையைத் திறவுங்கள்!

ரி.ஜோர்ஜ், நுவரெலியா.

### வேண்டாத நியதி

அதிகாரச் சுத்தியல்களின்
அறுவடைகள் அழியும் வரை
குட்டக் குட்டக்
குழி(னி)ந்து போகும்
உளிகளுக்கு வாழ்வேது...?

லைலா அக்ஷியா அக்ரம்,
குருணாகல்.

### முயற்சி செய்

உடைந்துபோன சிலையைக்கூட
உருவெடுக்க முடியும் இவைகளைக்
கொண்டு- யுத்தத்தால் சிதைந்துபோன
இதயங்களைச் சீர்செய்ய மனிதா கண்டுபிடி
ஏதேனும் ஒரு புதிய கருவி.

இராமச்சந்திரன் தவேந்திரன், ஹாலி எல.

### ஒப்பற்ற ஆயுதம்

சிந்திச் சிதறிய ரத்தத் துளிகளில்
அற்புத(ன்) மான எழுத்துக்கள்
உறைந்து கிடந்தது
அடக்கு முறையாளர்கள்
உன் எழுத்துக்களை
உறைய வைத்தாலும்
உன் எழுது கருவி
தொடர்ந்தும் எழுதுகிறது.

டின்சின் டினேஷ்

### நட்பு

சிநேகிதியே
என் கல்லறையில்
உன் பெயரை
செதுக்கிக் கொள்கிறேன்
கடைசியிலும்
நீ வேண்டும்


சி. தர்ஷினி, மட்டக்குளி.

### மோதல்

உருவம் ஒன்று இங்கே
உருவாக வேண்டுமானால்...!
உளியே-நீ
முட்டியுடன் இப்போது
முட்டித்தான் ஆகவேண்டும்...!

சு.ரஜனி, பெயாவல் எஸ்டேட்.

## கவிதைப் போட்டி இல.489



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 14.12.2002

கவிதைப் போட்டி இல.489
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அன்றும் இன்றும்

முன்பு இதனை
செதுக்கப் பயன்படுத்தினோம்
இப்போது
உடைக்கப் பயன்படுத்துகின்றோம்.

முஹமட் மஜிஸ், மீராவோடை-4.

### தேடுதல்

கற் சுவர்களுக்குள்ளும்
சொந்தங்களின் சுவடுகள்
தேடி ஒரு பேச்சுவார்த்தை
அதன் தீர்மானத்தின் முடிவு
நாளை மக்களின்
விடிவாகுமா.....?

### உயிர் கொடுப்பேன்

சிற்பியே எங்கு சென்றாய்
சிற்றுளியும் சுத்தியலும் கொடுத்தேன்
செதுக்கி செப்பனிடு என்னவளை
உயிர்மட்டும் ஊட்டுகிறேன்
என்னிலிருந்து

சீனிராசு எடிசன், டாபர் வீதி.

# உங்கள் பக்கம்

## ஒரு சமூகத்தைப் பிளவுபடுத்தும் பிறை!

இந்தக் குட்டித்தீவில் வாழும் ஏறத்தாழ 10 இலட்சம் முஸ்லிம்களால் வருடத்தில் ஒரு நாளைப் பெருநாளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாட முடியாதளவுக்கு இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் கருத்து முரண்பாடுகளும் மதம் சார்பான மாற்றுக் கருத்துக்களும் இருந்து வருகின்றன.

நோன்பும், நோன்புப் பெருநாளும் பிறையை அடிப்படையாக வைத்துக் கடைப்பிடிக்கப்படுபவை என்பதே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து.

இதில் உள்நாட்டில் பிறை தங்கள் கண்களுக்குத் தென்பட வேண்டுமென்று ஒரு பிரிவினர் கூற, உலகின் ஏதாவது ஒரு இடத்தில் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டதாக அறிவிக்கப்பட்டால், அதனை அடிப்படையாகக் கொண்டு நோன்பு நோற்க வேண்டும், பெருநாள் கொண்டாட வேண்டும் என்று வேறொரு பிரிவினர் விவாதிக்கின்றனர்.

இந்த அடிப்படையிலேயே நோன்புப் பெருநாள் தொடர்பான முதலாவது முரண்பாடு தொடங்குகின்றது. இதில் யாருடைய வாதம் சரியானது எனத் தீர்ப்புக் கூற நாம் முனையவில்லை. ஆனால், இவ்விரண்டு கருத்துக்களையும் ஆராய்ந்து ஒருமித்த ஓர் முடிவை எடுக்க முடியாதிருக்கும் இஸ்லாமிய மார்க்கத் தலைவர்களை என்னவென்று வர்ணிப்பது?

ஜம்மியத்துள் உலமா என்ற அமைப்பு உலகெங்கிலும் பெருநாள் கொண்டாடப்படும் தினத்தில், மஃரிப் தொழுகையின் பின்னர் கொழும்பு பெரிய பள்ளி வாசலில் ஒன்று கூடி மறுநாளைப் பெருநாள் தினமாக அறிவிக்கும். போதாக்குறைக்கு நாட்டின் பல பாகங்களிலும் பிறை தென்பட்டதாக வேறு கூறிக்கொள்வார்கள்.

ஆனால், ஏற்கனவே பிறையைக் கண்டு விட்டோம். நாம் பெருநாளைக் கொண்டாடி விட்டோம் என்று நாட்டின் தெற்கு, மற்றும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளிலிருந்து அறியக் கிடைக்கும்.

வருடா வருடம் நடக்கும் வழமையான நிகழ்வுதான் இது. எப்போது இவர்கள் இலங்கையிலுள்ள அனைத்து முஸ்லிம்களும் ஒரே நாளில் பெருநாள் கொண்டாட வழி செய்வார்கள்?

முஹமட் அஸ்லம், ஏறாவூர்-3.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net


# வாசக[ர்] சாலை

**மதிப்புக்குரிய 'தினமுரசு' ஆசிரியர அவர்கட்கு!**

'இன்டர் நெட் காதல் கதைகள்! உண்மையிலேயே தேன்கனிகள்! வாசிக்க வாசிக்க இனிப்பாய் இருக்கின்றது. "இதுதான் காதலா?" என்பதையும், இதுவும் காதல்தான்! என்பதையும் நேர்த்தியாகச் சித்திரித்துக் காட்டுகிறது.

'கம்ப்யூட்டர்' வேகத்தில் கதையை வசீகரமாக வளமான வார்த்தை வித்தைகளோடு நகர்த்திச் செல்லும் விதம் பிரமாதம்! காதல் கதைகளை வித்தியாசமாக இப்படியும் எழுதலாம்; (புதியவர்களும்) எழுதப் பழகலாம். என்பதற்கு 'நெட்டிலிருந்து' தரும் இந்தப் புதிய அம்சம் நல்லதோர் உதாரணம்!

கோட்டைமுனை முத்துமணி, பதுளை.

**இனிய வாரமலர் தினமுரசே!**

உன் சேவைகள் அனைத்தும் வரவேற்கத் தக்கது. அதிலும் இளம் கவிஞர்களின் வளர்ச்சிக்குக் களம் அமைக்கும் தேன் கிண்ணம் மற்றும் சிறப்புக் கவிதை, சிறுகதை, கவிதைப் போட்டி மிகவும் சுபபர், சுப்பர். இன்னும் புதிய களம் அமைத்து வெளிவர வாழ்த்துக்கள்.

சி.இன்பராஜ், மீசாலை மேற்கு.

**தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,**

ஐயா, நாங்கள் வாங்கும் ஒரே பத்திரிகை தினமுரசுதான். அதன் அனைத்து விடயங்களும் தரமானவை. எம்மைக் கவர்ந்தவை. ஆனால், ஒரு பணிவான குறை. என்னவெனில் 4,5,10,11 ந் தரங்களுக்கான கல்விப் பகுதியும் ஒரு பக்கத்தில் சேர்க்காமை. எனவே "நாங்கள் வாங்கும் ஒரே யொரு பத்திரிகையாக இருப்பதால் இவ் வேண்டுகோளைக் கட்டாயம் கவனத்திற் கொள்ள வேண்டும்" எனப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். சப்னி சக்காப்.கப்பல்கம.

**கௌவர மதிப்புக்குரிய... தினமுரசு ஆசிரியர் அவர்கட்கு..**




கடந்த 478 ஆவது தினமுரசு வாரமலரில்...சவூதி அரேபியாவின் ஜித்தா தூதுவராலயத்தில் வேலை செய்கின்ற ஊழியர்களின் பொறுப்பற்ற செயலை...

தினமுரசு வாரமலரில் ஊடாக அனைத்து இலங்கை வாழ் மக்களையும் விழிப்புறச் செய்த சகோதரி ஆயிஷா பானுவையும்...

மற்றும் இச் சம்பவத்தை அடுத்து உடனடியாக வெளியுறவு அமைச்சு, தொழில் அமைச்சுகளுடன் தொடர்புகளைக் கொண்டு நடவடிக்கை எடுக்கக் கோரிய... மனித கௌரவத்திற்கான மன்றத்தின் செயலாளர்... செல்வி மகேஸ்வரி வேலாயுதத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு....

பத்திரிகைத்துறை எனும்போது உண்மை விடயங்களை மக்கள் பார்வைக்கும் சமூக இழிவுகள் நேரும் போது... அதை மக்கள் கவனத்திற்கும் கொண்டு வருவதே சிறந்த சேவையாகும். இதற்கு உரித்தான பத்திரிகை தினமுரசே ஆகும். இச் சந்தர்ப்பத்தில் தினமுரசுக்குக் கோடான கோடி நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மக்கள் இனிமேலும் தூங்கிவிடாமல் இப்படியான விடயங்களில் கவனம் செலுத்துவது இன்றியமையாதது.

"நெருப்பின்றிப் புகை வராது" என்பார்கள். ஒரு பெண் தன் பெயர் முகவரியோடு பத்திரிகைகளுக்குப் பொய்யை எடுத்துரைக்க மாட்டாள்.

இதையிட்டு ஜித்தாவின் தூதுவராலயத்தினூடாக மறுப்பறிக்கை விட்டமையை மக்களே புரிந்து கொள்வார்கள் என்பது திண்ணம்.

பாரிஸ் அகமட், சவுதி அரேபியா.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# ஜனாதிபதியின் கையில் சேரும் அதிகாரம்

## ஆட்சியைக் கைப்பற்ற எதிர்க்கட்சி தீவிரம்!

டிசம்பர் 5ஆம் திகதியுடன் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்கு வரும் நிலையில், ஆட்சி மாற்றம் ஒன்றிற்கான முயற்சிகள் திரைமறைவில் மீண்டும் தீவிரமடையத் தொடங்கியுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ.மு. பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தாமலே, அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடிய சூழ்நிலை உருவாகிவருவதாகக் கருதுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்குள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை பொ.ஐ.மு. தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நோக்கில், முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழுவுடன் உறவுகளை வளர்த்துக் கொள்வதில் முனைப்புக் காட்டி வருகிறது.

திங்களன்று, அமைச்சர் ஹக்கீமைக் கட்சித் தலைமையிலிருந்து நீக்கிவிட்டதாக அத்தாவுல்லா அறிவித்துச் சில மணி நேரங்களில் ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்தித்த அவர் ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு கேட்டிருக்கிறார்.

தான் இது குறித்துப் பரிசீலிப்பதாகத் தெரிவித்த திருமதி குமாரதுங்க பிரதமர் உடன்படாத போதும் தன்னால் அதனைச் செய்ய முடியுமெனக் கூறியுள்ளார். அத்தாவுல்லா தரப்பினரைத் தம்வசம் இழுக்கும் பொருட்டு பொ.ஐ.மு. முஸ்லிம்கள் தொடர்பில் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போதைய நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவு பொ.ஐ.மு.வுக்குக் கிடைத்தாலும் தமிழ்க் கட்சிகள் ஐ.தே.மு. அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் என்பதால், அரசாங்கம் உடனடியாக அதன் பெரும்பான்மைப் பலத்தை இழக்கும் வாய்ப்பில்லை.

எனினும், ஐ.தே.க.வுக்குள் இருக்கும் சிலர் பொ.ஐ.மு.வுடன் இணைவது குறித்து விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் தொடங்கிவிட்டதாகவும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியக்கிடைக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸில் அத்தாவுல்லா தரப்பிலும், ஹக்கீம் தரப்பிலும் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பது தெளிவில்லை என்றபோதிலும் ஜனாதிபதி குமாரதுங்கவின் கட்சிக்கு அரசாங்கத்தை அமைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், ஹக்கீம் தரப்பிலிருக்கும் எம்.பிக்களும், முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவுடன் இணையக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே ஜே.வி.பி.யின் ஆதரவை தம்பக்கம் கொண்டுள்ள நிலையில் ஆட்சி மாற்றத்துக்கு வாய்ப்பு உண்டு என்ற நம்பிக்கையைக் காட்டி இலங்கை தொழிலாளர் காங்கிரசையும் தம்பக்கம் மாற்றிக் கொள்ளலாம் என எதிர்க்கட்சி நம்புகிறது.

இதேவேளை பொ.ஐ.மு. உயர்மட்டக் குழுவொன்று இந்தியா சென்று அந்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்திருப்பதும், அரசியல் அரங்கில் மிகுந்த முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகிறது.

## புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவைக் கலைக்குமாறு கோருகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படைப் பிரிவை அவ்வியக்கம் கலைத்து விடவேண்டுமென்று அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கோரியிருக்கிறார்.

யுத்தம் ஓய்ந்து சமாதானம் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் தற்கொலைப் படைப்பிரிவைக் கலைத்துவிடுமாறு புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகுமென்று அவர் தெரிவித்திருக்கிறார்.

பயங்கரவாதத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டுமென அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் புலிகளை வலியுறுத்தியிருப்பதைச் சுட்டிக் காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியும், பொ.ஐ.மு.வும் ஆரம்பம் முதலே இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததாகவும் மேலும் தெரிவித்தார்.

## ஹக்கீமுக்கு இடைக்காலத் தடை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக செயற்படுவதற்கும் அக்கட்சியின் உறுப்பினராக தொடர்ந்து நீடிப்பதற்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு கொழும்பு மாவட்ட நீதி மன்றம் இடைக் கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அக் கட்சியின் அதி உயர் பீட உறுப்பினர்கள் 11 பேர் சார்பாக நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனு ஒன்றை ஆராய்ந்த மாவட்ட நீதி மன்றம் கட்சியின் தலைவராக ஹக்கீம் நீடிப்பதை தற்காலிகமாக தடை செய்துள்ளதோடு அத்தாவுல்லா குழுவினரால் தலைவராக அறிவிக்கப்பட்ட சுபைர்தீனின் நியமனத்தையும் நீதி மன்றம் ஏற்றுள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகளில் கட்சி தலைவர் என்ற வகையில் சுபைதீனின் ஆலோசனைகளையே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அத்தாவுல்லா தரப்பினர் அறிவித்துள்ளனர். ■

## முன்னாள் விமானப்படைத் தளபதியிடம் சி.ஐ.டி. விசாரணை

இலங்கை விமானப்படைக்கு ஹேக்கியுலிஸ் ரக விமானங்கள் இரண்டைக் கொள்வனவு செய்தது தொடர்பாக முன்னாள் விமானப் படைத் தளபதிகளிலொருவரான எயார் மார்சல் ஒலிவர் ரணசிங்கவிடம் கடந்த திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பல மணி நேரம் வாக்குமூலம் ஒன்றைப் பதிவுசெய்துள்ளனர்.

இந்த விமானக் கொள்வனவின் போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா எனக் கண்டறியப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவால் அமைக்கப்பட்ட 3 பேர் அடங்கிய குழு அதனறிக்கையில், இதன்போது சுமார் 125 கோடி ரூபா மோசடி இடம்பெற்றிருக்கலாம் எனக் கூறியிருந்தது.

இதனையடுத்து இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ■

## சமாதானப் பேச்சுக்களில் நெடுந்தீவு விவகாரம் ஒஸ்லோவிலிருந்து ஈ.பி.டி.பி.யுடன் தொடர்பு

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்று வரும் 3 வது கட்ட சமாதானப் பேச்சுக்களின் போது, யாழ்.குடாநாட்டின் நெடுந்தீவுப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கருத்தை அறிவதற்காக ஒஸ்லோவிலிருந்து கொழும்பிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன்போது, நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாக ஆலோசனை ஒன்று ஒஸ்லோவிலிருந்து முன்வைக்கப்பட்டது.

எனினும், தீவுப் பகுதியில் ஜனநாயக ரீதியிலான அரசியலில் ஈடுபடத் தங்களுக்கு இருக்கும் உரிமையை விளக்கிக் கூறிய ஈ.பி.டி.பி. தலைமை, மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்படுத்தாத வகையில் சகல தரப்பினருக்கும் அமைதியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுக்கு இருக்கும் உரிமையை மீண்டும் வலியுறுத்திக் கூறியிருக்கிறது. ●

## வாழ்த்துக்கள்

வாசகர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
நோன்புப் பெருநாள்
நல் வாழ்த்துக்கள்.

## தொழிற்சங்க நடவடிக்கையினால் நோயாளிகளுக்குப் பெரும் அவதி!

ஒரு வார காலமாகத் தொடரும் மருத்துவத்துறை சார் தொழிற்சங்கங்கள் சிலவற்றின் வேலைநிறுத்தப் போராட்டத்தினால், நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் பெருமளவில் ஸ்தம்பிதமடைந்துள்ளது.

5 தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ளன. எக்ஸ் கதிர் இயக்குனர்கள், ஸ்கான் இயந்திர இயக்குனர்கள் உள்ளிட்ட மருத்துவத் துறையின் முக்கியமான பல பிரிவுகள் செயலிழந்துள்ளதனால், அவசர நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

இதன் காரணமாக, அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளில் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

மருத்துவ மனைகளில் பரிசோதனைக் கூடங்கள் ஒரு வார காலமாக எவ்வித பணிகளையும் மேற்கொள்ளாமல் மூடப்பட்டுள்ளன. ■

## ஓட்டமாவடியில் இராணுவ புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் சுட்டுக் கொலை!

ஓட்டமாவடி காவத்தமுனைப் பகுதியில் வைத்து திங்கட்கிழமை இரவு இராணுவ உளவுப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் புலிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

எம். அஸீஸ் என்ற இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரி இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

அவருடன் இருந்த எச்.அமீன் என்ற பொதுமகன் கடும் காயங்களுக்குள்ளாகி மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, காவத்தமுனைப் பகுதியில் உள்ள சில முஸ்லிம் இளைஞர்கள் புலிகள் இயக்கத்துடன் கடந்த சில நாட்களாக நெருக்கமாகச் செயற்பட்டு வந்தனர்.

இவர்களுக்குப் புலிகளால் கிரனைட்டுக்கள் சிலவும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இந்த முஸ்லிம் இளைஞர்கள், கொல்லப்பட்ட அஸீஸ் என்பவரது வீட்டுக்குச் சென்று, அவரது மோட்டார் சைக்கிளைத் தருமாறு மிரட்டியுள்ளனர். அதை அவர் மறுத்துள்ளதோடு அது தொடர்பாகத் தான் பணியாற்றும் படைப்பிரிவிலும் முறைப்பாடு செய்துள்ளார்.

திங்களன்று, இரவு 9.30 அளவில், காவத்தமுனைக்குச் சென்று பொருட்கள் சிலவற்றை வாங்கி வரும்போது இடையில் வழிமறித்த புலி உறுப்பினர்கள் சிலர் இவரது மோட்டார் சைக்கிளைக் கேட்டுள்ளனர்.

தர முடியாது எனக் கூறியதும் அருகில் பட்டாசு கொழுத்திப் போட்டுவிட்டு அந்தச் சத்தத்திற்கு மத்தியில் இவரது தலையில் பிஸ்டலால் சுட்டுள்ளனர். இவர் அதே இடத்தில் உயிரிழந்தார். மற்றவர், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் முஸ்லிம்களின் புனித நாள்களில் ஒன்றான ரமழான் மாதத்தின் 27ஆம் நாள் இரவன்று இடம்பெற்றதால், விழித்திருந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

உடனடியாக அப் பிரதேசத்தில் படையினர் கொண்டுவந்து குவிக்கப்பட்டதுடன், மேலதிகப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ■

## பொ.ஐ.மு. உயர்மட்டக் குழு இந்தியத் தலைவர்களுடன் சந்திப்பு

பொ.ஐ.முன்னணியின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் உள்ளிட்ட இந்தியத் தலைவர்களைச் சந்தித்து, இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹா, உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி, எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு வெளியுறவுத்துறை சிரேஷ்ட அதிகாரிகள் பலரையும் சந்தித்துப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தூதுக்குழு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது.

இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் விமான நிலையத்தில் வைத்துத் தங்களது இந்திய விஜயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா தனிநாடொன்று உருவாவதற்கான அடித்தளம் இடப்பட்டுவருவது குறித்த தங்களது கவலையை இந்தியாவுக்கு விளக்கவிருப்பதாகக் கூறினார்.

பொ.ஐ.மு. குழுவில் கலாநிதி சரத் அமுனுகம, மங்கள சமரவீர ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

## புலிகளின் நீதிமன்றங்களுக்கு ஒஸ்லோவில் அரச பிரதிநிதிகள் ஆட்சேபம்

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நடைபெற்று வரும் 3 வது கட்ட சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்ட அரச தரப்புப் பிரதிநிதிகள், புலிகள் இயக்கத்தின் பொலிஸ் மற்றும் நீதிமன்றங்கள் குறித்துத் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாத்திரமன்றி கட்டுப்பாட்டி லில்லாத பகுதிகளில் கூட பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதால், சமாதான முயற்சிகள் பாதிக்கப்படக்கூடும் என்று அரசாங்கத் தரப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இந்தப் பேச்சுவார்த்தையின்போது யாழ்.குடாநாட்டின் நெடுந்தீவுப் பகுதியில் இருந்து ஈ.பி.டி.பி.யினரை வெளியேறுமாறு புலிகள் தூண்டிவருவது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. எம்.பி.க்கள் உட்பட அனைத்து யாழ் மாவட்ட எம்.பிக்களையும் அழைத்து மாநாடு கூட்டி, தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு அரச தரப்புக் குழு உறுதியளித்ததாகப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார். ■

# முரசம்

## அரசியல் தீர்வையிட்டு பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும்

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

சமாதானப் பேச்சுவார்த்தையின் மூன்றாம் சுற்று, ஒஸ்லோவில் ஆரம்பமாகியுள்ளது. பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே நாட்டின் தலைநகரில் இம்முறை இப் பேச்சுவார்த்தைகள் நிகழ்வது பேச்சுவார்த்தைகளில் இணக்கத் தீர்வுகளை எட்டுவதற்கு உடந்தையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இப் பேச்சுவார்த்தை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சமாதான ஒத்துழைப்பு மாநாட்டைத் தொடர்ந்து நடைபெறுகிறது. அம் மாநாடும் கடந்த மாதம் 25ம் திகதி ஒஸ்லோவிலேதான் நிகழ்ந்தது. இம் மாநாட்டில் சர்வதேச நாடுகள் கொண்டிருந்த அபிப்பிராயங்களையும் எதிர்பார்ப்புகளையும் இரு தரப்புமே நேரடியாக உணரக் கூடியதாக இருந்திருக்கும். சமாதானப் பாதையிலிருந்து எத் தரப்பும் விலகிச் செல்லக் கூடாதென்பதும், ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத் தீர்வொன்றைக் காண வேண்டுமென்பதும் உலக நாடுகளின் ஒருமித்த அபிப்பிராயமாக அங்கு விளங்கியது. இச் சமாதான முயற்சிகளுக்குத் தமது ஆதரவினையும் தெரிவித்துப் பொது அறிக்கையொன்றையும் அவை விடுத்திருந்தன. ஆயினும், அவை வலியுறுத்திய சமாதானத் தீர்வுக்குரிய அடிப்படை விடயங்கள் பற்றி ஆராய்வதில் இரு தரப்புமே மிகுந்த தயக்கம் காட்டுகின்றன. இம்முறை நிகழும் பேச்சுக்களில் உதவி வழங்கும் நாடுகள் உத்தரவாதமளித்த 70 மில்லியன் டொலர்கள் வரையிலான நிதியுதவியை எவற்றுக்கு, யார் யார், எவ்வாறு செலவழிப்பது என்பது குறித்து ஆராயவே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் தற்போது உலக ஆதரவுடன் ஏற்பட்டுள்ள சாதகமான சூழலில், அரசியல் தீர்வு குறித்த விடயங்களை ஆராய்வதற்குத் தாமதம் செய்யலாகாது. புலிகளின் தலைவர் பிரபாகரனும், முதன்முறையாக உள்ளக சுயாட்சித் தீர்வொன்றை ஆராயத் தாம் தயாரெனத் தனது மாவீரர் தின உரையில் தெரிவித்திருக்கிறார். இந் நிலையில் புலிகள் எதிர்பார்க்கும் உள்ளக சுயாட்சியின் வடிவம் எத்தகையதாக இருக்குமென்ற கேள்வி யாவருக்கும் இயல்பாகவே எழுகிறது. இதையே இரு தரப்பும் சந்திக்கும் போது அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்கு ஆரம்பப் பொருளாக எடுத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதேவேளை தெற்கில் சமாதானப் பேச்சுக்கள் குறித்திருந்த நம்பிக்கைகளில் சந்கேங்கள் சிறிது சிறிதாகத் தோன்ற ஆரம்பிக்கின்றன. புலிகள் பொலிஸ் நிலையங்கள், நீதி மன்றங்கள் ஆகியவற்றைக் கிழக்கிலும் விஸ்தரித்த நிலையில் இவ்வாறான சந்தேகங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. அரசாங்கத்தாலும் இத்தகைய அச்சங்களுக்குத் தகுந்த சமாதானம் கூற முடியாதிருக்கிறது. இதற்கு மத்தியில் ஜனாதிபதியும், அவர் சார்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணியும் இப் போக்குகள் தொடப்பாக அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதுடன் இந்தியாவிடமும் தமது முறைப்பாடுகளை எடுத்துச் செல்ல முனைந்துள்ளனர். ஜனாதிபதியின் கரங்களில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இம்மாதம் 5ம் திகதியுடன் சேர்கிறது. எனவே, சமாதானத் திசைவழி தடம்மாறாதிருப்பதை உறுதிப்படுத்துவது இப்போது அவசியமாகியுள்ளது. அதற்கு அரசியல் தீர்வு பற்றிய பேச்சுக்களை இத் தருணத்தில் ஆரம்பிப்பதும் அதில் அனைத்துத் தரப்புகளையும் ஈடுபடுத்துவதுமே உகந்த வழி!

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பிரபா கேட்பது சுயாட்சியா....?

நரன்

இம்முறை பேச்சுவார்த்தைகளில் அமரும் இரு தரப்பினரும் புதிய பல முக்கியமான செய்திகளுடன் பேச்சுக்களை நடத்துகின்றனர்.

அத்துடன் புதியதொரு சூழ்நிலையையும் அவர்கள் எதிர்நோக்குகிறார்கள்.

இவை அவர்களுக்கு, எதிர்பார்ப்புக்களை மட்டுமன்றி சவால்களையும் முன்னிறுத்தியுள்ளன.

இதில் எடுத்து நோக்கப்பட வேண்டிய முக்கியமான ஒரு விடயம்தான் புலிகள் தலைவர் பிரபாகரனுடைய மாவீரர்தின உரை.

அதேவேளை ஒஸ்லோவில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நிகழ்ந்தேறிய சமாதான ஒத்துழைப்பு உதவி வழங்கும் மாநாட்டின் பெறுபேறுகளும் அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் இதில் தாக்கம் செலுத்துபவையாக உள்ள மற்றொரு விடயமாகும்.

இங்கு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், சமாதானத் திட்டத்தின் குறிப்பிட்ட சில செயற்திட்டங்களுக்கு உடனடி நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

அதேவேளை, இச் சமாதான முயற்சியிலிருந்து இரு தரப்பும் விலகக்கூடாது என்றவகையில் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே தீர்வுகாணப்பட வேண்டும் என வலியுறுத்தும் வகையிலும் அவை தமது கூட்டறிக்கையை விடுத்துள்ளன.

இதில் பிரதானமான விடயமாக, இன்று உலகின் ஒரே வல்லரசாகத் திகழும் அமெரிக்காவின் கருத்து எடுத்து நோக்கப்பட வேண்டியதாகியுள்ளது.

புலிகள் பயங்கரவாதத்தையும், வன்முறையையும் கைவிடுவதாகவும் தனிநாட்டுக்கான பிரிவினையைத் துறப்பதாகவும் பகிரங்கமாக அறிவிக்கும்படி கூறியதுடன், இலங்கை முழுவதற்குமான இறைமையுள்ள அரசாகக் கொழும்பு அரசாங்கத்தை ஏற்கும்படியும், அறிவுறுத்தியுள்ளது அமெரிக்கா.

இதேவேளை, தெற்கிலும் புதிய நிலைவரங்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

குறிப்பாக, புதிய அரசாங்கம் பதவியேற்று ஒரு வருட காலம் இம் மாதம் 5ஆம் திகதியுடன் முடிவடைவதால், பாராளுமன்றத்தைக் கலைக்கக் கூடிய அதிகாரம் ஜனாதிபதியின் கரங்களுக்கு வந்து சேர்கிறது.

ஜனாதிபதிக்கு எதிரான 19 வது திருத்தச் சட்டத்தின் தோல்வியை அடுத்தும் ஜனாதிபதியின் கரங்களில் பாராளுமன்றம் தங்கியுள்ள அதிகாரம் சேர்வதையடுத்தும் தெற்கில் எதிர்க் கட்சிகளின் உற்சாகம் அதிகரித்துள்ளது.

புலிகள் நீதிமன்றங்களையும், பொலிஸ் நிலையங்களையும் விஸ்தரிக்க ஆரம்பித்துள்ள நிலைமை, எதிர்த் தரப்பினருக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது.

நடைபெறும் சமாதான முயற்சிகளின் போக்கில் விளைந்துள்ள அதிருப்திகளை இவர்கள் இப்போது ஓங்கி, ஒலிக்க விளைந்துள்ளதுடன் இந்தியாவிற்கும் முறைப்பாடுகளை நேரடியாக எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த ஒஸ்லோ சமாதான ஒத்துழைப்பு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ள மறுத்ததும், அதன் ஆரம்ப விழாவுக்குக் கூடச் சம்பிரதாயபூர்வமாக கீழ்மட்ட தூதரக அதிகாரிகளை அனுப்பியிருந்ததும், இங்கு ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய மற்றொரு விடயமாகும்.

இவற்றுக்கு மத்தியில் இச்சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கெடுக்கும் மற்றொரு கட்சியான முஸ்லிம் காங்கிரஸின் நிலைமையும், பாரிய குழப்பத்துக்குள்ளாகிக் கட்சி பிளவுபடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், ஒருபுறம் கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம்களின் அச்சங்களைப் பேச்சுவார்த்தையின் போது அதில் கலந்துகொள்ளவிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீமால் எதிரொலிக்க முடியாதபடி அவர் அவசரமாக ஒஸ்லோவிலிருந்து இலங்கை திரும்ப நேர்ந்துள்ளது.

மறுபுறம் புதிய அரசாங்கத்தில் கூட்டுச் சேர்ந்துள்ள முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள இப் பிளவு அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை பாதிக்கும் நிலை தோன்றியுள்ளது.

இதற்கு மத்தியில்தான் புலிகள் தலைவர் பிரபாகரனின் இவ் வருட மாவீரர்தின உரை விடுத்துள்ள செய்திகளும் எடுத்தாராயப்பட வேண்டியுள்ளது.

பிரபாகரனின் உரையில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கும் விடயம் அவர் பிரயோகித்த "உள்ளக சுயநிர்ணயம்" என்ற பதந்தான்.

"உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டு அடிப்படையில் எமது தாயக நிலத்தில் எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால் நாம் அத் திட்டத்தை சாதகமாகப் பரிசீலனை செய்வோம். சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால், நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை." என்று அவர் அவ்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவ் விடயமே இதில் உண்மையில் என்ன அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது என்று பலதரப்பினரையும் புருவங்களை உயர்த்த வைத்துள்ளது.

பிரபாகரன் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டார் என்று சிலரும், அவ்வாறில்லை பிரிவினையையே வலியுறுத்துகிறார் என்று சிலரும் வெவ்வேறு வியாக்கியானங்களுடன் இதற்கு அர்த்தம் கொடுக்கிறார்கள்.

இங்கு நாம் இதற்குச் சரியான விடைகாண வேண்டுமானால், இரு பிரதான கேள்விகளுக்கான விடைகளை இங்கு தேடிப் பார்க்க வேண்டும்.

அவரது உரையில், தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுவதாகத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறாரா? இல்லை. அவரது உரையின் கடைசி வரியிலும் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற அதே சுலோகத்தை இம் முறையும் அவர் கூறியிருக்கிறார்.

அவரது உரையாற்றப்பட்ட பின்புலத்தில் வைக்கப்பட்ட சின்னத்தில் தமிழீழ வரைபடமே அமைந்திருந்தது.

அவரது உரையில், உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டுச் சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால், தாம் பிரிந்து சென்று தனி அரசு அமைப்போம் என்று வலியுறுத்தியிருப்பது, தனி அரசு அமைக்கும் கருத்தை அவர் கைவிடவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஆனால் இங்கு, பிரபாகரன் தனியரசு அமைக்கும் எண்ணத்தைக் கைவிடமாட்டார் என்று இதில் உறுதிபடக் கூறியிருக்கிறாரா? என்று இங்கு இன்னொரு கேள்வியை எழுப்பினால் அதற்கும் இல்லையென்பதே பதிலாகிறது.

உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையில், பூரண சுயாட்சி அதிகாரத்துடன், ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால், அதைத் தாம் சாதகமாகப் பரிசீலிப்போம் எனத் தெரிவித்திருப்பதானது, பிரிவினையைக் கைவிடவும் தயாராக இருக்கிறார் என்பதைக் கூறுவதாக இருக்கிறது.

எனவே, ஒரே உரையில் பிரிவினையைக் கைவிடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டே, பிரிவினையைக் கைவிடத் தயார் என்பதையும் தெரிவித்துள்ளார் என்பதே உண்மை.

இதுவே அவர் எதைத் தெரிவிக்கிறார் என்ற மயக்கத்தை பல்வேறுபட்ட தரப்பினர்களுக்கும் எழுப்பியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வுரையையிட்டுக் கூறிய கருத்தில், பிரபாகரன் தனி அரசுக் கோரிக்கையிலிருந்து இறங்கி வந்துள்ளார், அது நல்ல விடயம் என வரவேற்றுள்ளார்.

ஆனாலும் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் "அவருக்கு விடயம் என்ன? நாம் எதைக் கேட்கிறோம்? என்பது விளங்கவில்லை, நாம் ஒரு பரிபூரண சுயாட்சி ஒன்றையே குறிப்பிட்டுள்ளோம்" என்று புலிகள் தலைவரின் மாவீரர் தின உரையையிட்டு இலண்டனில் அளித்த விளக்க உரையில் தெரிவித்துள்ளார்.

அதாவது, புலிகளின் தலைவர் கூறுவதற்கும், அரசாங்கம் கருதுவதற்கும் இடையில் ஒரு பாரிய இடைவெளி உள்ளது என்பதையே இக்கூற்று எடுத்துக் காட்டுகிறது.

அதாவது பூரண சுயாட்சி என்பது என்ன? உள்ளக சுயநிர்ணயம் என்பது என்ன? என்பது இங்கே முளைவிடும் கேள்விகளாகும்.

உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதற்கு பாலசிங்கம் விளக்கமளித்துள்ளார்.

எனினும், சுயநிர்ணய உரிமையென்பது ஒரு நாட்டுக்குள்ளும் அமையலாம், அல்லது அந் நாட்டிலிருந்து பிரிந்து போவதாகவும் அமையலாம்.

இதில் நாட்டுக்குள் அமையக் கூடிய சுயநிர்ணய உரிமையைத்தான் பாலசிங்கம் உள்ளக சுயநிர்ணய உரிமையென்று அழைக்கிறார். இது ஒரு கோட்பாட்டு விடயம்.

ஆனால், அந்த உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைய வேண்டுமெனப் புலிகள் எதிர்பார்க்கும் பூரண சுயாட்சி என்பது எவ்வாறானது என்று இங்கு புலிகள் தலைவரோ அல்லது பாலசிங்கமோ எதையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், பாலசிங்கத்தின் உரையில் தாம் முன்னர் மாற்றுத் திட்டம் எதையும் முன்வைக்காது, தமிழீழத்துக்கான மாற்றுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்று கூறி வந்ததாகவும், ஆனால் இம்முறை தாமே பூரண சுயாட்சி என்ற அம் மாற்றுத் திட்டத்தை முன்மொழிந்துள்ளதாகவும் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும், இப்பூரண சுயாட்சி என்பது நடைமுறை அர்த்தத்தில் என்ன என்பதை அவர்கள் தெளிவாக்கவில்லை.

சுயாட்சி என்ற பதம் தமிழர் அரசியலில் செல்வநாயகம் காலம் தொடக்கமே பிரஸ்தாபிக்கப்பட்டு வந்துள்ளது.

தமிழர் செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சி தன்னை ஆங்கிலத்தில் சுயாட்சி கட்சி என்றே வெளிப்படுத்தியிருந்தது.

செல்வநாயகம் கோரிய சுயாட்சிக்கும் இன்று புலிகள் எதிர்பார்க்கும் சுயாட்சிக்கும் எத்தகைய மாறுபாடுகள் உள்ளன என்பதைப் பாலசிங்கமோ பிரபாகரனோ எடுத்துக் கூறவில்லை.

ஆக, செல்வநாயகம் சுயாட்சிக் கோரிக்கை கோரியபோது அவரிடம் அகிம்சை வழிமுறை மட்டுமே இருந்தது எனவும், அச் சுயாட்சி மறுக்கப்பட்டால் அடுத்து என்ன என்பதை முன்வைக்க முடியாத நிலையில் அவர் இருந்தார் எனவும், ஆனால் புலிகளோ சுயாட்சி மறுக்கப்பட்டால், பிரிந்து சென்று தமிழீழத்தை நிறுவக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்றும் இதுவே இருவருக்குமுள்ள வித்தியாசம் எனவும், பாலசிங்கம் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

உலகில் பல நாடுகளிலும், சுயாட்சி அரசியல் முறை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், ஒவ்வொன்றும் அந் நாடுகளுக்கு ஏற்ப வேறுபட்டதாகவே அமைந்துள்ளது.

சுயாட்சி என்பது இதுதான் என்று எந்தவொரு அரசியல் வரைபும் உலகில் இல்லை.

எமது அண்டை நாடான இந்தியாவும், ஒரு வகைச் சுயாட்சி முறையைக் கொண்டுள்ளது.

இலங்கையின் அரசியல் யாப்போ ஒற்றையாட்சி முறையில் அமைந்தது.

ஆயினும், கடந்த அரசாங்க காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்த அரசியல் யாப்பு ஆலோசனைகளில், 1995 இன் ஆரம்ப வடிவத்தில் சுயாட்சி முறை முன்மொழியப்பட்டது.

பின்னர் அமைச்சர் பீரிஸினால் திருத்தத்துக்குள்ளாக்கப்பட்ட, 1997 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் யாப்பு ஆலோசனைகளில் இலங்கை ஒற்றையாட்சி முறையை ஒழிப்பதற்குச் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

இவ்விரண்டையும் எதிர்த்து நிராகரித்தது அன்றைய எதிர்க்கட்சியான, இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமல்ல புலிகளும் கூடவேதான்.

இதன் மூலம் புலிகள் தமக்கு எத்தகைய சுயாட்சி தேவையென்று கூறாவிட்டாலும், எத்தகையவற்றை ஏற்க முடியாது என முன்னமே வெளிப்படுத்தியிருந்தார்கள்.

அவை மாகாண சபை முதல், பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியலமைப்பு ஆலோசனைகள் வரை அடங்கும்.

எனவே, புலிகள் ஏற்கக் கூடிய பூரண சுயாட்சி என்பது இவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு மட்டத்திலேயே சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

அதனால்தான் பிரபாகரன் விடுத்த சுயாட்சி மாற்றுத் திட்டத்தை ரணில் வரவேற்றுள்ளதை குறித்து பாலசிங்கம் "அவருக்கு விசயம் விளங்கவில்லை" என்று சற்று நையாண்டித்தனமாகக் கூறியிருந்தார்.

ரணிலால், பலயீனமான பாராளுமன்றத்தை வைத்துக் கொண்டு, 19 வது திருத்தச் சட்டத்தையே நிறைவேற்ற முடியாத நிலையில் தாம் கூறும் "பூரண சுயாட்சியை எப்படித் தர முடியும்" என்ற உட்கிடை நையாண்டியில் தொனிக்கவே செய்கிறது.

பாலசிங்கம் இதை எப்படிப் பார்த்தாலும் ஒற்றையாட்சி முறையில் இருந்து விலக அரசாங்கமும் ஐ.தே.க.வும் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டாற்தான் அரசியற் பேச்சுவார்த்தை அரங்கில் கால்வைக்க முடியும் என்பது யதார்த்தம்.

பொ.ஐ.மு.வின் சமஷ்டித் தீர்வை எதிர்த்தவர்கள் இதற்குத் துணிவார்களா? துணிந்துதான் ஆக வேண்டும்.

# மற்றொரு பிளவை நோக்கி முஸ்லிம் காங்கிரஸ்

கடைசியில் அது நடந்தே விட்டது.

முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிளவுறும் என்ற ஆருடம் ஐ.தே.மு. அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு சில நாட்க்ளிலேயே வெளிப்படத் தொடங்கிவிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின்னர், ஏற்பட்ட திடீர் மாற்றங்களால் கட்சிக்குள் நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்த முரண்பாடுகள் உச்சக்கட்டத்தை அடைந்து, இனி மேல் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையின் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒன்றுபட்டுச் செயற்பட மாட்டாது என்ற நிலை வந்துவிட்டது.

மூன்றாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைக்காக, ரவூப் ஹக்கீம் நோர்வே தலைநகரான ஒஸ்லோ சென்றிருந்த சமயம் கொழும்பில் கட்சியின் அதிஉயர் பீடத்தைக் கூட்டி ஹக்கீமைப் பதவியிலிருந்து விலக்கச் சதி செய்ததனால் அமைச்சர் அத்தாவுல்லா, கட்சியின் செயலாளர் டாக்டர் ஹப்ரத் ஆகிய இருவரும் முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்தப்படுவதாக ரவூப் ஹக்கீம் ஒஸ்லோவிலிருந்து விடுத்த அறிக்கையொன்றை அடுத்தே அத்தாவுல்லா தரப்பினருக்கும் ஹக்கீமிற்கும் இடையிலான பகிரங்க மோதல் முழு அளவில் அம்பலத்துக்கு வந்தது.

மறுநாள் செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டிய அத்தாவுல்லா தலைமையிலான குழுவினர், சுபைர் தீன் என்ற அதிகம் அறியப்படாத ஒருவரைத் தலைவராகத் தாங்கள் நியமித்துக் கொண்டதாக அறிவித்ததுடன், முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பொறுப்பிலிருந்த ஹக்கீம் நீக்கப்பட்டதாகவும் அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டனர்.

கட்சியின் அதி உயர் பீடத்தின் 11 பேரின் அங்கீகாரத்துடன் ரவூப் ஹக்கீம் பதவி விலக்கப்பட்டிருப்பதால், அவரது பதவி நீக்கம் சட்டரீதியில் செல்லுபடியாகும் என்று அத்தாவுல்லா கூறுகிறார்.

இது தொடர்பாக அவர் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்திருக்கிறார். மறுபுறம் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ஹக்கீமினால் அத்தாவுல்லாவும், ஹப்ரத்தும் பதவி விலக்கப்பட்ட விவகாரமும் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பாலும், இந்த விசயம் அடுத்து வரும் ஓரிரு நாட்களில் நீதிமன்றம் வரை சென்று, நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்பே இறுதியான முடிவைத் தரக் கூடியது.

ரவூப் ஹக்கீமை பதவியிலிருந்து நீக்கியிருப்பதாகக் கூறும் அத்தாவுல்லா குழுவினர், ஹக்கீம் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர்.

ஒன்று இரண்டல்ல, 36 குற்றங்களை அவர் புரிந்திருப்பதாக அத்தாவுல்லாவின் குற்றப் பத்திரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

1. 7.11.2002ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் அதிஉயர் பீடக் கூட்டத்தின்போது "பிரதமரையோ, அரசையோ நம்பத்தேவையில்லை. தனி அலகை அவர் தரமாட்டார். அவரால் தரமுடியாது" என்றும் "என்னையும், பிரபாகரனையும் நம்புங்கள்" என்று யதார்த்தத்திற்கு முரணான உயர்பீட உறுப்பினர்களை வலியுறுத்தியமை இதன் மூலம் நாட்டின் இறைமை பாதிக்கப்படும் விதத்தில் கருத்து வெளியிட்டமை.

2. அதே உயர் பீடக் கூட்டத்தில் "என்னிடம் அதிகாரம் இருக்கிறது. நான் நினைத்ததையே செய்வேன். பாராளுமன்ற உறுப்பினர்களையோ அமைப்பாளர்களையோ கலக்க வேண்டிய அவசியமில்லை" என்று சர்வாதிகாரியாகக் கூறி நமது கட்சியின் குறிக்கோளுக்கு மாற்றமாக நடந்தமை.

3. புலிகள் இயக்கத்தின் கிழக்கு காரியாலாயமான கொக்கட்டிச் சோலைக்கு நமது பாராளுமன்ற உறுப்பினர் எவரும் செல்லத் தேவையில்லை என வட கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஆலோசனை கூறியிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் அவர்களை அதியுயர் பீடத்தையும் கலக்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்து கொக்கட்டிச்சோலைக்கு அனுப்பியமை.

4. வடகிழக்கு முஸ்லிம்களுக்கெதிராகவும் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படும் வகையிலும் நடந்து கொண்டிருக்கும் செயற்பாடுகள் எமக்குப் பீதியை ஏற்படுத்துகின்றன. இதே சமயம் அண்மைக் காலமாக ஜனாப் ரவூப் ஹக்கீம் அவர்களுடைய கருத்துக்களும் செயற்பாடுகளும் இவைகளுக்கு ஏதுவாக இருந்து வருவதனால் நாட்டின் இறைமையினை மீறிய குற்றச்சாட்டும் பழிச்சொல்லும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அதனுடைய உயர்பீடத்துக்கும் ஏற்படுத்தப்படுவதற்கு அவர் காரணமாக இருந்தமை.

5. தலைவரின் நடவடிக்கைகளில் அதிருப்தி கொண்டு அக் குறைபாடு முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளைத் தோற்கடிக்கக் கூடாது என்பதற்காக வடகிழக்கு மக்களின் எதிர்பார்ப்புகளை முன்வைத்து அப் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை அதனுடைய யதார்த்தத்தினை உயர்பீடத்திற்குச் சரியாக விளக்காமல் பிழையாக வழி நடத்தியமை.

6. வடக்கு கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படுமானால் அங்கு முஸ்லிம்ளுக்கு ஒரு அதிகார அலகு வேண்டும் என்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு பிரதமர் அவர்களிடம் உத்தரவாதமொன்றினைப் பெறுவதற்கு முன்பு பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு முஸ்லிம் சமுதாயத்தின் அபிலாஷைகளுக்கு மாற்றமாகத் தொழிற்பட்டமை.

7. வடகிழக்கு முழு முஸ்லிம் மக்களையும் திருப்திப்படுத்தக்கூடியதான ஒரு அதிகார அலகினைப் பெறும் நோக்கில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கையைக் கொச்சைப்படுத்தும் முயற்சியில் "அம்பாறைக்கு மாத்திரம் தனியலகு கொடுத்தால் மட்டக்களப்பு, திருமலை முஸ்லிம்களை என்னால் கைவிட முடியாது" என்று பிழையான கருத்தினை மக்களின் மத்தியில் வெளியிட்டு அம்பாறை மக்களோடு ஏனைய இரு மாவட்ட மக்களையும் மூட்டிவிட முயற்சித்தமை.

இவை அத்தாவுல்லா தரப்பினர் ரவூப் ஹக்கீம் மீது சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டுக்களில் ஒரு சில. இவற்றுக்கு 14 நாட்களுக்குள் பதிலளிக்குமாறு ஹக்கீம் கேட்கப்பட்டிருக்கிறார்.

ஒரு கட்சியாக இருந்தபோதிலும் இரு வேறு பிரிவுகளாகச் செயற்பட்ட முஸ்லிம் காங்கிரஸில் யாருடைய பக்கத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று இதுவரையில் உறுதியாக எதுவும் தெரியவில்லை.

உண்மையில், அமைச்சர் நூர்தீன் மசூர் மற்றும் செயலாளர் டொக்டர் ஹப்ரத் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழுவை விடவும் ஹக்கீமிற்கு நெருக்கமாகச் செயற்பட்டவர்கள். கிழக்கு மாகாணத்தைச் சாராத ஹப்ரத் ரவூப் ஹக்கீமுக்கு மிகவும் விசுவாசமாக இருந்தவர். இதனடிப்படையிலேயே அவர் கட்சியின் செயலாளராக நியமிக்கப்பட்டதுடன் தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. பதவியும் வழங்கப்பட்டது.

இப்போது அவரும் மறுபக்கத்தில் இருக்கிறார். கடந்த வாரம் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு, ரவூப் ஹக்கீம் சகிதம் ஒஸ்லோ சென்றவர் அமைச்சர் நூர்தீன் மசூர்.



அத்தாவுல்லா, சுபைர் தீன், டாக்டர் ஹஃப்ரத், நூர்தீன் மசூர்

இவர்களுக்கிடையிலான உறவு ஏன் இப்படி இத்தனை சுலபத்தில் முறிந்துபோனது என்று தாருஸ்சலாமில் உள்ளவர்களே முடியைப் பிய்த்துக் கொள்கிறார்கள்.

அமைச்சர் ஹக்கீமின் தன்னிச்சையான போக்குக் கடந்த சிலகாலமாகவே கட்சிக்குள் கடும் கண்டனத்திற்கு உள்ளாகிவந்த அதேவேளை, ஐ.தே.க.அரசாங்கத்தின் மீது அவர் காட்டிய அதீத விசுவாசம் முஸ்லிம் சமூகத்தைப் புறக்கணித்து ஐ.தே.கட்சியின் கையாளாக மாறிவிட்டாரோ என்ற சிந்தனையைத் தோற்றுவிக்குமளவு தீவிரம் பெற்றிருந்தது.

இதன் காரணமாக பிரதேச அடிப்படையில் உறுப்பினர்களை ஒன்று திரட்டவும், கிழக்கு மாகாண மக்கள் மத்தியில், ஹக்கீமின் செல்வாக்கை குறைக்கவும், அத்தாவுல்லா குழுவினருக்கு வசதியாகச் சந்தர்ப்பங்கள் வாய்த்துவிட்டன.

அடுத்த சில நாட்களுக்கு இரண்டு தரப்பினரும் ஒருவரையொருவர் பதவி நீக்குவதாகக் கூறிக் கொண்டு அறிக்கை விடுவார்கள். பின்னர், இறுதி முடிவுக்காக, பிரச்சனை நீதிமன்றம் வரை செல்லும்.

ஆனால், அத்தாவுல்லா குழுவினர் காட்டும் தீவிரத்தைப் பார்த்தால், ஜனாதிபதியின் உதவியுடன் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிடுவார்களோ என்ற ஐயமும் எழவே செய்கிறது.

அத்தாவுல்லா திங்களன்று ஜனாதிபதியைச் சந்தித்து பல மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், ஜனாதிபதி இவ்விடயத்தில் சாதகமாகப் பதிலளித்ததாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

சிலர் கூறுவதைப் போன்று, முஸ்லிம் காங்கிரஸிற்குள் ஏற்பட்ட பிரச்சனையைச் சமாதானத்திற்கு எதிரான சதி என்றெல்லாம், நோக்க வேண்டிய அவசியமில்லை.

பொதுவாகவே, முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள் முக்கிய பொறுப்புக்களிலிருக்கும் ஒரு அரசியல் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் அதிகார மாற்றம் இது.

தேசிய அரசியலில் இந்த நெருக்கடி எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எவ்வாறெனினும், முஸ்லிம்களின் பேரம் பேசும் பலம் சிதைந்து போகிறது என்பது சந்தேகமில்லை. ஆனால், பலமாக இருந்தபோதும் முஸ்லிம்களுக்காகப் பேரம் பேசாத ஒரு கட்சியாக இருப்பதில் பலனில்லையென்பது அதிருப்தியாளர்களின் எண்ணம்.

# இந்தியாவின் மௌனம் சொல்லும் செய்தி என்ன?

தற்போதைய சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்கு என்ன? இந்தக் கேள்விக்கு இராஜதந்திர ரீதியிலான பதிலொன்றை அரசாங்கம் அளித்து வருகிறதே தவிர உண்மையில் இந்தியா, செயற்பட்டுவரும் விதம் குறித்து அரசாங்கம் மகிழ்ச்சியாக இருக்காது என்பதை நிச்சயம் நம்பலாம்.

அரசு புலி யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலம் தொடக்கம் இந்தியா, குறிப்பிடத் தக்க விதத்தில் முக்கியமான கருத்து எதனையும் தெரிவிக்காது இலங்கை நிலைவரத்தை மிகவும் கவனமாக அவதானித்து வருகிறது.

நோர்வே மற்றும் அமெரிக்கத் தலையீடுகள் குறித்து இந்தியா பெருமளவில் மகிழ்ச்சியடையாது என்றபோதிலும் அது தனது இராஜதந்திர வரம்புகளை மீறிவிடாமல் எச்சரிக்கையுடன் நடந்து கொள்கிறது. தன்னுடைய பிராந்திய மேலாதிக்கத்திற்குக் குந்தகம் ஏற்படாத விதத்தில், இந்தியா, காய் நகர்த்தும் என்பதை எதிர்பார்த்தேயாக வேண்டும்.

அரசு, புலி, நோர்வே இந்த மூன்று தரப்பும் இலங்கை இனப் பிரச்சனை விவகாரத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தைப் போதியளவு உணர்ந்துள்ளன. இதன் காரணமாகவே எந்தவொரு விடயம் நடந்தாலும், அதனை இந்திய அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக தெரியப்படுத்த இலங்கை அரசு அமைச்சர் மிலிந்தமொறகொடவையும் அடிக்கடி விசேட தூதுவராகப் புதுடில்லிக்கு அனுப்பி வருகிறது.

நோர்வே ஏற்பாட்டாளர்களும் கூட, தமது உயர்மட்ட இராஜதந்திரிகளை அனுப்பி அவர்கள், இலங்கையில் செய்யும் மத்தியஸ்தப் பணியின் நிலைவரத்தை அவ்வப்போது இந்தியாவுக்கு விளக்குகிறார்கள்.

இப்போது இந்தியாவுக்கு நிலைமையை எடுத்துச் சொல்ல மற்றொரு குழுவும் சென்றிருக்கிறது.

எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி அதன் உயர் மட்டத் தலைவர்கள் அடங்கிய தூதுக்குழுவொன்றை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது.

இவர்கள் முன்னைய இரு தரப்பும் கூறிய கருத்துக்களுக்கு மாற்றமான வகையிலேயே இந்தியாவுடன் கருத்துப் பரிமாறல்களைச் செய்வார்கள் என எதிர்பார்க்கலாம்.

அனைத்தையும் காதில் வாங்கிக் கொண்டு இந்தியா, மௌனமாக இருக்கிறது. சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவு என்று அவ்வப்போது பொதுப்படையாகக் கூறிவந்தாலும், மேலும் ஆழமாக இம்முறை இலங்கைப் பிரச்சனையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள இந்தியா விரும்பாதது போல் தெரிகிறது.

இந்தியா ஒதுங்கி நிற்கிறது என்பதன் அர்த்தம், அது எதையும் சகித்துக்கொண்டு வாழாவிருக்கிறது என்பதாகக் கொள்ள முடியாது. இந்தியாவின் மௌனம் ஒன்றை மட்டும் தெளிவாக உணர்த்துகிறது. அது புலிகள் விசயத்தில் பழைய துன்பியல் சம்பவத்தை மறக்கத் தயார் இல்லை என்பதுதான்.

# NAVEEN CERAMIC



தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்

**Naveen Ceramic** No.307, George R. De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

## விதுஜா ஏசியன் சொப்

# VIDUJA ASIAN SHOP

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை, சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

**விதுஜா ஏசியன் சொப்**

---



கண் வைத்திய
நிபுணர் மூலம்
கண் பரிசோதனை செய்து
விரும்பிய வகையிலான
பிரேம்களைக் கொண்ட
மூக்குக்
கண்ணாடிகளை
குறைந்த
செலவில்
பெற்றுக் கொள்ள
ஒரே நிறுவனம்

**விழி உங்களிடம்**
**அதன் ஒளி**
**எங்களிடம்**

**அப்பலோ ஒப்ரிசியன்**

(ஹட்டன் நஷனல் வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

**APPOLO OPTICALS**

No.298A,
George R.De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena, Colombo-13.
T.P: 074-610459

---

## பரம்பரையாக தொடர்ந்து வரும் பிரபல மலையாள மாந்திரீகம் மூலம் உங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுங்கள். 23 வருட அனுபவபூர்வ சேவை



பிரச்சினைகளை மனதில் மறைத்துக் கொண்டு துன்பப்பட வேண்டுமா?

பல்லாயிரக் கணக்கானவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்ததை போன்று உங்களுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன், நீங்கள் விரும்பும் காதலரை 24 மணி நேரத்தில் உங்கள் வசமாக்குவேன். பிரிந்தவர்களை சேரவைக்கவும், வேண்டாதவர்களை தள்ளி வைக்கவும்,வீடுகளை காவல் செய்யவும்,வியாபாரம் தழைக்கவும், பிள்ளை பேறு கிடைக்கவும், தொழில் கிடைக்கவும்;வெளிநாட்டு வேலைவாய்ப்பு கிடைக்கவும்,பெரும் சூனியத்தை வெட்டவும் முடியும். இது போன்ற வேறு மந்திர வேலைகளையும் செய்து தருவேன். சந்திப்பு : ஞாயிறு,புதன் - மு.ப.9.00 - பி.ப.5.00

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விசேட பாதுகாப்பு அளிக்கும் மந்திர உபாயங்கள் என்னிடம் உண்டு.**

வெளிநாட்டில் இருந்தவாறே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அதிஷ்டமான வாழ்க்கை நடத்துவோர் அதிகம். எனது திறமையின் பலன்களை அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**பாரத ஜெயதேவ** பாரம்பரிய மலையாள மஹா மாந்திரீகர்

65, High Level Road, Kirullapone, Colombo - 06.
T.P ; 734678, 514349 Fax : 514349

சந்திப்புக் கட்டணம் - ரு 250/=

---

**ஞானம் பிரின்டர்ஸ்**

பிரதான வீதி, பெரியகல்லாறு, கல்லாறு என்ற முகவரியில் அமைந்துள்ள ஞானம் பிரின்டர்ஸிடம் தினமுரசு வாரமலரைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 ✦ 06 ✦ 1940



இறப்பு 05 ✦ 12 ✦ 2000

பூனகரியைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

### செல்லையா சிவசுப்பிரமணியம்

அன்புத் தெய்வமே!
ஆண்டு இரண்டு மறைந்தாலும்
என்றென்றும் எங்கள் நெஞ்சோடு
நினைவாக வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் இனிய முகம் மறையாது ஐயா
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரக் குழந்தைகள், உறவினர்கள்.

தகவல்: மு.சுந்தரலிங்கம்
பெரிய கோமரசன் குளம், வவுனியா.

---

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

*Eric Rajapakse* Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

**இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.**
**(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)**

தொலைபேசி: 01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

---

அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

புத்தளத்தில் தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு......

# Mujibas Jewellers

**Buyers & Sellers of 22ct.**
**Gold Jewells Orders Executed Promptly**

No. 8A, 1st Cross Street, Puttalam.
Phone : 032-66102 Res: 032-66914 Mobile: 077-327243

---



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.



**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.



**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளி நாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷ் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

அண்ட மண்டலத்திருந்து..

# நாகப்பாவின் உயிர் ஊசலாடுகிறது?

தமிழினவாதி, புலிகளின் தீவிர ஆதரவாளர் கொளத்தூர் மணியின் கையில்தான் கடத்தப்பட்ட முன்னாள் கர்நாடக அமைச்சர் நாகப்பாவின் உயிர் இருப்பது போலத் தெரிகிறது. அம் மாநில அரசு மணியை எப்படியாவது சிறையிலிருந்து விடுவித்து, வீரப்பனிடம் தூது அனுப்பி வைக்கத் துடிக்கத்தான் செய்கிறது.

ஆனால், ஒரு இடத்தில் ஜாமீன் கிடைத்தால் இன்னொரு இடத்தில் இடிக்கிறது. மாநில அரசில் ஒரு சில அதிகாரிகளே கிருஷ்ணா அரசின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாகச் செய்திகள்.

இன்னொரு பக்கம் ஜெயலலிதா அரசோ தமிழக எல்லைப் பகுதியில் காலை வைத்தால் அவரைக் கைது செய்வோம், அவர் மீது நாங்கள் ஐந்து வழக்குகள் போட்டிருக்கிறோம். எவருக்கும் பயந்து அவற்றைத் திரும்பப் பெறுவதாக இல்லை எனக் கொக்கரிக்கிறது. வீரப்பன் அனுப்பிய ஐந்தாவது காசட்டில், மணியைத் தூதனுப்ப வைத்திருந்த கெடு நவம்பர் 29 அன்று முடிந்தது.

மணி இங்கே வராவிட்டால், நாகப்பாவின் தலைதான் உங்களுக்குப் பார்சலில் வரும் என்று வீரப்பன் மிரட்டியிருந்தார்.

இப் பின்னணியில்தான் கொளத்தூர் மணி முக்கியத்துவம் பெறுகிறார். ஏற்கெனவே நாம் குறிப்பிட்டிருந்தபடி, ராஜ்குமார் விடுதலையின் போது திரைக்குப் பின்னாலிருந்து, பலவற்றை இயக்கியவர் மணிதான்.

நக்கீரன் கோபாலுக்கும் பங்கு இருக்கத்தான் செய்தது. ஆனால், ஒரு கட்டத்தில் அவர் தன்னைப் பண விவகாரத்தில் ஏமாற்றிவிட்டார் என்று நினைத்து அவருடன் தொடர்பை வீரப்பன் முற்றிலுமாகத் துண்டித்துவிட்டார்.

அதிரடிப்படையின் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களுக்கு நியாயம் வழங்கப் போராடிய மணி இம்முறையும் நாகப்பாவிற்காகத் தூது செல்லத் தயாராக இருப்பதாகவே கூறப்படுகிறது.

ஏற்கெனவே நாகப்பாவை விட்டு விடுங்கள் என வீரப்பனுக்கு வேண்டுகோள் விடுத்து, அது ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்புதான் அவர் கர்நாடகப் பொலிசாரால், வீரப்பனுக்குப் பல்வேறு வழிகளில் உதவி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அவர்கள் கண்டார்களா என்ன, வீரப்பன் நாகப்பாவைக் கடத்துவார் என! கடத்திய முதல் நாளிலிருந்து, வீரப்பன் மணியுடன் தான் பேச விரும்புவதாகக் கூறி வந்திருக்கிறார்.

முதலில் அதெல்லாம் முடியாது, வேறு யாரை வேண்டுமானாலும் அனுப்புகிறோம் என்று கூறி வந்தது கிருஷ்ணா அரசு. ஆனால், பொறுமையிழந்த வீரப்பன் மணியா, நாகப்பா தலையா என மிரட்டியவுடன் வேறு வழியின்றி மணியை விடுதலை செய்வதற்கான முயற்சிகளில் அவ்வரசு இறங்கியிருக்கிறது.

இதனிடையே வீரப்பனால் கொல்லப்பட்ட ஒரு பொலிஸ் சப்இன்ஸ்பெக்டரின் தந்தை அப்துல் கரீம் மணியை விடுதலை செய்தால் நீதிமன்றத்திற்குப் போவேன் என எச்சரித்தார். இவருடைய குறுக்கீட்டால்தான், ராஜ்குமார் கடத்தலின் போது, வீரப்பனுக்கு உதவியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தடா கைதிகளின் விடுதலையும் தாமதமானது... மறுபடி கரீம் வழக்குப் போட்டு, வீரப்பன் சினமடைந்து நாகப்பாவைக் கொன்றுவிட்டால்? பதறிப்போய் நாகப்பாவின் சாதிப் பிரமுகர்கள் கரீமைச் சந்தித்து அவரை சமாதானப்படுத்தினர். பிறகு உயர் நீதிமன்றம் மூன்று வழக்குகளில் மணிக்கு ஜாமீன் வழங்கியது.

எப்படியோ சமாளித்துவிடலாம். ஒரு வழியாக எல்லாம் சரியாகி வருகின்றது எனக் கர்நாடக அரசு பெருமூச்சு விட்டு நிமிர்ந்தால், அங்கு என்ன நடந்தாலும் எங்களுக்கு அக்கறையில்லை, வீரப்பனைச் சந்திக்கத் தமிழக எல்லைப் பகுதியில் நுழைந்தால் மணி கைது செய்யப்படுவது உறுதி, குற்றவாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை எனத் தமிழக அரசு உள்துறை அதிகாரி அறிவித்தார்.

சில நாட்களுக்கு முன்புதான், இரண்டு கர்நாடக அமைச்சர்கள் ஜெயலலிதாவைச் சந்தித்தார்கள்.

**கானகன்**

நாகப்பாவின் குடும்பத்தினரும் தனியாகச் சந்தித்திருந்தார்கள். நாகப்பா விடுதலைக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என அப்போது ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

ஆனால், இப்போது அவரது அரசு முரண்டு பிடிக்கிறது. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைதான்.

நாகப்பாவின் குடும்பத்தினர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவருக்கு ஏதாவது நேர்ந்தால் எல்லோரும் தற்கொலை செய்து கொள்வோம் என அறிவித்திருக்கின்றனர்.

செய்வதறியாமல் முதல்வர் கிருஷ்ணா தலையில் கை வைத்துக் கொண்டிருக்கிறார்.

சமாதான முயற்சிகளில் பல்வேறு தரப்பினரின் பங்கு பற்றுதல் இருந்தால்தான் அந்த முயற்சிகள் வெற்றி பெற முடியும். தற்போதைய சந்தர்ப்பம் இதயசுத்தியுடன் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமேயானால் வழமையான ஆளும் கட்சி, எதிர்க்கட்சி குடுமிபிடி அரசியல் ஓரங்கட்டப்பட வேண்டும். இந்த நாட்டு மக்கள் யுத்தத்தால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், எத்தகைய விலையைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை ஆழமாகச் சிந்தித்துத் தீர்வு காண முயல வேண்டும்.

தற்போது ஒவ்வொரு தரப்பினரதும் நிலைப்பாட்டைப் பார்ப்போம்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் குறிப்பாக எஸ்.எல்.எப்.பி, ஐ.தே.மு. அரசு புலிகளுக்கு மிக அதிகமாகவே விட்டுக்கொடுத்து விட்டதாகக் குறை கூறுகிறது. புலிகள் வடக்கு கிழக்கில் கான தென்கிழக்கலகுக் கோரிக்கையையோ ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழர்களுக்கு எதுவும் வழங்கக் கூடாது என்ற கண்ணோட்டத்திலிருந்து செயற்படும் அரசியல், மத நிறுவனங்களைப் பற்றியும் நாம் அக்கறை கொள்ள வேண்டும். சிஹல உறுமய போன்ற அமைப்புக்களே அவையாகும்.

இத்தனைக்கும் மத்தியில் சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்கொண்டு செல்லலாம் என்பதே முக்கியமான கேள்வியாகும்.

உண்மையில் ஐ.தே.மு. அரசாங்கம்- பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. ஆகியவற்றுடன் ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும்.

இல்லையேல் சமாதான முயற்சிகள் மிகவும் பலவீனமான தளத்தில் கட்டப்படுபவையாக அல்லது ஈடாட்டம் காணக்கூடியவையாக அமைந்து விடும்.

றன. அல்லது அதிக கவனத்திற்கு உட்படுத்தப்படவில்லை என்பது முக்கியமான அம்சமாகும்.

பேச்சுவார்த்தை என்பது அரசினதும் புலிகளினதும் ஏகபோகமாகியிருப்பதும் அதன் விளைவாக உருவாக்கப்பட்டிருக்கும் உபகுழுக்களில் ஐ.தே.மு. அரசின் பிரதிநிதிகளும், புலிகளின் பிரதிநிதிகளும் மாத்திரம் இடம்பெற்றிருப்பதும் ஜனநாயகம் தொடர்பான பலமான சந்தேகத்தை எழுப்புகின்றன. மக்களின் பல்வேறு தரப்பினரதும் பிரதிநிதித்துவம் தொடர்பான கேள்வியை எழுப்புகின்றன.

மாற்றுக் கட்சிகளினதும் வேறு சமூகங்களினதும் இருப்பு, பாரதூரமான அளவில் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்டிருகிறது. .மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட எந்தக் கட்சிக்கும் எதுவித முக்கியத்துவமுமில்லை.

# சமாதான முயற்சிகளை வலுப்படுத்துவதானால்...

நீதிமன்றம், பொலிஸ் நிலையம், சிறைச்சாலை, படைகள் என எல்லாவற்றையும் வைத்திருப்பதாக, அவர்கள் ஒரு அரசாங்கமாகச் செயற்படுவதாகக் குற்றம் சாட்டுகிறது. ஐ.தே.மு. அரசு தனது இருப்புக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கிறது என்பதே அவர்களின் வாதமாகும்.

ஜே.வி.பி.யும் இந்த நாட்டைப் பிரிக்கும் அபாயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறது. இதற்கெதிராகச் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்று தெரிவிக்கிறது. 1994 இல் பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வரும் போது இனப் பிரச்சனைக்குத் தீர்வு -சமாதானம், சகல அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குதல் ஆகிய வாக்குறுதிகளுடனேயே பதவிக்கு வந்தது.

புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. துரதிஸ்டவசமாக 5 மாதங்களில் அந்தப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன. இருப்பினும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இனப் பிரச்சனைத் தீர்வுக்காக ஒற்றையாட்சியல்லாத தீர்வு யோசனை ஒன்றை முன்வைத்தது.

சமாதானத்திற்கான பிரச்சார இயக்கமொன்றை நாடு பூராவும் முன்னெடுத்தது. ஆனால் அப்போதும் எதிர்க்கட்சியாக இருந்த ஐ.தே.க.வுடன் உறவு சுமுகமானதாக இருக்கவில்லை. ஐ.தே.க. ஒற்றையாட்சி அமைப்புக்குள்ளேயே தீர்வு என்று வலியுறுத்தியது.

இரண்டாயிரமாம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு யோசனைகள் பாராளுமன்ற மேசைகளிலேயே தீக்கிரையாக்கப்பட்டன.

ஜே.வி.பி.யும் சமஷ்டி முறையிலான தீர்வையோ, முஸ்லீம் மக்களுக்

இந்த நாட்டின் சிங்கள சமூகத்தின் 50 வீதமானோரின் கருத்துக்கள், எண்ணங்கள் உள்ளடக்கப்படாதவையாக அமைந்துவிடலாம்.

அரசியல்வாதிகள், மதவாதிகள் எதனைப் பேசினாலும் சமகாலத்தில் பெரும்பான்மையான மக்கள் விரும்புவது நிரந்தர சமாதானத்தையே. எனவே இதில் மக்களின் எண்ணங்

> **பேசப்படுவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி. ஆனால் தமிழ் மக்கள் பேச உரிமையற்றவர்கள். அந்தச் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கத் தகுதியுடைய முஸ்லீம் மக்களும் பேச முடியாது.**

கள் கருத்திற்கு எடுக்கப்பட வேண்டும். ஜே.வி.பி. போன்ற கட்சிகள் வடக்கு கிழக்கில் நிலவும் ஜனநாயக விரோதச் செயல்களைக் காரணம் காட்டித் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் புறந்தள்ளிவிட முடியாது.

இனவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற பதாகையின் கீழ் தமிழ் மக்களின் இனரீதியான இரண்டாந்தர நிலையை மறுதலித்துவிட முடியாது. இனவாதம் என்பதில் சிங்கள இனவாதத்தையும் அவர்கள் உள்ளடக்கியாக வேண்டும்.

ஏனெனில் சிறுபான்மையினரின் கோரிக்கைகளே எப்போதும் அவர்களுக்கு இனவாதமாகத் தெரிகிறது.

வடக்கு கிழக்கில் முஸ்லீம்களினதும் மாற்று அரசியல் ஸ்தாபனங்களினதும் செயற்பாடு, இருப்பு என்பன அலட்சியப்படுத்தப்படுகின்

எனவே இங்கு மேலோங்கி நிற்பது ஆயுத அரசியலே.

மக்கள் பெயரில் நடைபெறும் பேச்சுவார்த்தை தொடர்பாக மக்களின் அபிப்பிராயங்களுக்கோ, விவாதங்களுக்கோ இடமளிக்கப்படவில்லை.

பேசப்படுவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி. ஆனால் தமிழ் மக்கள் பேச உரிமையற்றவர்கள். அந்தச் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கத் தகுதியுடைய முஸ்லீம் மக்களும் பேச முடியாது.

நாடு பூராவும் உள்ள பல்வேறு


**தாகூர்**

தரப்பு மக்களின் எண்ணங்கள், கருத்துக்கள் ஒருங்கிணைக்கப்படாவிட்டால் இந்த நாட்டின் சமாதானத் தேடல் தேக்கமடையலாம்.

அதனை உணர வேண்டியவர்கள் முக்கியமாக அதில் சம்பந்தப்படும் சர்வதேச சமூகத்தவரே. அவர்களுக்கு வட அயர்லாந்து, பாலஸ்தீனம், தென்னாபிரிக்கா பற்றிய அனுபவங்கள் இருக்கின்றன. அவற்றின் வெற்றி தோல்விகள் பற்றியும் அவர்களுக்குத் தெரியும்.

எனவே அவர்கள் இதில் பிரதான பங்காற்ற முடியும். கொழும்பின் ஆட்புல ஒருமைப்பாட்டிற்குக் கண்மூடித்தனமாகக் கட்டுப்பட வேண்டும் என்றோ அல்லது தமது பிரதேசங்களில் தமது தலைவிதியை ஏகமாக ஒரு சத்தி நிர்ணயித்துவிட்டுப் போகட்டும் என்றோ தமிழ் மக்கள் நினைக்கவில்லை. விரும்பவுமில்லை. "யாமார்க்கும் குடியல்லோம" என்ற நிலையையே மக்கள் விரும்புகிறார்கள்.

# அதிரடி அய்யாத்துரை



மகேசனார் நெடுந்தீவுக்குத் திக்கு விஜயம் செய்ததும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் ஐடியாவில்தானாம். காரைநகரில நடந்த அவற்ற சகோதரியின்ர செத்தவீட்டிற்கு போன கையோட அப்படியே நெடுந்தீவுக்கும் ஒரு விசிற்! ஆள் வெறுங் கையோட போகெல்ல. பொலிசுக்கு இரண்டு மோட்டர் சைக்கிளும் கொண்டுதான் போயிருக்கிறார். ஒரு பக்கம் பாதுகாப்புப் படைகளை வெளியேற வேணும் எண்டு சொல்லிக்கொண்டு மற்றப் பக்கத்தால மோட்டச் சைக்கிள் கொடுக்கிற கில்லாடி மனிசனப்பா!

காணாமற் போனோர் சங்கம் காணாமற் போனவர்களின் கதியென்ன என்று கேட்டு திரும்பவும் மறியல் போராட்டம் நடத்தினம். முதலில டக்கிளஸைப் பிடித்து ஜனாதிபதியைப் போய்ச் சந்திச்சினம் பிறகு சிவாஜிலிங்கத்தாரோட ரணிலைச் சந்திச்சினம் யாரைச் சந்திச்சும் என்ன பிரியோசனம்? காணாமற் போனவர்களை மட்டும் என்னும் சந்திக்க முடியவில்லை. காணாமற் போனவர்கள் எங்கையோ உயிரோடுதான் இருக்கிறார்கள் என்று ஒரு அற்ப சொற்ப நம்பிக்கையைக் கொடுத்து அவர்களின் உறவினர்களைக் கொண்டு அரசியல் செய்ய நினைக்கிறவை, எனியாவது அவைய என்னும் ஏக்கத்தில வைத்திருக்காமல் உள்ளதைச் சொல்லி, கடைசி நிவாரணமாவது பொற்றுக் கொடுத்து இதற்கொரு முற்றுப்புள்ளி வைத்தால் நல்லது.

ஏ 9 பாதை திறக்கப்பட்டு சமாதான சூழல் நிலவுது எண்டு கண்டவுடன் வெளிநாட்டுக்குப் புலம் பெயர்ந்தவர்கள் வருகை யாழ்ப்பாணத்துக்கு எண்டுமில்லாத அளவு அதிகரிச்சிருக்கு. இதுக்குள்ள வேடிக்கையும் நடக்குது. நுவரெலியாவில இருந்து யாழ்ப்பாணம் போன ஒருவரை ஏ 9 செக் பொயின்ரில வைத்து பாஸ்போட்டக் காட்டச் சொல்லிக் கேட்டிச்சினமாம். தான் நுவரெலியாவில இருந்துதான் வருகிறேன் என்று சொல்ல, இங்க ஒஸ்ரேலியாவில, அமெரிக்காவில இருந்து வாறவையள் எல்லாம் பாஸ்போட் காட்டுகினம் உமக்குத்தான் காட்ட இயலாதோ எண்டு காட்ட மாய்க் கேட்டிச்சினமாம். யாரிடம் சொல்லி அழ?

யாழ்ப்பாண லைபிரறியைத் திறக்கிறதுக்கு நானா நீயா என்று அடிபுடி தொடங்கிட்டுது. புனர்வாழ்வு அமைச்சர்தான் திறக்க வேணும் எண்டும் இல்லை, அது மாநகர சபையின்ர சொத்து மேயர்தான் திறக்க வேணும் எண்டும்: கயிறிழுப்பு நடக்குது. அவை எரிச்சுப்போட்டு இப்ப துறக்கத்தான் வில்லங்கப்படுகினமோ எண்டு மேயர் குமுறுகிறார். ரணிலைக் கொண்டு வந்து திறக்க வைத்துவிட்டால் யு.என்.பி. அரசியல் இலாபம் சம்பாதிச்சிடலாம் என்றும் ஒரு வட்டாரத்துக்கு நப்பாசை. ஜனாதிபதியை கொண்டு வந்து திறக்கிற அளவிற்கு மற்றப் பக்கம் போகாத குறை. திறக்கலாம். சரி. இன்னொரு சண்டை வந்து இடிக்காமல் இருந்தால் புண்ணியம்.

எப்.எம். ரேடியோ என்றால் குளிராத செவி எது? விசயம் என்னவென்றால் இரண்டெழுத்தாரும் வெகு வீரைவில ஒரு எப்.எம். ரேடியோ தொடங்கப் போகினமாம். இதற்கான விலையுயர்ந்த ரேடியோ ரான்ஸ்மீட்டர் எல்லாம் வெளிநாட்டில இருந்து கொழும்புக்கு ஊடாகத்தான் கிளியர் பண்ணி வன்னிக்குப் போயிருக்காம். பாதுகாப்பு அமைச்சர் மட்டத்தில வரிஞ்சு கட்டிக்கொண்டு கிளியர் பண்ணிக் கொடுத்திருக்கினமாம். சமாதானப் பாட்டுத்தான் படிக்கப் போகுது எண்ட நம்பிக்கைபோல. ஒரு வேளை யுத்தம் வெடிச்சால் தடைசெய்ய வழியே இல்லை நாட்டு மக்களின்ர வீடுவீடாகப் போய் காதை அடைத்தால்தான் உண்டு.

பாலா அண்ணைக்கும் நெடுந்தீவுக் கள்ளுக்கு நாவூறத் தொடங்கிட்டுது. டி.பி. காறர் நெடுந்தீவுக்குப் போறது அங்கத்தைய கள்ளுக் குடிக்க ஆசைப்பட்டுத்தான் எண்டு நக்கல் அடிச்சிருக்கிறார். முந்திப் பேசக்க மாமரத்துக்குக் கீழே இருந்து யாழ்ப்பாணத்துக் கள்ளைக் குடிக்கிற சுகம் பற்றி பாலா அண்ணை சொன்ன கதை ஞாபகத்துக்கு வருகுது. உண்மைதான் யாழ்ப்பாணத்துக் கள்ளுக்கு முன்னால வெளிநாட்டு விஸ்க்கி எல்லாம் எம்மாத்திரம். ■

# ஸ்போர்ட்ஸ்

## ஆஷஸ் தொடரை வென்றது அவுஸ்திரேலியா

ஆஷஸ் தொடரின் 3வது கிரிக்கெட் டெஸ்டில் அவுஸ்திரேலியா ஒரு இன்னிங்ஸ் 48 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதையடுத்து 5 டெஸ்ட் கொண்ட தொடரை 3-0 எனக் கைப்பற்றியது ஆஸி.

முன்னதாக, பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் 384 ரன்களாலும், அடிலெய்டில் நடைபெற்ற 2வது டெஸ்டில் ஒரு இன்னிங்ஸ் 51 ரன்களாலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

ஆஷஸ் தொடரை அவ்வணி தொடர்ந்து 8வது முறையாகக் கைப் பற்றியுள்ளது குறிப்பிடத் தக்கது.

2ஆம் நாள் ஆட்டநேர இறுதியில் ஒரு விக்கெட் இழப்புக்கு 33 ரன்கள் எடுத்திருந்தது இங்கிலாந்து.

மூன்றாம் நாளான ஞாயிற்றுக் கிழமையும் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து, 223 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

### ஸ்கோர் விபரம்

முதல் இன்னிங்ஸ்: இங்கிலாந்து 185, அவுஸ்திரேலியா 456.

இரண்டாவது இன்னிங்ஸ்: இங்கிலாந்து 223

## நியூஸிலாந்து அணி பலம் மிக்கது

நியூஸிலாந்து சுற்றுப்பயணம் இந்தியாவுக்குச் சவாலாக அமையும் என்று இந்தியக் கிரிக்கெட் அணிப் பயிற்சியாளர் ஜான் ரைட் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து புறப்படுவதற்கு முன்பு கோல்கத்தா விமான நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர், நியூஸிலாந்தில் உள்ள 'பிச்'கள் இந்தியாவைப் போல 'ஃபிளாட்' ஆக இல்லாமல் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உகந்தது. நியூஸிலாந்து வீரர்கள் மிகவும் தொழில் முறையிலான ஆட்டக்காரர்கள். அதே சமயம் உள்ளூரில் மிகவும் ஆக்ரோஷத்துடன் விளையாடக் கூடியவர்கள். அவர்களை எதிர்கொள்வது இந்தியாவுக்குச் சற்றுக் கடினமானது.

இந்திய வேகப் பந்து வீச்சாளர்கள் ஜாகீர் கான், நெஹ்ரா, டினு யோகனன், அகர்கர் ஆகியோருக்கு இத் தொடர் மிகவும் சவாலாக அமையும். அவர்களது பந்துவீச்சு வெற்றிக்கு முக்கிய பங்காற்றும், பாங்கருக்கும் திறமையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இப்போதுள்ள இந்திய அணி, உலகக் கோப்பைப் போட்டியில் எவரையும் சமாளிக்கக் கூடிய சரியான அணியாக உருவெடுத்துள்ளது.

மற்ற நாடுகளைப் போல உலகக் கோப்பைப் போட்டிக்கு ஒருங்கிணைந்த அணியைத் தேர்வு செய்யும் பொருட்டு, நியூஸிலாந்துடனான தொடர் இந்திய வீரர்களுக்கு மிகவும் முக்கியமானது.

நாட்வெஸ்ட் கோப்பை, சாம்பியன்ஸ் கோப்பை ஆகிய வெளிநாடுகளிலான போட்டிகளில் வெளிப்படுத்திய திறனை இந்திய வீரர்கள் இத் தொடரில் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# சிந்தியா பதில்கள்

**நீங்கள் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்த சம்பவங்கள் ஏற்பட்டதுண்டா?**

என்.கிறிஸ்டோபர், அம்பிட்டிய.

அதுதான் எப்போதும் நடக்கிறதே! அதை விடுங்கள். சென்ற வாரத்திற்கு முந்திய வாரம், இப் பகுதியில், நான் நகைச்சுவை என்று நினைத்துக் கொண்டு தந்த பாராளுமன்றப் பதிலடியில், அந்த முக்கிய வரி காணாமல் போய் சபை ஏன் சிரிப்பால் அதிர்ந்தது என்று தலையைப் பிய்த்துக் கொள்ளும்படியாகி விட்டது!

பிய்க்கப்பட்ட தலைகளிடம் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு அதை மீண்டும் தருகிறேன்.

அமைச்சரை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தாக்கிப் பேசிக் கொண்டிருந்தார். அமைச்சர் குறுக்கிட்டுப் பதில் சொல்ல முனைந்த போதெல்லாம் "நான் இன்னும் முடிக்கவில்லை" என்று உறுப்பினர் சத்தம் போட்டார். பலமுறை குறுக்கிட முயன்றும் இப்படியே பதில் வந்து கொண்டிருந்தது. ஒருவழியாக அவர் முடித்ததும் அமைச்சர் கேட்டார். "இப்போது முடித்து விட்டீர்களா?" 'ஆம்' என்றார் உறுப்பினர். "சரி, சங்கிலியை இழுங்கள்' என்றார் அமைச்சர். சபை சிரிப்பால் அதிர்ந்தது.

**ராகுல் ட்ராவிடின் தலைமை சோபிக்கவில்லையே?**

பாமினா, நகவெல.

மேற்கிந்திய அணியினரின் சிறப்பான விளையாட்டை, குறிப்பாக சாமுவேலின் அதிரடி ஆட்டத்தைப் பாராட்டி உண்மையான விளையாட்டு வீரராக வென்றாரே அது போதாதா!

**பழைய படங்களுக்கும் புதிய படங்களுக்கும் என்ன வித்தியாசம் என்று சொல்ல முடியுமா?**

எஸ்.சச்சி, ஸ்ரீநாராயணபுரம்.

முன்பெல்லாம் நம்மை அழ வைத்தே படங்களை வெற்றி பெற வைத்தார்கள். இப்போது அடிதடி என்று மிரட்டி வெற்றி பெற வைக்கிறார்கள்.

**முரளியின் விளையாட்டில் முன்பு போல உற்சாகமில்லையே, என்ன காரணம் சிந்தியா?**

ஆர்.எஸ்.ஜெசீதான், மாத்தளை.

அரசியல்தான்!

**வாயைத் திறந்து வம்பில் சிக்கும் மனிதர்களுக்குச் சிந்தியா கூற நினைப்பது?**

அ.சுமன், நற்பிட்டிமுனை.

சர்மிலாவின் கேள்விக்கு வாருங்கள்!

**சிந்தியா, மௌனமாக இருப்பவர்கள் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

எஸ்.சாமிலா, கோமாரி.

சிங்ளேர் கூறியிருப்பதை வழிமொழிகிறேன்.

"நாலுபேர் உங்களை முட்டாளோ என்று சந்தேகப்பட்டாலும் பரவாயில்லை. மௌனமாயிருப்பது நல்லது- வாயைத் திறந்து அந்த சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துவதைக் காட்டிலும்.

**ஒஸ்லோ மாநாட்டில் அமெரிக்கப் பிரதிநிதி ஆர்மிடேஜ், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பல்லினத் தன்மையையும், கருத்துக் கூறும் உரிமையையும் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று பேசியிருக்கின்றாரே?**

எம்.நிஷாந்தன், வவுனியா.

இது யாரோ துரோகிகளின் வேலை. அமெரிக்காவுக்கும் கூடப் போய் பொய்சொல்லி நம்ப வைத்திருக்கிறார்கள். நிஷாந்தன், நீங்கள் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளைப் படித்து வருகிறீர்கள்தானே, தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பேசுவதையெல்லாம் கேட்டு வருகிறீர்கள் தானே... அப்படியொரு பிரச்சனை இங்கிருக்கிறதா என்ன?

**வன்முறையை நிறுத்தி ஜனநாயகச் சூழ்நிலையை அனுமதித்தால்தான் வடக்கு கிழக்கிற்கு உதவுவது பற்றி யோசிக்க முடியும் என்று அமெரிக்கா நிபந்தனை விதிக்கிறதே?**


சி.பேரின்பன், கந்தளாய்.

அந்த ஆர்மிடேஜை உடனடியாகப் பதவி விலக்க வேண்டும் என்று ரணில் புஷ்ஷைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அதுவரை வடக்கு கிழக்கில் பொதுமக்கள் ஒன்று திரண்டு உண்ணாவிரதமிருப்பார்கள் என்று எச்சரிக்கிறோம்.

**காதல் அழிவதில்லையா?**

எம்.ஆதித்தன், திருகோணமலை.

அதை வைத்துப் படமெடுக்கிறவர்களைப் பார்த்தால் அழிந்துவிட்டாலே நல்லதென்று தோன்றுகிறது.



**அனுராதா ஸ்ரீராம் பற்றி?**

எம்.நஜீம், காத்தான்குடி-4.

பொம்பிளை எஸ்.பி.பி.தான்! 'ஓ போடு', 'ஒல்லிக்குச்சி உடம்புக்காரி', 'கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச', 'கானாங்கத்தை மீனுவாங்கி'... என்றெல்லாம் விறுதாவாகப் பாடும் அந்த அனாயாசத்திற்காக மட்டும் சொல்லவில்லை. இங்கே ஒரு மேடை நிகழ்ச்சியில் சாதனா சர்கம், ஜானகியின் பாடல்களையெல்லாம் மிகுந்த ரசனையோடு பாடிக் காட்டி, சக பாடகர்களையும் கிறக்கத்தோடு ரசித்தாரே அந்தப் பெரு மனதுக்காகவுந்தான்!

**மகன் தந்தைக்காற்றும் உதவி?**

பழனிபாவா, கொழும்பு-11.

என் நண்பர் தனது குடும்பத்தாருடன் கடைக்குச் சென்றிருக்கிறார். வீட்டுக்குத் தேவையான சாமான்கள் வாங்கிக் கொண்டிருக்கையில் திடீரென அவரது மகன் கூவினான். "அம்மா! அப்பாவுக்கு பிளாக் லேபல் சாராயம் வாங்கம்மா..." நண்பருக்கு ஒரே புல்லரிப்பாகிவிட்டது. "ஏனப்பு?" மகன் சொன்னான். "அதோடதான்னப்பா வடிவான பேனை ஒண்டு தருகினம்...!" வாழ்க விளம்பரங்கள்!

# இலக்கிய நயம்

தருவது முழடிஸ்யன்

## "முன்னாலே நின்று முழுமையும் பார்த்தான்!"

குளத்தைப் பார்த்தபடி நின்றிருந்தாள் அம்மங்கா. காற்றுக்குத் தலையாட்டிய குவளை மலர்களைப் போல தன் மனமும் மகிழ்ச்சியிலாடுவதை உணர்ந்தாள்.

சில்லென்ற காற்றை மேனியில் அறிந்தாள். கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டித் தன்னை இறுக்கிக் கொண்டவளாகத் தலையை நிமிர்த்தி மூச்சை உள்ளிழுத்தாள்.

உள்ளிழுத்த மூச்சுக் காற்று மார்புக்குள் உறைந்து பனிக்கட்டியாகிப் பின் மெல்ல உருகி, நரம்புகள் வழியாகப் பரவி, உடலெங்கும் நிறைவது போலத் தோன்றியது. பிடரியும் மார்பும் சிலிர்த்து உடல் குலுங்கியது.

சுற்றுப்புறத்தின் பேரமைதி மிகப் பெரும் சுமையாக அவளை அழுத்தியது. மிகக் கூர்மையான மௌனத்தை வெகு நேரம் உணர்ந்தபடியே நின்றிருந்தாள் அம்மங்கா.

குளத்தருகே ஒருத்தி தனியே நிற்பதைத் தூரத்திலேயே கண்டு ஆச்சரியமுற்ற பார்கவன், அருகே நெருங்கியதும் வியப்பின் எல்லையைத் தொட்டான்.

தாமரை மலரும் மொட்டுக்களுமாய் நாலைந்தைப் பிடுங்கி யாரோ நட்டு வைத்திருந்ததைப் போல வளைந்தும் அங்கங்கே புஷ்டியுமாக அழகு மலர்க் குவியலாக நின்றிருந்தவளைப் பார்த்தான்.

பெரும் பெரும் புஷ்பஜாலங்களைத் தாங்கி நிற்கும் செழித்த கொடி போல் பூத்துக் குலுங்கி நின்ற அவளைக் கூர்ந்து நோக்கினான் ஒருமுறை. அது அவன் இதயத்தைக் காமன் கணைகளால் சுக்குநூறாக உடைக்க முற்பட்டதால் பார்வையை வேறுபுறம் திருப்பிக் கொண்டு பெருமூச்சும் விட்டான்.

அவன் பார்வை தன் மேனியில் அலைந்த இடங்களையும், பின்னர் அவசரமாகப் பார்வையை மீட்டுக் கொண்டதையும், பெருமூச்சு விட்டதையும் அம்மங்கா அவதானித்தாள்.

அவள் கண்களில் ஒரு விநாடி இகழ்ச்சியின் சாயை படிந்தது. அலட்சியமாகத் தன் பார்வையைக் குளத்தை நோக்கித் திருப்பினாள்.

கண்களைத்தான் திருப்பிக் கொண்டாளே தவிர, உணர்ச்சிகளை அவளால் கட்டுப்படுத்த முடியாததால் பெரிதும் சங்கடத்தில் அகப்பட்டுத் தத்தளிக்கவே செய்தாள்.

அவள் பார்வை தன் மீது இல்லாத தைரியத்தில் பார்கவன் மீண்டும் தன் கண்களை அவள் மீது நாட்டினான்.

அந்தக் கண்கள் வண்டுகளாகி அவள் முகத் தாமரையில் சஞ்சரித்தன. அதன் பின் மெல்லக் கீழிறங்கியது அவன் ஆராய்ச்சிப் பார்வை. கழுத்தின் கீழும் இறங்கிக் கச்சையை மீறியிருந்த மார்பு விளிம்பு வட்டங்களிலும் நிலைத்தது.

சற்று அதிகப்படியாகவே இருந்த தாமரை மொட்டுக்கள் லேசாக அசைந்ததையும், அந்த அசைவைக் கூடத் தாங்கச் சக்தியற்றுத் துளிர் இடை நெளிந்து இம்சைப்பட்டதையும், நல்ல வேளையாக அதற்குக் கீழே நன்கு செழித்த பாதுகாப்பிரண்டு அதைத் தாங்கி நின்றதையும் பார்கவன் பார்த்தான். பிரமன் இலேசுப்பட்டவன் அல்ல என்று வியக்கவும் செய்தான்.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கண்ணெதிரில் தெரிந்த எழிற்குவியல்களில் அவன் கண்களும் உள்ளமும் வெகு நேரம் பிணைந்து கிடந்தன.

அம்மங்காவின் உடலிலும் ஏதேதோ உணர்ச்சிகள் மின்னல் போல் பாய்ந்து சென்றன. அதன் விளைவாக இலேசாக அவள் அசையவும் செய்தாள்.

பார்கவன் அவள் பார்வை பதிந்து மீண்ட குவளை மலர்களைப் பார்த்தான். பின் அவளை நெருங்கி, எதிரே நின்று நேருக்கு நேராக ஒரு விநாடி வெறித்துப் பார்த்தான். அந்த வெறிப் பார்வையின் வேகம் அவள் உடலில் பாய்ந்தது.

அம்மங்காவின் உயிர் வெட்க அலைகளில் அகப்பட்டுத் தத்தளித்தது. முகம் தரை நோக்கித் தாழ்ந்தது.

விடுவிடென்று குளத்தை நோக்கி நடந்த பார்கவன், அங்கிருந்த குவளை மலர்கள் சிலவற்றைப் பறித்து மீண்டான்.

அம்மங்காவை நோக்கி வந்தவன், அவள் பின்புறமாகச் சென்று, முதுகுப்புறம் முழுவதையும் மறைத்து நீண்டிருந்த கருங்கூந்தலில் அந்த மலர்களை தொங்கும்படியாகச் சூட்டிவிட்டான்.

அவள் கூந்தலின் ஈரலிப்பு அவன் கைகளில் சீதள உணர்ச்சியை ஏற்படுத்தினாலும், அது அவனுள்ளே காம அக்கினியையே வாரி இறைத்தது.

அவள் எதிரே வந்து நின்று நோக்கினான்.

முகம் நிறையக் கண்: கண் நிறைய மர்மங்கள்; உடல் நிறைய இளமை; இளமை நிறைய வளைவுகள்; வளைவுகள் நிறைய இளமுறுவல்; இளமுறுவல் நிறையக் கூச்சம்....யார் இவள்?

எல்லா அஸ்திரங்களையும் மீறும் பிரம்மாஸ்திரத்தைப் போல கழுத்துக்குக் கீழே இலேசாக விலகிய ஆடைக்குள்ளிருந்து எட்டிப் பார்த்த மார்பகம் பார்கவனை அடியோடு நிலைகுலைய வைத்தது. கொடி போல் நெளிந்து நீண்டிருந்த அவளது இரண்டு கைகளுக்கிடையில் பரவிக் கிடந்த, அவள் மார்பின் கவர்ச்சி, திண்மையுடனும் கம்பீரத்துடனும் காட்சியளித்தது.

"விம்மி விரிந்த மார்பகங்கள் மேலும் விரிந்து சென்றிருக்கும்...அவள் கைகளாகிய இரு கொடிகள் இருபுறமும் அந்தப் புஷ்பச் செண்டுகளுக்கு அணை போட்டுத் தடுத்து நிறுத்தாதிருந்தால்..." என்ற காவிய வரிகள் அவன் நினைவுக்கு வந்தன.

கண்ணுக்குத் தெரிந்த மேல் விளிம்பின் வழவழப்பிலிருந்து மறைந்து கிடந்த மாபெரும் கவர்ச்சியை ஊகிக்க முடிந்ததால், அவன் சட்டென்று அச்சத்தின் வசப்பட்டுக் கண்களை அகற்றினான் அந்த இடத்திலிருந்து.

கண்களை அகற்றினானே தவிர, உள்ளம் அங்கேயே புதைந்து கிடந்தது. "இத்தனையும் தாங்கும் நுண்ணிய இடை எத்தனை சிரமப்படும்?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

தனக்குள் ஏறும் களிவெறியை உணர்ந்தான் பார்கவன். தனிமையில் நிற்கும் பெண்ணைத் தகாதவாறு பயன்படுத்திக் கொண்டுவிட நேரும் என்று பயந்தான்.

சட்டென்று திரும்பி விடுவிடென்று நடந்தான்.

அவன் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் அஸ்வினி அவ்விடத்திற்கு வந்தாள்.

"என்னடி, குளக்கரையில் தனியாக நிற்கிறாய்? யாராவது, கண்டால் தப்பாகப் பேசப்போகிறார்களே..."

ஓடிச் சென்று அவளைக் கட்டிக்கொண்ட அம்மங்கா படபடப்போடு சொன்னாள்.

"சற்று முன் ஒருத்தன் வந்தானடி... என்னைப் பார்த்தான். எதுவுமே பேசாமல் குளத்திற்குச் சென்று குவளை மலர்களைப் பறித்தான். அந்த அழகிய பூக்களின் அரும்புகளை விரித்து, என் முதுகுப்புறம் வந்து கூந்தலைக் கையிலெடுத்து அதில் மலர்களைத் தாழ்ந்து தொங்கும் படியாகச் சூட்டிவிட்டான். நான் எதுவும் கேட்காமலே இதைச் செய்தான். அவனும் ஒரு வார்த்தை பேசவில்லை. பின்னர் முன்புறமாக வந்து நின்று என் மார்புகளையே நோக்கி நோக்கி எதையோ நெடுக நினைந்தவனாக நின்றான். பிறகு என்ன நினைத்துக் கொண்டானோ அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டான்.... கண்டதெற்கெல்லாம் ஆரவாரிக்கும் இந்த ஊர், இதைப் பார்த்திருந்தால் என்னவெல்லாம் பேசும் தோழி?"

தண்கயத்து அமன்ற
ஒண்பூங் குவளை
அரும்பு அலைத்து இயற்றிய
சுரும்பு ஆர் கண்ணி
பின்னுப்புறம் தாழக்
கொன்னே சூட்டி,
நல்வரல் இளமுலை நோக்கி,
நெடிது நினைந்து
நில்லாது பெயர்ந்தனன் ஒருவன்...

(அகம்:180:5-9)

## நச்சு நகரம்

வளி மாசடைதலால் உலகிலேயே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நகரங்களில் பங்களாதேஷ் தலைநகரமான டாக்காவும் ஒன்று.


இந்த நகரில் சுமார் 3 லட்சம் வாகனங்கள் தினசரி நடமாடுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை மிகவும் பழைய வாகனங்கள்.

இவை வெளியிடும் புகையுடன், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் அதிகளவு காபன் கலந்த புகையும் சேர்த்து டாக்கா நகரின் சுற்றுப்புறச் சூழலை நச்சுப் புகையால் நிரப்பியிருக்கின்றன.

இதன் காரணமாக இந் நகரில் சுவாசம், நுரையீரல் சார்ந்த நோய்கள் வேகமாகப் பரவுகின்றன.

சுவாசக் கவசங்களை முகத்தில் அணியுமாறு சுகாதார அதிகாரிகளால் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறான சுவாசக் கவசங்களை விற்பனை செய்வது டாக்கா நகரில் பிரபலமான வியாபாரம்.


அத்தகைய சுவாசக் கவசங்களை விற்பனை செய்யும் சிறுவன் ஒருவன் அவற்றை அணிந்து கொண்டு காணப்படுகிறான்.



## விழிப்புணர்வு



பிரேஸிலின் தலைநகரமான பாசிலோனாவில் எயிட்ஸ் தொடர்பான சர்வதேச மாநாடு சமீபத்தில் நடந்து முடிந்தது. உலகெங்கிலுமிருந்து நூற்றுக் கணக்கான அரச பிரதிநிதிகளும் சமூக சேவை அமைப்புக்களின் உயர் மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டு எய்ட்ஸ் நோய் பரவுதலின் காரணமாக உலகம் எதிர்நோக்கும் சவால் குறித்து மாநாட்டின் போது விவாதித்தனர். மாநாடு நடைபெற்ற அரங்கத்திற்கு முன்பாக ஆணுறைகளால் தயார் செய்யப்பட்ட ஆடையொன்றைப் பெண் சிலையொன்றிற்கு அணிவிக்கிறார் பிறேஸிலியப் பெண் கலைஞர் அட்ரினா பேர்டினா. எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு, பிரசார வழி முறைகள் பற்றியும் இம்மாநாட்டின்போது ஆராயப்பட்டது.



## அதிர்ஷ்டம் காப்பாற்றியது

இந்தோனேஷியாவின் பாலி தீவுகளில் 200 பேரைப் பலிகொண்ட குண்டுத் தாக்குதலுக்கு ஒசாமா பின்லேடனின் அல்கய்தா இயக்கமே பொறுப்பென்று விசாரணையாளர்கள் கூறிவரும் நிலையில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து ஆபிரிக்க நாடான கென்யாவில் இரட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



கென்யாவிலுள்ள இஸ்ரேலியருக்குச் சொந்தமான மொம்பாசா ஹோட்டலில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் குறைந்த பட்சமாக 7 பேர் கொல்லப்பட்டார்கள். பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றொரு தாக்குதல் முயற்சி மயிரிழையில் குறி தவறிப் போனது.

கென்யாவிலிருந்து இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு டெல் அவிவ்வை நோக்கி வந்துகொண்டிருந்த இஸ்ரேலிய விமானமொன்றிற்கு கென்ய வான்பரப்புக்குள் வைத்து றொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆனால், குறி தவறியது. விமானத்தில் சுமார் 200 பேர் வரை இருந்தனர். தாக்குதலிலிருந்து தப்பிய விமானம் தலைநகர் டெல்அவிவ் விமான நிலையத்தில் பாதுகாப்பாகத் தரையிறங்கியது. இந்த விமானத்தில் வந்திறங்கிய தனது கணவரை ஆரத்தழுவி வரவேற்கிறார் மனைவி.

தாக்குதல் நடைபெற்ற ஹோட்டலின் முன்புறத்தில் கார்கள் எரிந்து கிடப்பதையும் பொலிஸார் விசாரணை மேற்கொள்வதையும் காண்கிறீர்கள். ■



[illegible]-பிரியாமணி
படம்: ரோமியோ ஜூலியட்

## ஆஹா எத்தனை அழகு

சத்யராஜின் 'மாறன்' வித்தியாசமான கதை அமைப்பைக் கொண்ட படம் என்று எல்லாத் தரப்பினராலும் பாராட்டப்பட்டது.

இதையடுத்து இப் படத்தைத் தயாரித்த பங்கஜ் மேத்தா புதிய படம் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். இந்தப் படத்துக்கு 'ஆஹா எத்தனை அழகு' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது.

இதில், மிதுன்-சார்மி கதாநாயகன்- கதாநாயகியாக நடிக்கிறார்கள். மிதுன் இப்போது 'சும்மாவம்' என்ற படத்தில் நடித்து வருகிறார். சார்மி டி.ராஜேந்திரின் 'காதல் அழிவதில்லை' படத்தில் சிலம்பரசன் ஜோடியாக நடித்து இருக்கிறார்.

ரகுவரன் முக்கிய பாத்திரம் ஒன்றில் நடிக்கிறார். ராஜன் பி.தேவும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

'மாறன்' படத்தில் சீதா மறு பிரவேசம் செய்தது போல், 'ஆஹா எத்தனை அழகு' படத்தில், ரஞ்சிதா மறு பிரவேசம் செய்கிறார. மற்ற நடிகர்- நடிகைகள் தேர்வு நடைபெறுகிறது.

## செரீன் நன்றாக ஒத்துழைத்தார்

சமீபத்தில் 'ஸ்டூடண்ட் நம்பர் 1' படத்தின் பாடல் காட்சிககாக செரீனுடன் ரஷ்யா சென்று வநத சதயராஜ் மகன் சிபிராஜிடம், இது உங்கள் முதல் படமாயிற்றே... கதாநாயகியுடன் காதல காட்சியில் நடிக்கும் போது கூச்சப் பட்டீர்களா?' என்று கேட்டபோது,

"நான் ஒரு இளைஞன். பிறகு ஏன் காதல் காட்சியில் ஹீரோயினைக் கட்டிப் பிடிக்கத் தயங்க வேண்டும்?

எனக்குக் கூச்சப்படுவது எல்லாம் பிடிககவே பிடிக்காது. அது எவ்வளவு நெருக்கமான காதல காட்சி என்றாலும் தயங்கமாட்டேன்! ஒரு நடிகனாகத்தான் இதைச் சொல்கிறேன். உடனே இதற்குக் கண், காது, மூக்கு, நாக்கு வைததுக் கிசுகிசு எழுதிவிடாதீர்கள்! ரஷ்யாவில் நடந்த 'ஸ்டூடண்ட் நம்பர் 1' படப்பிடிப்பில் எனக்கு ஜோடியாக நடித்த 'துள்ளுவதோ இளமை' செரீன் நன்கு ஒத்துழைப்புக் கொடுதது நடித்தார். அதனால் எந்தவிதப் பிரச்சனையும் இல்லாமல் நடிக்க முடிகிறது என்பது உண்மை!" என்ற உண்மையைப் போட்டுடைத்தார்.



சிலம்பரசன்-சார்மி
படம்: காதல் அழிவதில்லை

## லஞ்சம் வாங்காத பொலிஸ் அதிகாரியாக 'ராமச்சந்திரா'வில் சத்யராஜ்

கெட்டவன்னு பேர் எடுக்கிறது ரொம்ப ஈஸி. நல்லவன்னு பேர் எடுக்கிறது ரொம்பக் கஷ்டம். இந்தப் பழமொழியை அடிக்கடி சொல்பவன், போலீஸ் உயர் அதிகாரி ராமச்சந்திரன்.

ராமச்சந்திரனின் பிறந்த நாளுக்கு, அவனது வீட்டில் பிரமாண்டமான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கேக் வெட்டப்பட்டு நண்பர்களுக்கு விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு கும்பல் உள்ளே நுழைந்தது. ராமச்சந்திராவிடம் ஒரு பெரிய பார்சலைக் கொடுத்து, சொடுக்கு சொக்கலிங்கம் கொடுத்திட்டு வரச் சொன்னார் என்றார்கள்.

கோபப்பட்ட ராமச்சந்திரா, "ஒரு திருடன் இன்னொரு திருடனுக்குக் கொடுத்தால் பங்குன்னு சொல்லலாம். ஒரு கொள்ளைக்காரன் போலீசுக்கு கொடுத்தால் லஞ்சம்ன்னு சொல்லணும். நான் லஞ்சம் வாங்கறதில்லேன்னு போய் உங்க தாதா சொடுக்குக் கிட்டே சொல்லுங்க. கை நீட்டி வாங்கிவிட்டு, கை கட்டி நிக்கிற பழக்கமெல்லாம் இந்த ராமச்சந்திரா வாழ்க்கையிலேயே இல்லை. கொடுத்திட்டுப் போக வந்த நீங்க வாங்கிக்கிட்டுப் போங்க" என்று எல்லோரையும் அடித்து விரட்டினார்.

இப்படியொரு காட்சி சத்யா ராமமூர்த்தி வழங்க, 'ராமச்சந்திரா' படத்துக்காகப் படமாககப்பட்டது.

ராமச்சந்திராவாக சத்யராஜ், சொடுக்கு சொக்கலிங்கமாக ஆசிஷ்வித்யார்த்தி நடித்தனர். மற்றும் பாண்டியராஜன், ஸ்ரீமன், பொன்னம்பலம், சிவராம் காந்தி, ராஜ்கபூர், விஜயலட்சுமி, அபிநயஸ்ரீ, தீபா வெங்கட் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

## சிம்புவின் டிமாண்ட்

சிலம்பரசனுக்கு ஏற்கெனவே அட்வான்ஸ் கொடுத்து வைத்திருந்தார், ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிசந்திரன். தற்போது அதை திருப்பிக் கொடுக்கச் சொல்லி விட்டாராம் டி.ராஜேந்தர். தீபாவளி அன்று உதயம் தியேட்டரில் படத்தை ரிலீஸ் செய்வதில் ஏற்பட்ட தகராறுதான் காரணமாம்.

கடைசியில் தன்னுடைய 'காதல் அழிவதில்லை' படத்தைத் திரையிட்டு வெற்றி பெற்றது டி.ஆர் தான் என்றாலும், அந்த மோதலால் ஏற்பட்ட கோபம் அடங்கவே இல்லையாம்!



ஷாம்-மீராஜாஸ்மின்
படம்: பாலா

## கமல்-சிம்ரன் மீண்டும் ஜோடியாய்...

சென்னையில் நடந்த ஆடியோ கேசட் விழாவில் கமலஹாசனும், சிம்ரனும் சேர்ந்து வந்து காண்போரைக் கவர்ந்திழுத்தனர்.

டாக்டர் ஸ்ரீகாந்த் என்பவர் தயாரித்துள்ள 'காதல் கொண்டால்' என்ற ஆடியோ கேசட் ஆல்பம் சென்னையில் வெளியிடப்பட்டது.

போட் கிளப்பில் நடந்த இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கமலஹாசன் கலந்து கொண்டார்.

அவருடன் சிம்ரனும் சேர்ந்தே வந்திருந்தார். இருவரும் அடிக்கடி பேசிச் சிரித்துக் கொண்டிருந்தது, பார்த்தவர்களை மிகவும் கவர்ந்திழுத்தது.

மாடர்ன் டிரஸ், கண் கண்ணாடி இல்லாமல் சாதாரண சேலையில், சிம்பிளாக சிம்ரன் வந்திருந்தார். அதேபோலவே கமலும் கோட்-சூட் போடாமல், மிகவும் சாதாரணமாக வந்திருந்தார்.

கமல், சிம்ரன் சேர்ந்து வருவது புதிதல்ல என்றாலும் கூட இப்போதெல்லாம் அடிக்கடி சேர்ந்து வர ஆரம்பித்துள்ளது ஏற்கனவே இருந்து வரும் வதந்தியைப் பெரிதாக்கும் விதத்தில் உள்ளது. பலருடைய கண்களை உறுத்திக் கொண்டும் இருக்கிறது.

## கிரண்-ஷெரீன் மோதல்

ஷெரீனுக்கு இருக்கும் கிராக்கியைப் பார்த்துக் கிரண் கடும் கோபத்தில் இருக்கிறார். கிரணுக்கும், ஷெரீனுக்கும் இடையே கவர்ச்சி காட்டுவதில் கடும் போட்டி நடந்து வருகிறது. 'ஜெமினி'யில் கவர்ச்சி காட்டுவதில் 'ஓ' போட வைத்து இரசிகர்களைக் கிறங் கடித்த கிரண் கைவசம் தற்போது ஏராளமான படங்கள் உள்ளன. கமலின் 'அன்பே சிவம்' படத்திலும் நடிக்கிறார் கிரண்.

'வில்லன்' படத்தில் மீனா இருக்கிறாரா என்று கேட்கும் அளவுக்கு அவரைத் தன் கவர்ச்சியால ஓரம் கட்டினார் கிரண். ஆனாலும் ஷெரீன் பெயரைக் கேட்டாலே எரிச்சலடைந்துவிடுகிறார் கிரண். தனக்கு ஒரே போட்டியாக அவர் நினைப்பது ஷெரீனை மட்டுமே. 'என்னிடம் இல்லாதது அவகிட்ட என்ன இருக்கு?' என்று தன்னைச் சந்திக்கும் நிருபர்களிடம் எல்லாம் கேட்கிறார் கிரண்.

**முகப்பில் (ஷாம்) காயத்ரி ரகுராம்**

# சினிவிசிட்

...பப புது... கதையாக... ரத்தில் இரு... 'பத்ரி'யில்... பூமிகா, ரோஜாக்... தமிழ் இரசிகர்கள் மத்... ஆதரவைப் பெற்றா... இதைத் தொடர்ந்... நிறையத் தமிழ்ப் பட வா... தன் தெலுங்கில் கிடை... அதிகம் சமபளமும், பட... களும் கூடக் கிடைத்த... இருந்தாலும் அவ... எல்லாம் ஏற்க மறுத்து... டுத் தெலுங்கிலே... அதிக கவனம் செலுத்... தினார் பூமிகா. இத... னால் தமிழில் வந்த... வாய்ப்புகள் திரும்பிச் சென்றுவிட்டன.

இந் நிலையில் தற்... போது தெலுங்கில்... அவருக்கு இறங்குமுக... ஏற்பட்டுள்ளது. கையில்... ஒரு படமும் இல்லா... நிலையில் தவித்து வருகிறார் பூமிகா.

சரி, தமிழ் பக்கம் பார்க்கலாம் என்று இங்க வந்தால் அவரைச் சீண்டுவதற்குக் கூட ஒருத்தரையும் காணோம். ஏற்கனவே... வாய்ப்புத் தர முன்வந்தவர்களை இவரே போய்ப்பார்த்... யாரும் கண்டுகொள... வில்லையாம். வெறுத்... போய்விட்ட பூமிகா ... வாய்ப்புக்காக கோடம்பாக்கத்தில் அலையோ அலையென அலைந்து வருகிறா...



ராஜேஷ்-சுருதி
படம்: அல்பம்

## பிலிம் நியுஸ் ஆனந்தனின் அரிய சினிமா சேகரிப்புக்களை தமிழக அரசு பொறுப்பேற்றது

தமிழ்த் திரைப்பட விவரங்கள் குறித்து பிலிம் நியுஸ் ஆனந்தன்(79) கடந்த 50 ஆண்டுகளாகத் தொகுத்து வைத்திருந்த அரிய சேகரிப்புகள் அரசுடமை ஆனது.

இதற்கான பரிவுத்தொகையாக இந்திய மதிப்பில் 10 இலட்சம் ரூபா ஆனந்தனுக்கு வழங்கப்பட்டது.

அவர் எழுதி வரும் 'சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்னும் நூலை வெளியிடுவதற்காக 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி யுதவியும் வழங்கப்பட்டது.

சென்னையைச் சேர்ந்தவர் பிலிம் நியுஸ் ஆனந்தன். தமிழ்த் திரைப்படத் துறையில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் தொடர்புப் பணியிலும் கலைத்துறை சார்ந்த பல்வேறு பணிகளிலும் ஈடுபட்டு வருபவர். 1931-ஆம் ஆண்டு முதல் 2001 வரையிலான தமிழ்த் திரைப்படங்கள் குறித்த புகைப்படங்கள், திரை உலகக் கலைஞர்கள் பற்றிய புத்தகங்கள், திரைப்படமான நாவல்கள், நாடகங்கள், தமிழ்த் திரைப்படங்கள் குறித்த பல்வேறு நூல்கள், ஏராளமான கலை உலகத் தகவல்கள் போன்ற அரிய சேகரிப்பைத் தனது கடும் உழைப்பால் சேகரித்து வைத்துள்ளார்.

தமிழ், தெலுங்கு, மலையாளத் திரைப்படங்களின் 14 ஆயிரம் ஸ்டில்களும் இவரிடம் உள்ளன.

இச் சேகரிப்புகள் எதிர்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் இவற்றைத் தமிழக அரசு பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இதற்கென ஒரு தொகை நிர்ணயித்துத் தனக்கு வழங்க வேண்டும் என்றும் முதல்வரிடம் கோரிக்கை விடுத்திருந்தார் ஆனந்தன்.

இக் கோரிக்கையைப் பரிசீலிக்க ஒரு நிபுணர் குழுவை அமைத்தார் முதல்வர் ஜெயலலிதா. பிலிம் நியுஸ் ஆனந்தனின் உழைப்புக்கும் உணர்வுக்கும் சேவைக்கும் அரசு கணிசமான தொகையை வழங்கலாம் என நிபுணர் குழு பரிந்துரைத்தது.

இதையடுத்து பிலிம் நியுஸ் ஆனந்தனின் சேகரிப்புகள் அனைத்தையும் அரசு வியாழக்கிழமை ஏற்றுக் கொண்டது. அவருக்குப் பரிவுத் தொகையாக ரூ. 10 லட்சத்துக்கான காசோலையை முதல்வர் ஜெயலலிதா வழங்கினார்.

தமிழ்த் திரைப்பட உலகம் குறித்து அறிய விரும்பும் எதிர்காலத் தலைமுறையினருக்கும் தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கும் இது பேருதவியாக இருக்கும்.

## ...கை'க்காக நடுக்கடலில் ...க்க இளைஞருடன் ஷாம் மோதல்...!


...ம் பிலிம்ஸ் என்ற புதிய பட நிறுவனம் மிகப் பிர...ான காதல் கதையை முற்றிலும் வித்தியாசமான ... தயாரித்து வருகிறது.

...க்குடி, ராமேஸ்வரம், திருச்செந்தூர் போன்ற ...எழில் கொஞ்சும் பகுதிகளில் முதற்கட்டமாக 21 ... வெற்றிகரமாகப் படப்பிடிப்பை நடத்தி முடித்து ...ற்கை படக்குழுவினர் சென்னை திரும்பியுள்ளார். ...மைப்பாளர் வித்யாசாகரின் இசையில் அனைத்துப் ...ருக்கான வரிகளையும் வார்த்தைகளில் இனிமைத ...ழைத்து எழுதி இருப்பவர் கனிக்காட்டுக் கமபன் ...டு:

... சூரியன், இரவில் நிலவு இரண்டு பிழையா? ... சரியா? என்று எழுதி இவர் அறிஞர்கள் மத்தியில் ...மானதொரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார். ...ந்தால் சொல்லி அனுப்பு உயிரோடு இருந்தால் ... என்று கண்ணீர் வழிய உயிரும் வழிய கரை...ந்து கிடக்கிறேன்" என்று பனித்துளியில் பூவைத் ... எழுதி ஷாம் பாட இளைஞர்களின் இளம் நெஞ்சை இதமாக உலுக்கியெடுத்து இருக்கிறார்.

பெண்ணே என் பயணமோ தொடங்கவே இல்லை
அதற்குள் அது முடிவதா விளங்கவே இல்லை
நான் கரையாவதும்- இல்லை நுரையாவதும்
வளர் பிறையாவதும் உன் சொல்லில் உள்ளதடி
உன் இறுக்கம்தான் என்னுயிரைக் கொல்லுதடி

என்று எழுதியும் மனதைக் கனக்கவைத்திருக்கிறாராம்!



அர்ஜுன்-கிரண்-காயத்ரி ரகுராம்
படம்: பரசுராம்

## ...ரின்

## மினிசினி

★ கோலிவுட்காரர்களுக்கு தேவயானி போரடித்துவிட்டார் போல, கையில் இருக்கும் படங்கள் கரைகிறதே ஒழிய புதிய படங்களின் வருகை குறைந்துவிட்டது. இதனால் கணவரை வைத்துத் தயாரித்து வரும் படத்தை விரைவில் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார். அதன் மூலம் மீண்டும் மார்க்கெட்டைப் பிடிக்க முடியும் என்று நம்புகிறார்.

★ சுந்தரா டிராவல்ஸ் படத்தில் நான்தான் ஹீரோ, முரளி வெறும் டம்மிதான் என்று எல்லோரிடம் கூறி வரும் வடிவேலு மலையாளத்து வினயன் இயக்கும் அடுத்த படத்தில் உண்மையிலேயே ஹீரோவாகிறார். மலையாளத்தில் திலீப் நடித்துப் படுபயங்கரமாக ஓடிய 'மீசே மாதவன்' என்ற படத்தின் ரீமேக்கில்தான் வடிவேலு ஹீரோவாக நடிக்கவுள்ளார்.

★ 'ஸ்டூடண்ட் நம்பர் 1' படத்தின் சில காதல் காட்சிகளில் சிபிராஜும், ஷெரீனும் மிக நெருக்கமாக நடித்துள்ளார்களாம். அப்பா சத்யராஜை முந்திவிடுவார் போல மகன் சிபி.

★ மீரா ஜாஸ்மினுக்கும், மலையாள டைரக்டர் ஒருவருக்கும் கொஞ்சக் காலமாக ஒரு 'இது' உள்ளது எல்லோருக்கும் தெரியும். இதனால் தமிழ்ப் படங்களில் புக் ஆகாமல், மலையாளப் படங்களாக புக் செய்து வருகிறாராம். அப்போதானே கேரளாப் பக்கம் இருக்க முடியும், காதலருடனேயே இருக்க முடியும்.

★ பிரசாந்த் நடிக்கும் 'ஜெய்' படத்தில் ஒரு பாடலுக்கு சிம்ரன் டான்ஸ் ஆடுகிறார். அதன் படப்பிடிப்பில் அவரது இடது கால் கட்டை விரல் நகம் பிய்ந்து இரத்தம் கசிய அதைப் பொருட்படுத்தாமல் நடனமாடி முடித்தார். பேச்சப் சொல்லும் நடிகைகளுக்கு மத்தியில் தொழிலை நேசிக்கும் நடிகை!

★ 'ஜெமினி' படத்தைத் தொடர்ந்து 'வில்லன்' படமும் வெற்றிப் படமாக அமைந்துவிட்டதில் மிகவும் உற்சாகமாகியிருக்கிறார் கிரண். சம்பளத்தை இரட்டிப்பாக்கிவிட்டதோடு ஏகப்பட்ட கண்டிஷன்கள் போடுகிறாராம்.



## கிளாமரை விரும்பும் விலாஸினி

'ஆண்டிப்பட்டி அரசம்பட்டி' என்ற படத்தில் கிளுகிளுப்பான ரோலில் நடித்துள்ள விலாஸினிக்கு கிளாமர் கேரக்டர்கள்தான் ரொம்பப் பிடிக்குமாம். தொடர்ந்து கவர்ச்சியாக நடித்து கோலிவுட் ரசிகர்களை கிளுகிளுப்பூட்டச் சபதமே எடுத்திருக்கிறார்.

ராமராஜனுடன் 'நல்ல மனசுக்காரன்' என்ற படத்தில் ஹீரோயினாக அறிமுகமானவர் விலாஸினி. அதற்குப் பிறகு விலாசம் இல்லாமல் போய் விட்டார். பார்த்தார், கவர்ச்சி அம்பைக் கையில் எடுக்கவே பட வாய்ப்புகள் கொட்டத் தொடங்கியுள்ளன.

பாண்டியராஜன், மன்சூர் அலிகான் ஆகியோருடன் 'ஆண்டிப்பட்டி அரசம்பட்டி' படத்தில் கவர்ச்சியைக் கொட்டி வரும் இவர் தொடர்ந்து கிளாமர் ரோல்களில் நடிக்கப் போவதாகத் தட்டிக் கூறுகிறார். இவரிடம் ஒரு குட்டிப் பேட்டி: கவர்ச்சியாக நடிப்பதில் தவறில்லை. அது அளவுக்கு மீறி மட்டும் போய்விடக் கூடாது (அட!). இப்போது ராஜு சுந்தரத்துடன் 'சதா' என்ற படத்தில் நடிக்கிறேன். அதிலும் ஓரளவு கவர்ச்சியான ரோல்தான். அதேபோல, அரசன் என்பவரின் இயக்கத்திலும் ஒரு கவர்ச்சி சப்ஜெக்டில் (!) நடிக்கிறேன். சிம்ரனுடன் 'கோவில்பட்டி வீரலட்சுமி' படத்தில் நடித்துள்ளேன் என்றார்.

## இரட்டை வேடத்தில் விஜய்

விஜய்க்கும் 'அந்த' ஆசை வந்துவிட்டதாம். பயந்துவிட வேண்டாம். எல்லாம் இரட்டை வேட ஆசைதான். 'வாலி'க்குப் பிறகு அஜித் இரட்டை வேடத்தில் நடித்த 'வில்லன்' நன்றாகப் போய்க்கொண்டுள்ளது. விடுவாரா விஜய். சரண் இயக்கத்தில் தான் நடிக்கவுள்ள அடுத்த படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கப்போகிறார். இதற்காக ஒரு வேடத்திற்கு வித்தியாசமான கெட்டப் போடவுள்ளாராம்.

இந்தப் படத்தை பாலசந்தரின் கவிதாலயா நிறுவனம் தயாரிக்கிறது. சரணை வைத்து பாலசந்தர் தயாரிக்கும் முதல் படம் இது. சரண் படத்தில் விஜய் நடிக்கும் முதல் படம் இது.



## மறக்க முடியாது..

பாசமென்னும் அவைதனிலே
படகான நட்புக்கள்
தீராத அலைகளினால்,
திசை மாறிச் சென்றாலும்
என் அன்பானவளை
மறக்க மாட்டேன்.

♥♥

கரு மேகத்தினுள்
மறைந்திருக்கும் மழைநீர்
கண்ணுக்குத் தெரிவதில்லை.
அதேபோல் என்னிதயத்தில்
புதைந்திருக்கும் உன்
மேல் இருக்கும் அன்பு
யாருக்குப் புரியும்?

♥♥

எந் நேரமும்
உன் புன்சிரிப்பும்,
இனிய குரலும்
என் மனதில் என்
உயிர் ஆவியாகுமட்டும்
மறக்க முடியாது...

கலாநிதி, குளக்கட்டு.

## வேதனையின் தேடல்

மழையின் துளிக்குள்ளே
உனைத் தேடுகின்றேன்,
மர்மமாய் மறைகின்றாய்.
நிலவின் வெண்மையிலே
உனைத் தேடுகின்றேன்,
விநோதமாய் விலகுகின்றாய்.
பூமியின் பசுமையிலே
உனைத் தேடுகின்றேன்,
மாயமாய் இருக்கின்றாய்.
இரவின் கருமையிலே
உனை உசுப்புகின்றேன்,
நிசப்தமாய் நிலவுகின்றாய்.
இறைவனின் சந்நிதியில்
உனைத் தரிசிக்கின்றேன்
அருவமாய் இருக்கின்றாய்
எங்கு போய் உனைத் தேட
இங்கு நீ இல்லாத போது
நிம்மதியே நினைவில் கொள்.
ஒருநாள் நீ வருவாய்
எனைத் தேடி
அன்று உன் வரவை
என்னால் கவியெழுத முடியாது.
சுற்றி இருப்பவர்கள் சொல்வார்கள்
"நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

ந.ரிஷா பன்னீர், வெதமுல்லை.

## காயங்கள்...

உறவுகளுடன் வாழ்ந்தவள்
தான் இவள்...
ஆனால் பாசம் என்றால்,
என்ன என்பதை புரியாமல்
வளர்ந்துவிட்டேன்.
உன்னைச் சந்தித்தபோது
தான் புரிந்தது எனக்கு
பாசம் என்றால் என்ன
என்று...
அன்று,
உன்னை ஒரு நிமிடம்
கூட பிரிய நினைத்ததில்லை.
ஆனால்,
இன்று,
உன்னை ஒரு நிமிடம் நினைத்தால்
கூட என் உள்ளம்
எரிமலையாக வெடிக்கின்றது.
உன்னால் எனக்குள்
ஏற்படுத்தப்பட்ட காயங்கள்
இன்று அடையாளச் சின்னமாக
வியாபித்துக் கொண்டிருக்கின்றது.
இருந்தும்...
என்னைப் பாசத்தால்
ஏழையாக்கிய பெருமை
என்றும் உன்னைத்தான்
சேரும்.

எஸ்.சுமி, வெள்ளவத்தை.

## இரத்தம் சேராத சொந்தம்

அன்பின் நண்பியுனை
அருகிருந்து அள்ளிக்கொள்ள...,
ஆசையுண்டு நெஞ்சுக்குள்ளே...,
ஆனாலும்,
சொந்தம் சொந்தமென்று
நெஞ்சம் சுமக்கையிலும்
வஞ்சம் உரைக்கிறதே...
வக்கிர உலகமும் தான்,
நெஞ்சம் ஏற்றிட்ட
சொந்தம் தளிர்க்கின்றது...அதை
நெஞ்சில் மறைக்கின்றது.
நாளை மலர்கையிலே
மரணம் தொலைந்திருக்க...எமை
மனதில் ஏற்று
சுற்றம் மகிழ்ந்திருந்தால்...எம்
முற்றம் உவகையிலே
நித்தம் விழாக்காணும்,

♟♟

இரத்தம் சேராது
பந்தம் கண்டிருந்த
சொந்தம் நோக்கிவிட்ட
சுற்றம் வியக்கணுமே
சுழலும் நாவடக்கி
உறவு இதுவென்றே
உணர்வுடன் கூறிக்கொண்டு
உண்மை யேற்கணுமே.
எப்படி வந்தது
இப்படிச் சொந்தம்...?
ஓ...
மனதில் மலர்வதே
மரணம் வரை...!

சி.மதியழகன், திக்கம்.

## தேன் கிண்ணம்

## தந்துவிடு என்னிடம்....

கவிவரிகளைத் திறக்க
நான் கவிஞனும் அல்ல
அதைத் தண்டிக்க நீ
கடவுளும் இல்லை...!
அதனால், துணிந்து விட்டேன்
சில கவித் துளிகளை வடிக்க...

✗✗

பெண்ணே...! என் அன்பை
உன்னிடமே தந்துவிட்டேனே...
அது போதாதா உனக்கு,
ஏன் என் நித்திரையும்
பறிக்கிறாய்...?

✗✗

அன்பே என் உயிரை
உன்னிடமே விட்டு விட்டேன்...
அது காணாத உனக்கு,
ஏன் என் நிம்மதியையும்
எடுக்கிறாய்...?

✗✗

கண்ணே...உனைக் கண்ட
நாளிலிருந்து
நிம்மதியையே, நான்
துயிலும் பாயில்தான்
உணர்ந்தேன்.

✗✗

அதையும் நீ
அபகரிக்க வேண்டுமா?
வேண்டாம் அன்பே!
அன்பை மட்டும்
நீ வைத்துக்கொண்டு
மிகுதி இரண்டையும்
தந்துவிடு என்னிடம்

மா.ரவி, உடையார்கட்டு.

## ஒரு தலைக் காதல்

உன் நினைவுகளை(த்)
துரத்தித் துரத்தியே
தூர்ந்து போனது
என் தூக்கம்!

✗✗

இன்னும்
எத்தனை நாட்களுக்கு
என்னை
ஏங்க வைக்கப் போவதாய்
உத்தேசம்...?

✗✗

புவனா...!
சாம்ராஜ்ஜியங்களைத்தான்
எனக்குத் தரவில்லை.

✗✗

சந்தோசங்களையுமா...?

✗✗

தோல் வதங்கி
உள்ளம் உருகி
மெழுகாய்க் கரைந்த
பின்னுமா இளகவில்லை
உன்னிதயம்...?

✗✗

என் காதல்
எடுபடாதெனத் தெரிந்தும்
ஏதோ ஒருவித
தைரியம்

✗✗

ஒருவேளை
நீ சம்மதித்து விட்டால்...!

✗✗

புவனா...!
உன் காதருகே வந்து
என் காதலை(க்)
கத்திச் சொல்லிவிட வேண்டும்
போலொரு வெறி!

✗✗

உன்
பாதச் சுவடுகளின்
பூஜைகளே என்னை(ப்)
புறக்கணித்த பின்

✗✗

காதுகள் மட்டும்
எப்படி என்னை(க்)
கட்டித்தழுவிக் கொள்ளும்!

✗✗

நீ பொற்சிலை
நானொரு போக்கிரி!

✗✗

தழுவிக் கொள்ளும்
தூரத்தில் இருந்தாலும்
தண்டவாளங்களைப்
போலத்தான்
நம்மால் தரிசித்துக்
கொள்ள முடியும்!

✗✗

கிட்டாத உனக்காய்
வட்டமிட்ட என்
வாலிபத்தை
கடிந்து கொள்வதைத் தவிர

✗✗

கண்ணீர் விடவா முடியும்...?

✗✗

வறண்ட என்
தேகத்திற்கும்
இருண்ட என்
விழிகளுக்கும்
இனியொரு தர்மம்
இருக்கத்தான் செய்யுமா...?

✗✗

அப்படியொன்றிருந்தால்
அப்போது
அழுது வைக்கிறேன்

✗✗

என் இதயமாவது
கொஞ்சம் ஈரமாக...!

✗✗

உன்
மகோற்சவத்தில்
ஊமத்தம் பூவாய்
ஒதுக்கப்பட்டுப் போனது

✗✗

என்
ஒரு தலைக் காதல்!

✗✗

புவனா...!

✗✗

ஒரு
பல்லக்கின் கனவோடு
படங்குக் கட்டிலிலேயே
முடங்கி
முடமாய்ப் போனது
என் மூச்சு!

✗✗

புவனா...!
சொந்தங்களும் ஏனைய
சொத்துக்களும்
உன்னை சுகத்தில்
ஆழ்த்த...!

✗✗

சோகமும்
சுமையும் மட்டும்
என்னைச் சுடுகாடுவரை
துரத்தும்!

மலைக்குயில்
து.பிரபாஹர், ஹப்புத்தளையூர்.



## காத(லி)
## (லால் அழி)ப்பவளுக்கு...

என்
மடியில் தூங்கி
நொடியில் என் உறக்க
நரம்புகளை அறுத்தவளே...

கருங்கூந்தலை
என் முகத்தில் தவழவிட்டு
என் பகலுக்கு
இருளடித்தவளே...

அன்று
உன் துப்பாட்டாவில்
என் வியர்வை துடைத்தாய்
இன்றும்
உன் துப்பட்டாவை தருவாயா?
என் வியர்வை துடைக்கவல்ல
என் கழுத்தை கட்டிப்பிடித்து
உயிரை துடைக்க!...

ஒற்றை ஐஸ்கிரீமை
இருவரும் குடித்தபோது
"பிடிக்கவில்லை" என்றிருந்தால்
உன்
உமிழ்நீரை சுவைத்தவாறே
உயிர் துறந்திருப்பேனே...
"முடியாது"என்று சொல்ல
ஏன் ஒரு
முழுப்பக்க கட்டுரை
"ஒழிந்துபோ" என்று
ஒற்றை வரியில்
சொல்லியிருந்தால்
புரிந்திருப்பேனே...

என்னவளே...
இதற்கு-பதில் அனுப்பு
இல்லை
இதை- எமனுக்கு அனுப்பு
அவனாவது
என்னை காதலிக்கட்டும்!
காதலால் அழிக்கட்டும்!

திவ்யப்ரியன், மஸ்கெலியா.

## பேனா நண்பர்கள்



பெயர்:
ஏ.எல்.ஏ. சிராஜ் முகமட்
வயது: 20
முகவரி: [illegible]
டீ சில்வா மாவத்தை,
கொலன்னாவை.
பொழுது போக்கு:
பத்திரிகை. வானொலி.



பெயர்: பி.மோகன்
வயது: 25
முகவரி:
இல. 19,
5ம் குறுக்குத் தெரு,
புத்தளம்.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்: சு.சுதேஸ்
வயது: 21
முகவரி:
1ம் வட்டாரம் சல்லி,
சாம்பல்தீவு,
திருகோணமலை.
பொழுது போக்கு:
விளையாட்டு, ரீவி.

## பிரிவு

தூரத்தில் நீ இருக்க துடித்துப்
போகுதடா என் இதயம்
பிரிந்தும் பிரியாத பிரிவொன்றை
நிதமும் சந்திக்கின்றோமடா
எம் உறவின் இடையில் ஏற்படும்
விஷமமான இந்த இடைவெளிக்கு
காரணம் என்னவென்று இனம்
காண முடியாமல் தவிக்கின்றேனடா
பிரிவில்லா நல்ல உறவொன்று
எமக்கு கிடைக்க தினமும்
பிரார்த்திக்கின்றேன் இறைவனிடம்
பிரிவின் சோக அனல்
எம்மைத் தீண்டும் போதெல்லாம்
ஏனிந்த வாழ்க்கை? என்று
இரத்தக் கண்ணீர் வடிக்குதடா
என் இதயம்!

ரி. மேகலா, இறக்குவானை.


## நினைத்து, நினைத்து சிரிக்க



அதிகாலை நேரத்தில் ஒருவர் 'வாக்கிங்' போய்க் கொண்டிருந்தார். எதிரே ஒரு வங்கி முகாமையாளர் வந்தார். வந்தவர் அவரைப் பார்த்ததும்

"ரொம்ப நாட்களாக உங்களிடம் கேட்க வேண்டும் என்று நினைத்தேன். நீங்கள் ஏன் எங்கள் வங்கியில் ஒரு கணக்குத் தொடங்கக் கூடாது?" என்று கேட்டார். அதற்கு அவர் "நான் என் வீட்டு உண்டியலில் சேர்த்து வைக்கிறேன்" என்றார்.

அதுக்கு வங்கி முகாமையாளர் "உண்டியலில் சேர்த்து வைத்தால் மாதா மாதம் வட்டி கிடைக்காதே"என்று சொல்ல உடனே அவர் "இல்லையில்லை. மாதா மாதம் வட்டியையும் உண்டியலில் போட்டுவிடுவேன்" என்றாராம் கம்பீரமாக.



கடை முதலாளி ஒருத்தர் தனது கடையிலுள்ள சில பொருட்கள் திடீரென விற்பனையாகியிருப்பதைக் கவனித்து, கடைப் பொறுப்பலிருப்பவரை விசாரித்தார்.

**முதலாளி:** நாலு மாசமா பூஞ்சணம் பூத்திருந்ததே, வெண்ணெய் அதை யார் வாங்கியது?

**சிப்பந்தி:** காஞ்சனை அம்மாள்.

**முதலாளி:** கெட்டுப் போன முட்டைகள் நான்கு இருந்ததே. அவற்றை வாங்கிக் கொண்டு போனது யார்?

**சிப்பந்தி:** காஞ்சனை அம்மாள்.

**முதலாளி:** மேலே பளபளப்பாகவும் உள்ளே அழுகியும் இருக்குமே அந்த பழைய வெங்காயங்களை அள்ளிக் கொண்டு போனது யார்?

**சிப்பந்தி:** காஞ்சனை அம்மாள்!

முதலாளி சிப்பந்தியை அவசரமாகக் காஞ்சனை அம்மா வீட்டுக்கு அனுப்பி, "எங்க முதலாளியை இன்று உங்க வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தீர்களாமே. அவருக்கு உடல் சரியில்லை. வர முடியாது" என்று அந்த அம்மாவிடம் தகவல் தெரிவிக்கச் சொன்னார்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

காத்திரமான கவிதைகளை வெளிக்கொணர்வதில் சிற்றிதழ்களின் பங்களிப்பு, ஈழத்திலும் சரி தமிழகத்திலும் சரி எப்போதுமே குறிப்பிடும்படியாகத்தான் இருந்து வருகின்றது. சிற்றிதழ்கள் சிலவற்றில் சிக்கிய சில கவிதைகள் இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக.

## தொலைந்தவை

பாண்டியாடத் தெரியாதென
வீடியோ கேம்ஸுக்கு ஓடினாள்
பம்பாயிலிருந்து வந்த மாமா பெண்.
கிட்டிப்புள் ஆடாமலே
கம்ப்யூட்டர் எஞ்சினியராகிவிட்டான்
என்னோடு படித்த கணேசன்
பிரபந்தம் மறந்துவிட்டு
பாரிஸ் போன மகனின் கடிதத்திற்காய்
ஈஸிசேரில் காத்திருப்பார் நரசிம்மாச்சாரி
திருமண் இட்ட அடையாளம் மட்டும்
அழியாது தெரியும் லேசாய்...

மழையில் நனைந்தால்
உடம்புக்காகாதென்று
உள்ளே விரட்டுவாள் அம்மா
கெட்ட வார்த்தைகளைப் பேசியே
பஞ்சாயத்து முடிக்கும் தாத்தாவிற்கும்
வயசாச்சு.
முலையில் பழந்துணிகளோடு அவரும்
அரசியல் கொடிகள் ஏழெட்டு பறக்கின்றன.
ஏற்றியவர் ஒவ்வொருவரும்
கட்சி மாறியதறியாமல்
சருகை உதிர்த்து பூமியை மூடும்
வேப்பமரத்தை வெட்டியாயிற்று
நல்ல விலைக்கு...
ஈரப் புடவை உடலை அழுந்த
தெருவை அடைக்க
குளித்துத் திரும்பும் குமரிப் பெண்களும்
காணாத சூனியம் தெருவெல்லாம்
கிழக்கின்றி இருட்டுக்குள் தவிக்கும்
பிள்ளையாருக்குத் துணையாய்
எல்லோரும் எதையோ
தொலைத்ததுபோல்
சந்தோசம் தொலைத்த நான்

நா. விச்வநாதன்.

## சர்க்கார் கட்டட அணில்

திமிங்கில வயிற்றின்
உட்புறமாய்
கசகசத்த கட்டிடத்தில்
புதுசாக வந்த அணில்
காகிதம் கொரித்து
பலகைகள் தின்று
பெண்கள் கழிவறையில்
காத்திருந்து பயமுறுத்தி
பணிபுரிந்த நேரம் போக
பாக்கி நிமிடங்களில்
சீரான இடைவெளியில்
வால் தட்டிக்
குரல் காட்டும

எம். யுவன்.

## மோகம்

வாடைக் காற்றுக்கு
ஈந்தது போக
மீந்த உடம்பை
போர்வை போர்த்தி
புரண்டு படுக்கும்
அருகாமை மேனியின்
வேர்வை நெடி
நாசிப் பற்றில்
பாம்பென ஏற
உயிரில் பரவும்
ஒரு பெருந் தீ

மகரந்தன்.

## நோற்றாள்

நீ எழுதும் கடிதம், நீ எழுதும் கடிதம்
போலவே இல்லை என்கிறாள்
அம்மா, ஈதெல்லாம் என்னைக்
கேட்டுக்கொண்டு எனக்குள் முளைத்த
ஞாபகம் எனக்கும்தான் இல்லை.
என் சிந்தனையில் சிக்கல்
என் நடையில் பிரத்யேகம்.
என் மொழியில் கடினம்
நீ வளர்ந்து பெரியவனாகி
விட்டாய் என்கிறாள்.
அவள் வாயால் இதைக் கேட்பது என்பது
எத்தனை துரதிர்ஷ்டவசமானது.

பா. வெங்கடேன்.

## சிறப்புக் கவிதை



## உடம்பு

நாங்கள் வயதுக்கு வந்திருந்தபோதும்
இப்படித்தான் ஒருநாள்
அவள் அப்பாவின் நோய் பற்றியும்
பாதியில் நின்ற படிப்பு பற்றியும்
அவளைப் பெண் கேட்டு வந்த
கோணல் மூஞ்சிக்காரனைப் பற்றியும்
இன்னும்
அதைப்பற்றியும் இதைப்பற்றியும்
பேசிக்கொண்டு நின்றோம்.
ஆனால் அது தொடரவில்லை
"ஆம்பளையோடு என்னாடி பேச்சு"
என்று
தொடையில் அவள் சூடு வாங்கியபின்
இன்றோ
ஒதுங்கிக்கிடக்கும் மாராப்பு பற்றியும்
ஆம்பளையோடு பேசுவதன்
ஆபத்து பற்றியும்
அக்கறையின்றி
நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தாள்
அவள் கணவன் பற்றி
என் மனைவி மக்கள் பற்றி
இன்னும்
அது பற்றி இது பற்றி
சர்வ சுதந்திரத்துடன்.

இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அம்மா நான் நலமா?



**பி**றந்ததிலிருந்து குழந்தைக்கு ஐந்து வயதாகும் வரை என்னென்ன செய்யலாம் என்று அந்தக் காலப் பெரியவர்கள் ஒரு பெரிய பட்டியலே போட்டிருப்பார்கள். அவற்றைக் காரணம் புரியாமலேயே பல வீடுகளில் இன்னமும் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். சில பரம்பரையான பழக்கங்களுக்கு மருத்துவ உலகின் ஆதரவு உண்டு. ஏனென்றால் அந்தப் பழக்கங்களினால் நன்மை உண்டு என்று மருத்துவ ஆராய்ச்சிகள் விளக்கியுள்ளன.

வேறு சில பழக்கங்கள் தவறானவை. அவற்றை உடனடியாக விட்டுவிடுவதுதான் தாய், குழந்தை ஆகிய இரு தரப்பினருக்குமே நல்லது.

இந்த இரு துருவங்களையும் இப்போது பார்ப்போம்.

குழந்தை பிறந்து பதினொரு நாட்களிலிருந்து நாற்பது நாட்கள் வரை தீட்டு என்ற பெயரில் அம்மாவைத் தனியே ஒதுக்கி வைத்திருப்பார்கள். ஒரு விதத்தில் இது நல்லதுதான். வேறெந்தப் பரபரப்பும் இல்லாததால்அம்மாவால் அமைதியாகக் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியும்.

வேண்டிய ஒய்வும் கிடைக்கும். வீட்டில் பிறருக்கு ஏதாவது தொற்று வியாதிகள் தோன்றியிருந்தால் அது தாய்க்குப் பரவாமல் இருக்க இந்த தனிமைப்படுத்துதல் உதவும்.

பிரசவத்தைத் தாய் வீட்டிலேயே வைத்துக்கொள்வது என்ற பழக்கம் கூட தாய்க்கு நல்லதுதான். என்ன இருந்தாலும் ஒரு பெண்ணால் தன் அம்மா வீட்டில் எடுத்துக் கொள்ளும் சலுகைகளை மாமியார் வீட்டில் எடுத்துக்கொள்வது பெரும்பாலும் முடியாது. தவிர மகளின் ஆரோக்கியத்தை அவள் அம்மாவால் அதிகம் அறிந்துகொள்ள முடியும்.

குழந்தையால் தன் இமைகளைப் பிரிக்க முடியாத அளவுக்கு அவை ஒட்டிக்கொண்டிருந்தால் உடனே "கண்கள் பொங்குது. தாய்ப்பாலைக் கண்களின் மேல் ஊற்று" என்று பெரியவர்கள் யோசனை சொல்வார்கள். வெப்பத்தால் கண்ணிமைகளைப் பிரிக்க முடியவில்லையென்றால், பால் ஒரு திரவம் என்பதால் இமைகளைப் பிரிக்க அது நிச்சயம் உதவும். ஆனால், குறிப்பாக தாய்ப்பால் உஷ்ணத்தைத் தணிக்க உதவுமா என்பது மருத்துவபூர்வமாக இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. குழந்தைக்குக் கண்களில் வேறெந்த விதக் கோளாறும் இல்லை என்பது உறுதியாகத் தெரிந்திருந்தால் மட்டுமே கண்களில் பாலைப் பொழியுங்கள்.

ஃபீடிங் பாட்டில் எல்லாம் தொன்றுதொட்டு வந்தவையல்ல. பாலாடைதான் பாட்டிகளின் பேராதரவை நெடுங்காலமாகப் பெற்றிருக்கிறது. இது நல்லதுதான் ஃபீடிங் பாட்டிலை விட பாலாடையைச் சுத்தம் செய்வது எளிது. சுமாராகவே சுத்தம் செய்தால் ஃபீடிங் பாட்டில் ஆகிய இரண்டிலும் மாறி மாறி பால்குடிக்கும் குழந்தைகளுக்குச் சீக்கிரமே ஒன்றின் வாசம் பிடிக்காமல் போய்விடும். இந்தப் பிரச்சனை பாலாடையில் இல்லை.

அம்மாவுக்கும் குழந்தைக்கும் தண்ணீரே அதிகம் கொடுக்கக் கூடாது என்பவர்களும் இருக்கிறார்கள். அது தப்பு. தண்ணீர் நிச்சயம் நிறையக் கொடுக்க வேண்டும். ஆனால், அது தூய்மையானதாக இருக்கட்டும்.

பிரசவமான உடம்பு. பழங்கள் சாப்பிடவேண்டாம். குழந்தைக்குச் சளி பிடிச்சுடும் என்று கூறித் தாய்க்கு அருகே எந்தப் பழமும் அணுகவிடாமல் செய்யும் மூத்தவர்களும் இருக்கிறார்கள். இதெல்லாம் ஆதாரமில்லாத பயம். அம்மாவுக்கு ஆஸ்துமாவோ அலர்ஜியோ இல்லையென்றால் அவள் பழங்களைச் சாப்பிடுவது நிச்சயம் நல்லது. அவளுக்கும் சரி குழந்தைக்கும் சரி.

அதே போல பருப்பு வகைகளை மிகக் குறைவாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அந்தக் காலத்தினர் வற்புறுத்துவார்கள். ("இல்லையென்றால் காஸ்டிரபிள் வந்துவிடும்") நியாயமான அளவில் பருப்பை உணவில் சேர்த்துக் கொள்வது அம்மாவுக்கும் (அதனால் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கும்) நல்லதுதான்.

"கண்ணுக்கு மை அழகு" என்று கவிஞர்கள் கூறலாம். ஆனால், டாக்டர்களாகிய நாங்கள் கண்ணுக்கு மையிடும் பழக்கத்துக்கு எதிரானவர்கள். அதுவும் குழந்தைக்குக் கண்மை வேண்டாம். என்ன இருந்தாலும் மை என்பதன் அடிப்படை கரித்தூளாகிய கார்பன். இது சரியான முறையில் பதமாகி இருக்கவில்லையென்றால் கண்ணுக்குக் கெடுதல். எனவே வெளிப்பார்வைக்கு கண்களுக்கு அழகு கொடுத்தாலும் அது உண்மையில் கண்களுக்கு எரிச்சலைக் கொடுக்க வாய்ப்பு உண்டு.

## மிகச் சிறிய இதய வலி

**மா**ரடைப்பின் ஆரம்பமாக இருக்கலாம்

மாரடைப்பு திடீரென ஏற்படுகிற ஒன்று...ஆனால், மாரடைப்புத் தோன்றுவதற்கு ஒரு வாரமோ அல்லது அதற்கு முன்போ சில அறிகுறிகள் நோயாளிக்குத் தோன்றுகின்றன.

இவை பெரும்பாலும் இதய வேதனை என்னும் (அஞ்சைனா பெக்டோரில்) வடிவத்தில் தோன்றுகிறது. இந்த வலி தோன்றுகிற இடம், இந்த வலியின் இயல்பு, வலி ஆகிய யாவுமே மாரடைப்பு நோய் போன்று இருந்தாலும் இந்த வலி தோன்றி சில மணித்துளிகளில் அல்லது சில மணி நேரங்களில் மறைந்து விடுவது உண்மையான மாரடைப்பு நோய்க்கும் இதய வேதனைக்கும் இடையேயுள்ள திட்டவட்டமான வேறுபாடு ஆகும்.


இவ்வாறு முன் அறிவிப்பாக ஏற்படும் இந்த வலி, உண்மையான மாரடைப்பு நோயின் அறிகுறியாகத் தோன்றுகிற வலியோடு இணைந்து விடுகிறது. மாரடைப்பு நோயில் பொதுவாகக் காணப்படுவது தலைச்சுற்றல்; கிறுகிறுப்பு அல்லது மயக்கம் ஆகியனவாகும்.

அடிக்கடி தலைச்சுற்றல், கிறுகிறுப்பு, மயக்கம் ஏற்பட்டால் உடனே இ.சி.ஜி. பரிசோதனை செய்வது நலம். தலைச்சுற்றல், கிறுகிறுப்பு, மயக்கம் இவையே மாரடைப்பு நோயின் முதன்மை அபாய அறிகுறிகளாகப் பல நேரங்களில அமைந்துவிடுகின்றன.

பெரும்பாலும், இவை இதய இரத்த ஓட்டம் தொடர்பான அனைத்து நோய்களிலும் பிற பொதுவான நோய்களிலும் சாதாரணமாகக் காணப்படுகிற அறிகுறிகளாகும்.

மாரடைப்பு நோயின் இன்னொரு அறிகுறி உணவு உண்டவுடன் நெஞ்சில் ஏற்படுகிற ஒரு வசதிக் குறைவு. பெரும்பாலும் இத்தகைய நிலையை ஏதோ செரிமானக் கோளாறு எனப் பலர் கருதி இந்த அறிகுறியை அலட்சியப்படுத்தி விடுகிறார்கள். ஆனால், இந்த அறிகுறி ஏற்பட்ட நோயாளிகள் பலரை நன்கு பரிசோதித்து இ.சி. ஜி. என்னும் இதய மின்னலை பரிசோதனை போன்ற பரிசோதனைகளைச் செய்யும்போது இத்தகைய அறிகுறிகள் பலருக்கு இதய நோய் அதிலும் குறிப்பாக மாரடைப்பு நோய் இருப்பதாக பல நேரங்களில் தெரிய வந்திருக்கிறது.

குறிப்பாக, நடுத்தர வயதில் உணவு உண்ட பின்னர் நெஞ்சில் வலி அல்லது ஒரு பளு அழுத்துவது போன்ற உணர்வு நீண்ட காலமாக இருந்தால், அந்த அறிகுறிக்குப் போதிய முக்கியத்துவம் அளித்து நோயைச் சரிவரக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உடனடியாக ஈடுபட வேண்டும். சாதாரணமாக மருந்துகளைத் தாங்களாகவே சாப்பிட்டு தற்காலிகமான பலன் காரணமாக சரியான மருத்துவரிடம் உரிய பரிசோதனைகள் பெறுகிற வாய்ப்புகளை நழுவ



விடுகிற தவறு பல நேரங்களில் நேர்ந்து விடுகிறது.

யாருமே செரிமானம் தொடர்பாக வயிற்றில் ஏற்படும் வசதிக் குறைவுக்கு நீண்ட நெடுங்காலமாக மருத்துவரைக் கலந்தாலோசிக்காமல் இருப்பது எந்த விதத்திலும் நியாயமில்லை. இந்த நோய் அறிகுறி, நரம்பு மண்டலம், செரிமான உறுப்புகள், உள-உடல் தொடர்பு ஆகிய பல்வேறு துறை சம்பந்தப்பட்ட நோய்களால் இருக்கலாம். இத்தகைய அறிகுறியில் மாரடைப்பு நோய் போன்ற நோயின் அபாயம் தொடங்கிக் கொண்டிருப்பதையும் மறந்துவிடக் கூடாது.

அடுத்து மேல் மூச்சு வாங்குவது மாரடைப்பு நோயின் இன்னொரு முக்கிய அறிகுறி. செங்குத்தான ஓர் இடத்திற்கு ஏறிச் செல்லுதல், படிக்கட்டுகளில் ஏறுதல், ஊர்தியைப் பிடிப்பதற்காக ஓடிச் செல்லுதல், ஆகிய ஓரளவு கடின உழைப்பை ஆற்றும் நிலையில் மேல் மூச்சு வாங்குவது இயல்புதான்.

இயல்பான உடல் உழைப்பை விடக் கொஞ்சம் அதிக உடல் உழைப்பு ஒருவருக்கு மேல் மூச்சு வாங்குகின்ற நிலையை ஏற்படுத்துமானால் அவர் உடினடியாக மருத்துவ ஆலோசனைப் பெறுவது அவசியமான ஒன்றாகும்.

இவ்வாறு மேல் மூச்சு வாங்குவது சில விநாடிகளுக்கு, சில மணித் துளிகளுக்கு மேல் தொடர்ந்து இருக்குமானால் மருத்துவர் நம் இதயத்தையும் பிற உறுப்புகளையும் பரிசோதிக்கும் வரை அதிக உடல் உழைப்பில் ஈடுபடக் கூடாது.

சில நேரங்களில் ஆஸ்துமா நோயாளிக்கு இழுப்பதைப் போன்று மேல் மூச்சு வாங்குவதுண்டு. இவ்வாறு மேல்மூச்சு வாங்கினால் தீர்க்கமான மருத்துவப் பரிசோதனைக்கு நோயாளியை உட்படுத்த வேண்டும். நெஞ்சில் தோன்றுகிற வலி உண்மையிலேயே மார்டைப்பு நோயின் பிரதான அடிப்படையான முக்கிய அறிகுறியாகும். நெஞ்சுவலி என்று சொல்லும்போது நெஞ்சின்மேல் பகுதியில் தோன்றுகிற வலிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்காமல் இடது வலது கைகளில் தோன்றும் அல்லது உணவு உட்கொண்ட பிறகு நெஞ்சின் மத்தியில் தோன்றுகிற வலி ஆகியவற்றை மனதில் கொள்ள வேண்டும்

இந்த வகையான வலிகளை மிக இலேசாகக் கருதக்கூடாது. அலட்சியப்படுத்தவோ, புறக்கணிக்கவோ கூடாது. சுகாதாரமானவருக்கு இத்தகைய வலி தோன்ற முடியாது. ஆகவே வலி ஒருவருக்குத் தோன்றுகிறது என்றால் ஏதோ ஒரு தவறு நிகழப்போவதின் அபாய அறிவிப்பாக இந்த வலியை நாம் நினைக்க வேண்டும்.

மாரடைப்பின்போது உணர்விழத்தல், மார்பில் படபடப்பு போன்றவையும் நிகழக்கூடும். இரத்த சோகை, உணர்ச்சி வசப்படுதல் போன்ற பிற காரணங்களாலும் இதய நோயின்றி உணர்விழத்தல் நிலை உருவாகலாம். மார்பு படபடப்பு இதய நோயின் அறிகுறியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், இந்த இரண்டு அறிகுறிகளும் என்ன காரணத்தால் ஏற்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். ■


செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் 8a
பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-12-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

வை. சிவகலா
802, ஏகாம்பரம் வீதி, 3 கட்டை, உடப்புவெளி, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



சொன்ன மொழிதவறும் மன்னவ னுக்கே
- எங்கும்
தோழமை யில்லையடி தங்கமே தங்கம்;
என்ன பிழைகளிங்கு கண்டிருக்கிறான்?
- அவை
யாவும் தெளிவுபெறக் கேட்டு விடடீ!
சுப்பிரமணிய பாரதியார்-



பாப்பா முரசு சிறுகதை

# அன்பான எதிரி

புத்திமான் பலவானாவான். அதாவது, புத்திசாலி பலமில்லாவிட்டாலும் நினைத்த காரியத்தை முடித்துக்கொள்வான். ஒரு காட்டில் இப்படி ஒரு புத்திசாலி நரி இருந்தது. அதே காட்டில் ஓர் அழகிய மான் இருந்தது. அந்த மானை அடித்துத் தின்ன அந்த நரிக்குக் கொள்ளை ஆசை.

நினைத்ததை முடிப்பது அறிவுள்ளவனுக்கா முடியாது? நரி அதற்கான வழியை ஆலோசித்தது. தன்னைப் போலவே அந்த மானை அடித்து மாமிசத்தை உண்ண ஆசைப்படுவது யார், யார் என்று பட்டியல் போட்டது. அதில், ஒரு புலி, செந்நாய், ஓநாய், கீரி, எலிகள் எல்லாம் வந்தன.

முதலில் நரி, புலியைக் கவனித்தது. புலி மானைப் பிடிக்கப் பாய்ந்து சென்ற போதெல்லாம், அது வெகு வேகமாக ஓடி மறைந்து தப்பித்து வந்ததைப் பார்த்தது. இதனால் புலி ஏக்கம் கொண்டு தவித்ததும் புரிந்தது. அந்தப் புலியிடம் வந்த நரி முதலில் அதைப் புகழ்ந்தது."உமது வீரமென்ன உறுமல் என்ன..." என்றது. பிறகு, "அந்த மானைப் பிடிக்கத்தானே தினமும் முயலுகிறீர்? நம் நண்பரெல்லாம் கூட்டணியாகப் பேசினால் பிரச்சனை தீர்ந்துவிடும்" என்றது.

"சரி" என்ற புலியின் பெயரில் எல்லாம் கூடிச் சிந்தித்தன. நரியின் முறை வந்த போது, அது கூறியது. "புலியாரே, நான் ஒன்று சொல்லுகிறேன். தாங்கள் பாய்ந்து விரட்டும் போது மான் எச்சரிக்கை அடைந்து விரைந்து ஓடிவிடுகிறது".

"ஆமாம்..."

"ஆர்ப்பாட்டமாகப் புலியார் பாய்ந்து செல்லும் போதே, மான் அதை அறிந்து தப்பிவிடுகிறது."

"உண்மை" எல்லாரும் தன்னை நன்கு கவனிக்கின்றனரா? என ஒரு தடவை சுற்றிலும் பார்த்துவிட்டு நரி தொடர்ந்தது.

"முதலில் புலியார் போக வேண்டாம். எலிகளை அனுப்புவோம். அவற்றைக் கண்டு மான் அஞ்சாது. ஆனால், எலிகள் புல் வெளியில் படுத்திருக்கும் மானின் கால்களைக் கடித்து விட்டு வந்துவிடட்டும். பிறகு புலியார் போகட்டும். மான் எச்சரிக்கை அடைந்தாலும், காயப்பட்ட கால்களை ஊன்றி விரைவாக ஓட முடியாது. புலியார் எளிதாக மானைப் பிடித்து விடலாம்" என்றது.

ஒரு முறை நாவை, வாயின் நான்கு புறத்திலும் ஓட்டித் துழாவிய புலி, "இது நல்ல யோசனை" எனக் கூற, மற்றவையும் தலையை ஆட்டின.

அதே போல நடந்து கொண்டு அவை மானை மடக்கிக் கொன்றிழுத்து வந்து போட்டன.

புலி பாராட்ட, நரி அடக்கமாக, "நண்பர்களின் காரியத்தை முடித்துத் தருவதே எனக்கு மகிழ்ச்சி" என்றது. பிறகு, "அனைவரும் அருகில் உள்ள ஓடைக்குச் சென்று குளித்து வாருங்கள். இங்கே மானை நான் பார்த்துக் கொள்கிறேன். எல்லாரும் வந்ததும், சேர்ந்து சாப்பிடலாம்" என்றது இனிமையாக. அப்படியே அனைத்துப் பிராணிகளும் சென்றன.

புலி சீக்கிரமே வந்துவிட்டது. அது காணும்படி நரி துக்கமாக உட்கார்ந்திருந்தது. "புத்திசாலியான நரியே, சோகம் ஏன்?" என்று கேட்டது புலி.

"எனக்கு இந்த மானை உண்ண மனம் வரவில்லை" என்றது நரி.

"ஏன்?"

"நமக்குள் ஒற்றுமையே இல்லை. பாருங்கள், எலிகள் இப்போது இங்கே வந்தன. உம் வீரத்தை இகழ்ந்தன. அவற்றின் வீரத்தைப் புகழ்ந்து கொண்டன. இந்த மானை எலிகளால்தான் பிடிக்க முடிந்ததாம். புலியான உம்மால் பிடிக்க முடியவில்லையாம். இப்படி உம்மைக் கேலி பேசிய எலிகளின் உதவியால் கிட்டிய இந்த மான் மாமிசத்தை உண்ண எனக்குப் பிடிக்கவில்லை."

உடனே ரோசம் கொண்ட புலி, "நரியாரே, நல்ல வேளை இப்போதே கூறினீர். இந்த அற்பப் பிராணிகள் கூட்டே உதவாது. எனக்கும் இந்த மாமிசம் வேண்டாம். என் சொந்தச் சக்தியால் அடித்து எதையாவது சாப்பிட்டுக் கொள்வேன்" என்று போய்விட்டது. அடுத்து எலிகள் வந்தன.

"தோழர்களே, இப்போது கீரி இங்கே வந்தது. மான் மாமிசத்தில் நஞ்சு கலந்துள்ளது என்று சாப்பிடப் போவதில்லையாம்" என்றது நரி.

"கீரி சாப்பிடாவிட்டால் என்ன?" என்று குறுக்கிட்ட எலிகளிடம் நரி, "கீரி உங்கள் எல்லாரையும் தான் உண்ணப் போகிறதாம்" என்று கூற, எலிகள் விழுந்தடித்து ஓடிவிட்டன.

செந்நாய் வந்தது. ஓநாயும் உடனிருந்தது. இரண்டையும் பார்த்து நரி, "நீங்கள் செய்த தப்பு என்ன?"என்று கேட்டது.

ஒன்றும் புரியாமல் அவை,"ஏன் என்ன?" என்று கேட்டன.

அதற்கு நரி, "புலி கோபமாகச் சென்றுள்ளது. தன் மனைவி, குட்டிகளுடன் வந்து உங்களிருவரையும் அடித்து சாப்பிடப் போகிறதாம். எதற்கும் முன்னதாக உங்களிடம் உள்ள பிரியத்தால் நான் இதைச் சொல்லி வைத்தேன்" என்று கூறவே, அவை இரண்டும் பதறிக் கொண்டோடின.

கடைசியாகக் கீரி வரவே, "கீரியாரே வருக. இங்கே வந்த புலி, செந்நாய், ஓநாய், எலி எல்லாரையும் மாமிசத்தை உண்ணவிடாமல் சண்டையிட்டு விரட்டிவிட்டேன். நீர் எப்படி? என்னுடன் போரிடத் தயார்தானா? என்னை ஜெயித்தால் மானை உண்ணலாம். "முடியுமா?" என்றது. புலியை முதற் கொண்டு வென்ற நரியுடன்எப்படி சண்டையிட்டு உயிர் மீள்வது? என்று பயந்து கீரியும் ஓடிவிட்டது.

இப்படிக் கெட்டிக்காரத்தனத்தால் எல்லா மிருகங்களையும் விரட்டிவிட்டு அவற்றின் உதவியால் அடைந்த மானின் புலாலை, நரி தன் மனைவி மக்களோடு சுவைத்துச் சாப்பிட்டது.

எதிரிகளிடமும் அன்புடன் பழகியே, முடியாத காரியத்தையும் முடித்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அன்பான எதிரிகளும் உண்டல்லவா?

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **14.12.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **474**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 472**

பரிசுக்குரியவர்:
**பி. சர்மி,**
இராகலை தமிழ் மகா வித்தியாலயம், ஹல்கரனோய.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **எல். பாரத்,** இல. 32 செட்னோல் ரோட், பலங்கொட. | **ஜெ. சோபினி,** சைவமங்கையர்கழகம், கொழும்பு-06. |
| **நி. நிலோஜி,** 364, தேக்கவத்தை, வவுனியா. | **க. உமாபிரியா,** கொ/பு.அ.த.ம.வி. கொழும்பு-14. |
| **எம்.டி.எம். இஸ்ஸத்,** 7ஆர், றோயல் கல்லூரி, கொழும்பு-06. | **ஜெ. திருஷன்,** பாலர் பாடசாலை, சங்கானை. |
| **ம. துஷ்மிகா,** பாலர் பாடசாலை, தம்பலவத்தை. | **சி. பவித்ரா,** கொ. இந்துக்கல்லூரி, கொழும்பு-15. |
| **யு. நிலாவாசன்,** இ/மிஷன் பாடசாலை, அக்கரைப்பற்று. | **ஜெ. ஜனனி,** பாலர் பாடசாலை, கெழும்பு-10. |

## விடுகதைகளும் விடைகளும்

1. சின்னச் சின்னக் கண்ணம்மா ஊரு விட்டு ஊரு வந்து சேதி சொல்லும் கண்ணம்மா அவள் யார்?
2. காற்றில் அசைவான் காற்றில் இசைவான் அவன் யார்?
3. மோதிய பின் மின்னுவான் மின்னிய பின் வெடிப்பான் அவர்கள் யார்?
4. மண்ணுக்குள்ளே நகரும் கயிறு மக்கிப் போகாத கயிறு அது என்ன?
5. காலையில் பூத்தது மாலையிலும் பூத்தது செடியிலோ மரத்திலோ அல்ல, தரையில் அது என்ன?
6. நாளும் மெலிவான் நாளைச் சொல்வான் அவன் யார்?
7. வளைந்த கொம்பன் முட்டமாட்டான் வறுத்துத் தின்ன பலே ருசி அவன் யார்?
8. அதோ போகிறான் இதோ போகிறான் ஆள் தெரியவில்லை அசைவு தெரிகிறது அவன் யார்?
9. காடு மேடுக்கு அஞ்சாதவன் தண்ணீருக்குப் பதுங்குவான் அவன் யார்?
10. குட்டைப் பெண்ணுக்குப் பெட்டிப் புடவைகள் அவள் யார்?

**விடைகள்.**

1. கடிதம் 2. மூங்கில்
3. மின்னல் -இடி 4. மின் புழு
5. கோலம் 6. திகதிக் கூடு
7. முந்திரிக்கொட்டை 8. காற்று
9. செருப்பு 10. பூண்டு.

## கோள்கள் பற்றிய சில முக்கிய தகவல்கள்

| கிரகம் | சூரியனில் இருந்து சராசரி தூரம் (மில்லியன் மைல்கள்) | விட்டம் (மைல்களில்) | சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம் | தன்னைத் தானே சுற்ற எடுக்கும் காலம் (நாள்-மணி-நிமிடம்) | உப கோள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| புதன் | 36 | 3,032 | 88 நாட்கள் | 58-15-30 | 0 |
| வெள்ளி | 67 | 7,521 | 224.7 நாட்கள் | 243-00-00 | 0 |
| பூமி | 93 | 7,926, | 365.25 நாட்கள் | 0-23-56 | 1 |
| செவ்வாய் | 142 | 4,213 | 687 நாட்கள் | 0-24-37 | 2 |
| வியாழன் | 484 | 88,732 | 11.9 வருடங்கள் | 0-09-55 | 16 |
| சனி | 888 | 74,975 | 29.5 வருடங்கள் | 0-10-30 | 18 |
| யுரேனஸ் | 1800 | 31,763 | 84 வருடங்கள் | 0-17-14 | 17 |
| நெப்ரியூன் | 2800 | 30,603 | 164.8 வருடங்கள் | 0-16-6 | 08 |
| புளூட்டோ | 3600 | 1,413 | 247.7 வருடங்கள் | 6-9-18 | 01 |

## வாரம் ஒரு TOP TEN

**இவ்வாரம்:-** வாகனத் தயாரிப்பில் முன்னிலையில் இருக்கும் 10 நாடுகள்

| நாடு | கார் | வர்த்தக வாகனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. அமெரிக்கா | 6,083,227 | 5,715,678 | 11,798,905 |
| 2. ஜப்பான் | 7,863,763 | 2,482,023 | 10,345,786 |
| 3. ஜேர்மனி | 4,539,583 | 303,326 | 4,842,909 |
| 4. பிரான்ஸ் | 3,147,622 | 442,965 | 3,590,587 |
| 5. தென்கொரியா | 2,264,709 | 548,005 | 2,812,714 |
| 6. ஸ்பெயின் | 2,213,102 | 199,207 | 2,412,309 |
| 7. கனடா | 1,279,312 | 1,117,731 | 2,397,043 |
| 8. லண்டன் | 1,686,134 | 238,263 | 1,924,397 |
| 8. பிரேஸில் | 1,466,900 | 345,700 | 1,812,600 |
| 10. இத்தாலி | 1,317,995 | 227,370 | 1,545,365 |
| மொத்தம் | 37,318,281 | 14,194,882 | 51,513,163 |


## இந்த வாரப் புதிர்

| | |
|---|---|
| 2 | 75 |
| 63 | 14 |
| 25 | 52 |
| 42 | 35 |
| 43 | 33 |
| A | B |

மேலே உள்ள எண்கோலத்தை நன்கு அவதானித்து A, B எனும் இடங்களில் வரவேண்டிய எண்களைக் கண்டுபிடியுங்கள்.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# புகுந்த மனை

திருமலை வீ.என். சந்திரகாந்தி

விவாக வைபவ அமர்க்களங்கள் ஒருவாறு முடிவடைந்து விருந்தினர்கள் உறவினர்கள் அனைவருமே தத்தம் வீடுகளுக்கும் ஊர்களுக்கும் திரும்பிவிட்டார்கள்.

அம்மாவுக்குத்தான் கவலையை ஆற்ற முடியவில்லை....

"பிள்ளை... புகுந்த வீட்டுக்குப் போகிறதோடை முடியிறதில்லை... அங்கை நல்ல பெயர் எடுக்க வேணும். உன்னுடைய எதிர்கால சந்தோசம் மட்டுமில்லை.... எங்களுடைய நிம்மதிகூட உன்னுடைய கெட்டித்தனத்திலைதான் தங்கியிருக்குது."

அம்மா விழியோரம் கசிந்த நீரைத் துடைத்தபடி கூறினாள். அம்மாவுக்கு என்னை விட்டுப் பிரிவதற்கு மேலாக நான் புகுந்த வீட்டில், அங்குள்ளவர்களுடன் சமாளிக்கத் தவறிவிடுவேனோ என்கின்ற பயம்தான் அவளை அலையாய் அலைக்களித்தது.

முன்னர் என்றால் அம்மாவை விட்டு ஓரிரு நாள் பிரிவதென்றால் கூட எனக்கு உயிர் பிரிவது போல இருக்கும். கலியாணம் முடிந்த இந்த ஒரு வார காலத்தில் என்னில் ஏற்பட்டுவிட்ட மாற்றம் எனக்கே புதுமையாக இருக்கிறது.

"அம்மா... நீங்கள் கவலைப்படாதையுங்கோ. அவர் நல்லவர். தவிர நான் ஏற்கனவே அவருடைய அன்பைச் சம்பாதித்துவிட்டன். நான் அவர்களது வீட்டில் எப்படி நடக்க வேணும் என்பதை அவர் மூலமாகவே அறிந்து கொள்ளுவன்."

அவருடைய புத்தம் புதிய 'மஸ்டா காரில்' நானும் அவரும் மட்டும் காலையிலேயே புறப்பட்டு அவர்களின் இல்லத்தை அடைந்து விட்டோம்.

மாமி என்னை அணைத்து முத்தம் தந்து வரவேற்றார். இவரது சிறிய தங்கை எனது கையை வாஞ்சையுடன் பிடித்தபடி எனது அலங்காரங்களை சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். இப்போதுதான் மீசை அரும்பத் தொடங்கியிருந்த இவரது தம்பியார் ஒரு மூலையில் தள்ளி நின்று எனது பார்வை எதிர்ப்பட்டதும் முறுவலித்தான்.

அச் சமயம் ஒரு சிறுவன், அந்த வீட்டில் பணிபுரிபவனாக இருக்க வேண்டும் பதற்றத்துடன் ஓடி வந்தான்...

"அம்மா... இந்த அக்காவின்ரை புத்தம் புதிய செருப்பை எங்களுடைய ஜிம்மி தூக்கிக்கொண்டு ஓடி விட்டது!"

அவன் 'அக்கா' என்று குறிப்பிட்டது என்னைத்தான் என்பது அவனது பார்வையின் அசைவுகளிலிருந்து புரிந்தது. எனவே 'சான்டில்ஸ்' தான் பறிபோய்விட்டது என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

மாமிக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. எனக்குச் சமாதானம் சொல்வது போலக் கூறினார்.... "அது பிள்ளை எங்களுடைய பிழை இல்லை... அவருடைய பிழை. அவர்தான் நாயைக் கெடுத்து வைத்திருக்கிறார்!" மாமாவைத்தான் குறிப்பிடுகிறார் என்பது புரிந்தது. மாமா உயர் அரச தொழில் புரிபவர். 'அலுவலகத்திற்குச் சென்று விட்டிருக்கவேண்டும்...

மேல் மாடிக்குச் செல்லும் மெருகூட்டப்பட்ட படிக்கட்டுகள் வளைந்து அழகாக மண்டபம் வரை அமைந்து அந்த வீட்டின் செல்வச் செழிப்பை உணர்த்தியது.

புது மணமகளுக்குரிய செட்டுடன் எனது அதிகளவு நேரம் அவரது அறையிலேயே கழிந்தது. இவரது தங்கை தபோஜினியை அழைத்து அவளது பாடப் புத்தகங்களைப் பெற்று புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். தபோஜினி ஏழாம் ஆண்டில் படிக்கிறாள். இவரைப் போலவே நீண்ட மூக்கும் வெட்டான முகமுமாகத் துடிப்புடன் இருந்தாள்.

"உன்னை வீட்டில் மற்றவர்கள் எப்படி அழைப்பார்கள்?" வினவினேன்.

"தபோ குட்டி எண்டுதான் எல்லோரும் கூப்பிடுவினம்" கதையில் செல்லம் மிகுந்திருந்தது.

"உனது வகுப்பில் எத்தனை பேர் படிக்கிறார்கள்?"

"முப்பது பேர்"

"நீ என்ன ராங்க்?"

"ஐந்தாம் பிள்ளை"-கவலையுடன் கூறினாள்.

"ஏன் முதலாம் இடத்தைப் பிடிக்கவில்லை?"

"அது..." என்று இழுத்தாள். நான் விடவில்லை. தூண்டினேன். தயக்கத்துடன் கூறினாள்.... "அது... என்னிலை பிழை இல்லை. அப்பாவிலை தான் பிழை" கூறினாள். எனக்குத் திகைப்பாக இருந்தது.

"அது எப்படி அப்பாவில் பிழை ஆகும்?" கேட்டேன்.

"அம்மா சொன்னவா "அப்பா தான் எனக்கு செல்லம் தந்து எனது படிப்பைக் கெடுத்துவிட்டார்" என்று" எனக்கு ஏதோ உறுத்தியது...



மாலையில் மாமா அலுவலகத்தால் திரும்பியிருந்தார். வெள்ளை வெளேர் என்ற உடுப்பு. கழுத்துப் பட்டி. நன்கு பொலிஷ் செய்யப்பட்ட கறுப்புப் பாதணிகள். உயர் பதவி வகிப்பவர் என்பது பட்டெனத் தெரிந்தது. அலுவலக வாகனத்தைப் 'போர்ட்டிகோவில்' நிறுத்திப் பூட்டிய பின்னர் சாரதி திறப்பை அவரிடம் கையளித்துச் சென்றான். மாமா மிக அன்புடன் என்னுடன் கதைத்தார். அவர் முன் எனக்குப் பக்தியே ஏற்பட்டது. அந்த எடுப்பான மூக்கு மாமியைத் தவிர எல்லோரிடமும் இருந்தது.

எனது தோள்களைப் பற்றியபடி அன்புடன் விசாரித்தார். கையில் கொணர்ந்த ஆங்கிலப் பத்திரிகைகளை என்னிடம் கொடுத்துவிட்டுத் தனது அறைக்குச் சென்றுவிட்டார்.

இவரது தம்பியார் யாரிடமும் ஒட்டாமல் மறைந்து மறைந்து திரிந்தான். அதிக நேரம் தொலைக்காட்சி முன்பாக அமர்ந்திருந்தான். இரவாகியும் அவனது படிக்கும் மேசைக்கு போகாது 'ரிமோட்கொன்ரோலரை'க் கையில் வைத்தபடி காட்சிகளை மாற்றி மாற்றிப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான். இப்போ அவனைக் குழப்பினால் என் மேல் கோபத்தை ஏற்படுத்திக் கொண்டுவிடுவான் என்று விட்டுவிட்டேன். தொலைக்காட்சியை விட்டு விலகும் வரை பார்த்திருந்து அவனது மேசைக் கதிரையில் போய் அமர்ந்தேன். நான் அழைக்காமலே என் அருகே வந்தான்.

"எனது பெயர் நிரோஜன். ஒன்பதாம் வருடம் படிக்கிறேன். நிரோ என்று எல்லோரும் அழைப்பார்கள்." நான் கேட்காமலே தன்னை அறிமுகம் செய்து கொண்டான். ஆச்சரியமாக இருந்தது. "ஏன் அப்படிச் செய்தாய்?" என்று வினவினேன்.

"நீங்கள் தபோவோடு கதைக்கும் போது அவளிடம் தெரிந்து கொள்ளக் கேட்டவற்றை நான் அவதானித்தேன்" கூறினான்.

"அப்போ ஏன் உனது 'ராங்கை' கூறவில்லை?"-வினவினேன்.

"நான் வகுப்பில் 'பெஸ்ற்'. யாரிடமும் தற்புகழ்ச்சியாகப் பேசக்கூடாது என அப்பா கூறியுள்ளார்."

"ஓ... நீ கெட்டிக்காரப் பையன். ஏன் உனது புத்தகங்களை இப்படி ஒழுங்கில்லாமல் மேசையில் சிந்தி வைத்திருக்கிறாய்?" அன்பு காட்டிக் கேட்டேன்.

"அது என்னுடைய பிழை இல்லை. அப்பா மேல் தான் தவறு" கூறினான். எனக்கு அதிர்ச்சியாகப் போய்விட்டது! "அது எப்படி அப்பா மேல் தவறாகும்?" வினவினேன்."

அம்மா சொன்னா... 'அப்பா தனது அறையை சிந்தி வைத்திருக்கிறதாலைதான் நானும் அப்படிச் செய்யிறன் எண்டு. ஆனபடியால் அது அப்பாவின் பிழைதான்" என்று.

'நல்ல அம்மா' என்று மனதிற்குள் எண்ணிச் சிரித்தபடி மாடிப் படியேறி அறைக்குச் சென்றுவிட்டேன். மாடியில் நல்ல காற்றோட்டத்தின் மத்தியில் தென்னை மர வட்டுகளும் நிலாவும் அருகே தெரிந்தன. மறுநாள் காலையில் கண் விழித்துப் பார்த்த போது இவர் எழுந்து சென்றுவிட்டிருந்தார். 'ரீபோயில்' எனக்காகப் பால் ஊற்றி வைக்கப்பட்டிருந்தது. ஒரு கையில் 'கப்பும்' மறு கையில் 'சோசருமாக' அரைகுறை 'நைற்றியுடன்' பாலை உறிஞ்சியபடி மாடிப் படிக்கட்டுகளில், நித்திரைத் தூக்கம் ஒரு புறம் தாலாட்ட இறங்கி வந்து கொண்டிருந்தேன். மாமி மண்டபத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தவா... "ஏய்... பிள்ளை... என்ன பழக்கமிது" என்று என்னைப் பார்த்து அதட்டினா. எனக்கு எதுவுமே புரியவில்லை. 'பல் விளக்காமல் பால் குடிக்கிறேன் என்றா....' அல்லது 'அரைகுறை ஆடையுடன் வருகிறேன் என்றா'... எதற்காக? எப்படியும் சமாளித்தாக வேண்டும் என்ற எண்ணம் மேலிட... "அது மாமி... என்னிலை பிழை இல்லை...." என்று இழுத்தேன். மாமி... "உஸ்..." என்று ஆட்காட்டி விரலை உதடுகளுக்கு முன் நிறுத்தி எனது பேச்சைத் தடுத்தவ படிகளிலேறி வேகமாக என்னருகாக வந்துவிட்டா. பின் சுற்றும் முற்றும் பார்த்தா. மாமாவைத்தான் பார்த்தா என்பது எனது ஊகம்... அவர் இல்லை. "இப்போ கூறு..." என்று சிரித்தபடி கூறினாள். நான் கூற முற்பட்டதைத் திரும்பக் கூறினேன்.

"அது மாமி என்னிலை பிழை இல்லை... என்னுடைய இவரிலை தான் பிழை!"

எனது பதிலை மாமி எதிர் பார்க்கவில்லை. அவவுக்குத் தலை சுற்றியிருக்க வேண்டும். படிக்கட்டுகளுக்கான கைப்பிடியை உறுதியாகப் பிடித்துக் கொண்டா. எப்போதுமே மாமாவை மற்றவர்களுக்குப் பிழைகாரனாக்கித் தான் சம்பாதித்த வினை தனது மகனையே சூழ்ந்து விட்டதென்று நினைத்தாவோ என்னவோ!

# என்ன செய்யப் போகிறாய்....

பரபரப்பான அந்தக் காலை வேளையில் ஜெயந்தி வழக்கத்துக்கு மாறாகச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தாள்.

"சே... என்ன டீச்சர் இது? அவங்க கேட்டத அந்த நேரமே எடுத்துக் கொடுக்க நான் என்ன மந்திரமா... எங்கெல்லாம்தான் நானும் தேடறது... கிடைக்காட்டி நான் என்ன பண்ண முடியும்? இதுக்குள்ள இவ வேற..."

என்று சின்னவள் வாணிக்கு ஒரு போடு போட்டாள். வாணிக்கு எட்டு வயசுதான் என்றாலும் அவ்வளவு கோபம் ஜெயந்திக்கு. ஸ்கூல் யுனிபோம் அணிந்தும் அணியாமலுமாக ஒரு கையில் ரையுடன், மறு கையை அடிபட்ட இடத்தை அழுத்திப் பிடித்து 'ஓ'வெனக் கோசம் போட்டு அழத் தொடங்கினாள் சின்னவள்.

"எதுக்கு குழந்தயப் போட்டு அடிக்கிறே... என்ன ஆச்சு...?"

குளித்த ஈரத் தலையைத் துவட்டிக் கொண்டே வந்த ஜெயந்தியின் கணவன் வேணுதான் கேட்டான். சின்னவளின் அழுகைக்கு முன் ஜெயந்தி போட்ட அடி அவனுக்குக் கேட்டிருக்க வேண்டும்.

"என்னால முடியாதுங்க... நேத்து இவளோட கிளாஸ் ரீச்சர் இவகிட்ட பலா இலை கொண்டு வரச் சொல்லியிருக்கா... நானும் நேத்திலிருந்து தேடறேன்... தேடறேன் எங்கேயுமே கிடைக்கல்ல. இப்ப பாத்து பலா இலை இல்லன்னா ஸ்கூல் போமாட்டேன்னு அடம் பிடிக்கிறா.. இந்த நேரத்தில நான் என்ன பண்றது? உங்களையும் ஆபிஸ் அனுப்பணும். நானும் ஸ்கூல் போகணும்... இவள சமாளிக்கவே உயிர் போகுது...." ஜெயந்தி ஒரு விதத்தில் அழுதேவிட்டாள்.

ஜெயந்தியைப் பார்க்க வேணுவுக்கு பாவமாக இருந்தது. அவளும் ஆரம்பப் பள்ளி ஆசிரியைதான். ஒரே மகள் வாணி. கான்வென்டுக்கு படிக்க அனுப்புகிறார்கள். பிடிவாதக்காரி.

"ஏம்மா வாணி... அப்பாகிட்ட வாடா செல்லம்..." அழுதுகொண்டிருக்கும் சின்னவளை 'செல்லம்' போட்டு அழைப்பது அவன் தந்திரம். ஏதோ ஒரு குட்டிப் புயல் வந்து ஓய்ந்தது போல் அழுகை ஓய்ந்து தந்தை முன் வந்து நின்றாள் சின்னவள்.

"இந்தப் பாரும்மா... அம்மா பாவமில்லை... நல்ல பிள்ளையாட்டம் இப்ப ஸ்கூல் போகணும்... கண்ணில்ல அப்பா சொல்றத கேக்கணும் ஒகேயா...?" குழந்தையோடு குழந்தையாய் குழைந்தான்.

"முடியாதுப்பா... நான் போக மாட்டேன். ரீச்சர் நீல் டவுன் வப்பாங்க ப்ரெண்ட்ஸ் பார்த்து சிரிப்பாங்க... நான் போக மாட்டேன்... முடியாது...." மறுபடியும் 'ஓ'வென அழத் தொடங்கினாள்.



அஸ்வத்துமா அக்ஷியா அக்ரம்

ஜெயந்தி நேற்று முழு நாளுமாய் பலா இலை தேடிக் கொண்டு தான் இருந்தாள். பலா மரம் இருந்த கங்காணி வளவுக்குப் போனால் மரத்தில ஒரு இலை கூட இல்லை. பட்டுப் போன மரத்தில் எங்கே பலா இலை பொறுக்குவது? கையைப் பிசைந்து கொண்டு நின்றவளுக்கு யாரோ ஒரு நலன் விரும்பி இன்னொரு பலா மரம் இருப்பதாக வழி சொல்ல அதே ஓட்டமும் நடையுமாகப் போய் பார்த்தால் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. பச்சை பச்சையாய் இலை அடர்ந்திருந்தது அவளைப் பார்த்து சிரிப்பது போல் வளர்ந்திருந்தது ஈரப் பலா மரம்... நினைக்கும் போதே அவளுக்கு வாணி மீதும் அவள் வகுப்பு ரீச்சர் மீதும் கோபம் கோபமாய் பொங்கியது.

"விடு ஜெயந்தி... சின்னவள இன்னிக்கு அம்மா வீட்டில விட்டிடு... டைமாயிச்சு நான் போகணும்..." வேணு அவசரப் படுத்தினான்.

அதன் பிறகு அவசர அவசரமாய் கணவனை ஆபிஸ் அனுப்பி, சின்னவளை அம்மா வீட்டில் விட்டு விட்டு பஸ் பிடித்து ஸ்கூல் போனாள்.

வகுப்பிற்குச் சென்று அன்றைய மாணவர் வரவைப் பதிய ஆரம்பித்தவள் வழமைக்கு மாறாக அன்றைய மாணவர்கள் தொகை ஐந்தால் குறைந்திருப்பதைக் கண்டாள். அவளுக்குத் தெரியும் இன்றைய பாடத்திற்காக நேற்று அவள் பிள்ளைகளிடம் ஈர்க்குக் குச்சி கொண்டு வரச் சொன்னது. பிள்ளைகளின் திருட்டுத் தனம் புரிந்தது. "சே... பொறுப்பில்லாத பிள்ளைகள்... நாளைக்கு வரட்டும்..." முணு முணுத்தவள் ஒரு எண்ணம் தோன்ற, அன்று வருகை தராத ஒவ்வொரு மாணவர்களுக்குமாக ஒவ்வொரு கடிதம் எழுதினாள்.

பிள்ளையின் பொறுப்புப் பற்றிப் பேச வேண்டி உள்ளது. பெற்றோர் நாளை நேரில் சந்திக்கவும்.

-வகுப்பாசிரியை ஜெயந்தி.

ஒப்பமிட்டு பியோனிடம் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு கூறி அனுப்பினாள்.

மத்தியானம் வீடு வந்த ஜெயந்திக்கு இன்னொரு செய்தி காத்திருந்தது.

"ஜெயந்தி உன்ன நாளைக்கு கட்டாயமா வாணியின் வகுப்பு ரீச்சர் கண்டு கொள்ள சொன்னா. மறந்திடாதே இந்தாம்மா கடிதம்..." பக்கத்து வீட்டுக்காரி கடிதத்தைக் கொடுக்க ஒரே நிமிடத்தில் ஏதேதோ நினைவிற்கு வர சிலையாய் நின்றாள் ஜெயந்தி.

"அம்புலன்ஸ் வேன் கொஞ்சம் தள்ளியே நிக்கணும்."

"அனுப்புங்க."

"ஒரு விஷயம்."

"என்ன?"

"டாக்டருக்கும் நர்ஸுக்கும் உங்களாலே எந்த ஆபத்தும் வரக்கூடாது. அவங்களை மரியாதைத் தனமா ட்ரீட் பண்ணணும்."

"மரியாதையைப் பத்தி எங்களுக்கு நீங்க சொல்லித்தராதீங்க கமிஷனர் ஸார். டாக்டரும் நர்ஸும் சேதமில்லாம திருப்பி அனுப்பப்படுவாங்க போதுமா?"

"ம்."

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பெல்லியப்பா திடகாத்திரமாய் ஆஜானுபாகுவாய் பக்காவான டாக்டர் யூனிபார்முக்குள் நுழைந்திருந்தார். வெள்ளை பேண்ட், வெள்ளை சர்ட். அதற்கு மேல் தொள தொளப்பாய் வெள்ளைக் கோட். கண்களில் ரிம்லெஸ் கண்ணாடி. கையில் ஸ்டெத். பக்கத்தில் பெண் கான்ஸ்டபிள் லீலா நர்ஸாக உருமாறி டென்ஷனோடு நின்றிருந்தாள்.

கமிஷனர் விஷ்ணுவர்தன் பெல்லியப்பாவை ஏறிட்டார். "நீங்களும் லீலாவும் உயிருக்கு துணிஞ்சு டாக்டர் நர்ஸா மாறி ஃபிளைட்டுக்குப் போகப் போறீங்க. நான் சொன்ன இன்ஸ்ட்ரக்ஷன்களை ஸ்ட்ரிக்டா ஃபாலோ பண்ணுங்க. ஹார்ட் அட்டாக் வந்த பேஷண்ட் ட்ரிப்ஷீட் படி அறுபத்தி ஆறாவது சீட்ல இருக்கார். க்ரைம் பிராஞ்ச் ஆபிஸர் விவேக் எழுபத்தி யேழாம் நம்பர் சீட்ல இருப்பார். நீங்க






பேஷண்டைப் பார்க்கிற மாதிரி பாவ்லா பண்ணிக்கிட்டே விவேக்கிற்கு சமிக்ஞை காட்டிட வேண்டியது. விவேக் உடனே உஷாராயிடுவார். இந்த விமானக் கடத்திகள் மொத்தம் மூணு பேர்தான். ஆளுக்கு ஒருத்தரை மடக்கினா கூட போதும். மெடிக்கல் கிட்டோட அடித்தட்டுல ரெண்டு பிஸ்டல்ஸ் இருக்கு. சமயம் பார்த்து யூஸ் பண்ணுங்க."

"எஸ்...ஸார்."

பெல்லியப்பாவும்,லீலாவும் கண்ட்ரோல் டவர் அறையினின்றும் வெளிப்பட்டு ப்ரோஹிபிட்டட் ஏரியாவுக்குள் காத்திருந்த அம்புலன்ஸ் வேனுக்குள் ஏறிக் கொண்டார்கள்.

வேன் சிவப்பு விளக்கைத் தன் மண்டையில் சுழல விட்டபடி ரன்வேயில் ஊர்ந்தது. டவரில் இருந்த ஜன்னல் வழியாக அம்புலன்ஸையே பார்த்துக் கொண்டிருந்த கமிஷனரின் இருதயத் துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் எகிற ஆரம்பித்தது.

ஃப்ளைட்டுக்கு ஐம்பதடி தூரம் தள்ளி அம்புலன்ஸ் வேன் நின்று கொள்ள பெல்லியப்பாவும், லீலாவும் இயல்பாய் இறங்கி விமானத்தின் இடுப்போடு பொருத்தப்பட்ட ஸ்டேரிஸில் ஏறினார்கள். கதவருகே நின்றிருந்த கவி எதிர் கொண்டான்.

"வாங்க டாக்டர். உங்களுக்காக அனுமதிக்கப்பட்ட நேரம் அஞ்சே நிமிஷம். பேஷண்டைப் பார்த்து அவருக்கு நிஜமாவே ஹார்ட் அட்டாக்தானா இல்லையான்னு பார்த்துச் சொன்னாப் போதும்."

உள்ளே நுழைந்தார்கள்.

பெல்லியப்பாவுக்கும் லீலாவுக்கும் முன்னாலும் பின்னாலும் கவியும் ஜெயராஜுவும் பிஸ்டல்களோடு நடந்தார்கள்.

பெல்லியப்பாவின் பார்வை 77-ஆம் நெம்பர் சீட்டைத் தேடி ஓட விவேக் தெரிந்தான். விவேக்கின் பார்

## அங்கம் 11

வையும் அவரை நோக்கிப் பாய பெல்லியப்பா லேசாய் கண்ணைச் சிமிட்டினார்.

விவேக் உஷாராகி நிமிர்ந்து உட்கார்ந்தான். பக்கத்தில் தலையைப் பிடித்தபடி தளர்வாய் உட்கார்ந்திருந்த ரூபலாவிடம் பல்லிடுக்கில் கிசுகிசுத்தான்.

"ரூபலா! எந்த செகண்டும் எதுவும் நடக்கலாம். கொஞ்சம் அலர்ட்டாவே இரு."

"ம்....ம்...."

"வந்திருக்கிறது டாக்டரில்லை."

"பின்னே!"

"போலீஸ்"

நடந்து கொண்டிருந்த கவி சட்டென்று நின்றான். இறுக்கமான முகத்தோடு திரும்பினான். விவேக்- ரூபலா உட்கார்ந்திருந்த இருக்கை வரிசையை உன்னிப்பாய்ப் பார்த்தான்)

"இந்த வரிசையில் இப்போ யார் பேசினது?"

எல்லோரும் நிசப்தம் காத்தார்கள்.

எழுதுவது

**ராஜேஷ்குமார்**

கவி உறுமினான். "பேசினவங்க எந்திரிச்சு நிக்கலைன்னா இந்த வரிசையில உட்கார்ந்திருக்கிற அத்தனை பேரையும் சுடுவேன்."

விவேக்கும் ரூபலாவும் மெதுவாய் எழுந்து நின்றார்கள். விவேக் மெல்லிய குரலில் சொன்னான்.

"நாங்கதான் பேசினோம்."

"ரெண்டு பேரும் வெளியே வாங்க."

வந்தார்கள்.

"என்ன பேசினீங்க?"

"இந்த டாக்டரைப் பத்திதான் பேசிக்கிட்டோம்."

முகத்தில் ஆச்சரியம் காட்டினான் கவி. "டாக்டரைப் பத்தி பேசிக்கிட்டீங்களா? என்ன பேசிக்கிட்டீங்க?"

"இவரைப் பத்தி உங்ககிட்டே தனியா சொல்ல விரும்பறேன். கொஞ்சம் பர்சனல்." சொல்லிக் கொண்டே கவியின் பக்கத்தில் நெருங்கிய விவேக்- விநாடிக்கும் குறைவான நேரத்தில் முழங்கையை 'ட' மாதிரி மடக்கி 'நெக்'கென்று அவனுடைய அடிவயிற்றில் வெடித்தான்.

கவிக்குள் ஒரு பிரளயம் நடந்த மாதிரியான உணர்வு. பெருங்குடல் சிறுகுடலுக்குள் ஏறி எட்டு எடடாய் முடிச்சு போட்டுக் கொண்ட மாதிரியான அவஸ்தை. பிஸ்டல் அநாதையாய் கையிலிருந்து நழுவ விவேக் அதைக் கையில் ஏந்திக் கொண்டான்.

விவேக் செயற்பட்ட அதே விநாடிகளில் பெல்லியப்பாவும் தனக்குப் பின்னால் நின்றிருந்த ஜெயராஜை தன் முரட்டு உடம்பால் ஒரு எத்து எத்தினார். ஜெயராஜும் பிஸ்டலும் திசைக் கொன்றாய் சிதற, நர்ஸ் யூனிபார்மிலிருந்த லீலா பிஸ்டலை தாவிப் பிடித்துக் கொண்டாள்.

காக்பிட்டுக்குப் பக்கத்தில் நின்றிருந்த சைலேந்தர் வெகுண்டு போய் பிஸ்டலை தாறுமாறாய்ப் உபயோகப்படுத்த, தோட்டாக்கள் இலக்கில்லாமல் சிதறின.

விவேக் இருக்கைகளுக்கு கீழே குனிந்தவாக்கில் ஒடி அவன் பிஸ்டலை உயர்த்துவதற்குள் பாய்ந்தான். தன் உடம்பு எடையைப் பூராவும் அவன் மேல் கிடத்தி காக்பிட் மூலையோரமாய் அவனை நசுக்க-

ஃபிளைட்டுக்குள் சந்தோஷ ஆரவாரம் கிளம்பியது.

பைலட்டும், கோபைலட்டும் 'காக்பிட்' அறையிலிருந்து ஓடி வந்தார்கள். அவர்கள் சைலேந்தரைக் கவ்விக் கொள்ள விவேக் ரூபலாவிடம் வந்தான். "ரூபலா! நீ... பெண்களையும் குழந்தைகளையும் கூட்டிகிட்டு ஏர்போர்ட் லௌஞ்சுக்கு போ... நான் இந்த ஹார்ட் அட்டாக் பேஷண்ட்டை கவனிச்சு ஆம்புலன்ஸ்ல ஏத்திட்டு வர்றேன்."

விவேக் பைலட்களை அழைத்து ரிவால்வர்களை ஒப்படைத்து மூன்று பேர்களையும் கவனிக்கச் சொல்லிவிட்டு பெல்லியப்பாவின் உதவியோடு அந்த ஹார்ட் பேஷண்டை வெளியே கொண்டு வந்தான்.

பைலட்களும் கான்ஸ்டபிள் லீலாவும் கைகளில் ரிவால்வர்களை ஏந்தி, கவி, ஜெயராஜ், சைலேந்தர் மூன்று பேர்களையும் மண்டி போட வைத்துக் குறி பார்த்துக் கொண்டிருக்க பெண்கள் குழந்தைகளோடு ரூபலாவின் தலைமையில் அவசர அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

பாதி பேர் வெளியேறியிருப்பார்கள்.

திடும்மென்று அந்தக் குரல் கேட்டது. பெண் குரல்.

"அட்டென்ஷன்...ப்ளீஸ்"

எல்லோரும் திரும்ப-

டாய்லெட் அறையிலிருந்து வெளிப்பட்டால் விமானப் பணிப்பெண், கையில் போல்டிங் டைப் மெஷின் கன் திம்மென்று உட்கார்ந்திருந்தது. பைலட்களைப் பார்த்துப் பெரிதாய் உறுமினாள். "காப்டன்ஸ்.... ரிவால்வர்களை அந்த மூணு பேர்கிட்டேயும் கொடுங்க..."

"தேவிகா! வாட் டு யூ...மீன்...? தே ஆர் ஹைஜாக்கர்ஸ்" பைலட் திகைக்க- விமானப் பணிப்பெண் தேவிகா சிரித்தாள்.

"ஸாரி... காப்டன் தே... ஆர்... நாட்.... ஹைஜாக்கர்ஸ். நாங்க நாலு பேரும் ஒரு புனிதமான இயக்கத்தைச் சேர்ந்தவங்க. அந்த இயக்கத்துலதான் எனக்கு முழு நேர வேலை... இந்த ஏர்ஹோஸ்டஸ் வேலை எனக்கு பார்ட் டைம் வேலை மாதிரி..."

கவி சிரித்தான். " வெலட்டன் தேவிகா! இந்த களேபரத்துல நீ காணாமே போனப்பவே நான் நினைச்சேன்... இப்படி போல்டிங்மெஷின் கன்னோடு வந்து நிப்பேன்னு! பைலட் ஸார், கையில வெச்சிருக்கிற ரிவால்வர்ஸை தர்றீங்களா? இல்லே உடம்பு பூராவும் பொத்தல் விழுந்து சாகப் போறீங்களா...?"

மூன்று பேரும் ரிவால்வர்களை நீட்டினார்கள்.

தேவிகா குரல் கொடுத்தாள்.

"சைலேந்தர் ப்ளைட்டோட டோரை சாத்து வெளியே தப்பிச்சு போனவங்க கம்மிதான். இன்னும் நூத்தி ஐம்பது பேர் நம்ம கைவசம் இருப்பாங்க... இவங்களை வெச்சு நம்ம கோரிக்கைகளை நிறைவேத்திக்கலாம்..."

சைலேந்தர் கதவை நோக்கி ஓடினான்.

கண்ட்ரோல் டவரில் அதிகாரிகளுக்கு மத்தியில் டென்ஷனாய் உட்கார்ந்திருந்தான் விவேக். கொஞ்சம் தள்ளி ரூபலா கவலையாய் தெரிந்தாள். பக்கத்து அறையில் ஒயர்லஸ் கருவிகள் 'பீங்க் பீங்க்' என்று பட்சியாய் கத்திக் கொண்டிருந்தன. கமிஷனரிடம் திரும்பினான் விவேக்.

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## வெளிநாட்டு மோகமும் குடும்பச் சீரழிவும்-03

"இத்தொடர்பும் அல்லது உறவும் நீடிப்பதில்லை. திருமணமான அந்தப் பெண்ணின் மனதில் இவ்வுறவு தனது கணவருக்குத் தெரியவந்தால் குடும்பம் சீரழிந்துவிடும் என்ற பய உணர்வு, சிலவேளை கர்ப்பமுற்றால் ஏற்படப்போகும் பிரச்சினைகள், வெளியில் தெரியவந்தால் சமுதாயத்தில் ஏற்படப்போகும் தலைகுனிவு என்பவை பற்றிய எண்ணமும் அச்சமும் எப்போதுமே இருக்கும். அதே போல திருமணமாகாத அந்த ஆணுக்கும் தனது உறவு வெளியில் தெரியவந்தால் எதிர்காலத்தில் திருமணம் செய்வதில் தடை ஏற்படும், அவளின் கணவருக்குத் தெரிந்து விட்டால் தாக்குதலுக்கோ அல்லது விசாரணைக்கோ உட்பட வேண்டியிருக்கும் என்ற பயம் ஏற்படுவதால், இவ்விருவரின் உறவும் நீண்ட காலம் தொடரவோ அல்லது திருப்திகரமாக அமையவோ சந்தர்ப்பம் இல்லையாதலால் சில காலத்துள் இவ்வுறவு அல்லது தொடர்பு துண்டிக்கப்பட்டு விடும்.

ஆனால் திருமணமான ஒரு பெண்ணும் திருமணமான ஒரு ஆணும் உடலுறவை ஏற்படுத்திக்கொள்வது மிகமிக ஆபத்தான விளைவுகளைக் கொடுக்கும். இவர்களின் உறவின்போது பய உணர்வு அதிகமிருக்காது. சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும். அந்த ஆண் அந்தப் பெண்ணைத் தன் மனைவியாகப் பார்ப்பதில்லை. அந்தப் பெண்ணும் அந்த ஆணைத் தன் புருஷனாகப் பார்ப்பதில்லை. இங்கே புனிதம், அன்பு, ஊடல், பண்பு ஆகியவை சுத்தமாக மறைந்துவிடும். மிருகத்தனமும் காமவெறியும் இவ்விதமான உடலுறவில் முக்கியத்துவம் பெறும். ஆண் தன் மனைவியில் காணாத சுகத்தை இந்தப் பெண்ணிடம் அடைவதாகவும் பெண் தன் கணவனிடம் காணாத சுகத்தை இந்த ஆணிடம் அடைவதாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். மனிதப் பண்பிலிருந்து விலகி மிருகத்தனமான, முரட்டுத்தனமான உடலுறவைச் சுகமென்று கூறும் மனிதர்களும் நமது சமூகத்தில் வாழ்கின்றனர்.

இப்படியான கள்ளத் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும் ஆண்களும் பெண்களும் போதைப் பழக்கத்திற்கும் அடிமையாகி விடுவார்கள். அது மட்டுமல்ல காலப் போக்கில், இத் தொடர்பால் அந்தப் பெண் தன் புருஷனையோ அந்த ஆண் தன் மனைவியையோ கொலை செய்யும் அளவிற்குக் காமவெறி கொண்டவர்களாக மாறி விடும் சூழ்நிலையும் உருவாகும். இதற்கு உதாரணமாகப் பல சம்பவங்களைக் குறிப்பிடலாம். கட்டிலில் படுத்திருந்த ஒரு அரசியல்வாதியை அவரது மனைவியே கட்டிலோடு தீயிட்டுக் கொழுத்தி எரித்துக் கொலைசெய்ததைப் பற்றிச் செய்தித்தாளில் படித்திருப்பீர்கள். தர்மலிங்கம்! நான் கூறியவைகள் உங்களையும் பாதித்திருக்கலாம். எனது அனுபவத்தைத்தான் கூறினேன். சொல்லுங்கள் தர்மலிங்கம்! நான் கூறியவை உங்களால் ஏற்றுக்கொள்ள கூடியதாக உள்ளதா?" என்று கேட்டேன். "என்னை மன்னித்து விடுங்கள். நான் அறியாமல் தவறு செய்துவிட்டேன்." என்று தர்மலிங்கம் தலைகுனிந்தவாறு கூறினார். அவர் உடம்பு முழுவதும் வியர்த்திருந்தது. "என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமில்லை தர்மலிங்கம். உங்கள் மனைவியிடம்தான் மன்னிப்பு கேட்க வேண்டும். நீங்கள் சற்று ஓய்வெடுத்துவிட்டு மதிய உணவு அருந்துங்கள். அரை மணி நேரத்தில் உங்களைக் கூப்பிடுகிறேன் என்று சொல்லித் தர்மலிங்கத்தை எமது உணவு விடுதிக்குள் அனுப்பி வைத்தேன். பின் எமது பெண்கள் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்த புஸ்பவதியை அலுவலகத்திற்கு அழைத்தேன்.

"அமருங்கள் புஸ்பவதி! நீங்கள் கொடுத்து வைத்தவர். உங்கள் கணவர் தர்மலிங்கம் தன் பிழைகளை ஏற்றுக்கொண்டார். அவரை நீங்கள் மன்னிக்க வேண்டும். அவரும் உங்களிடம் மன்னிப்புக் கேட்பார். ஆனாலும் புஸ்பவதி! நீங்கள் வெளிநாடு சென்றது முகாம் வாழ்க்கையில் உங்கள் வறுமை காரணமாகத்தான். என்றாலும் அது எவ்வளவு ஆபத்தானது என்பது இப்போது உங்களுக்குப் புரியுமென்று நினைக்கிறேன். முகாம் வாழ்க்கை முறை, சூழல், பழக்க வழக்கம் அனைத்தும் ஈழத் தமிழரின் பண்பாட்டிலிருந்து வெகு தூரம் விலகிச் சென்றுவிட்டது என்பது உண்மை. நீங்கள் மட்டுமல்ல முகாம்களிலிருந்து வெளிநாடு சென்ற பெண்களின் குடும்பங்கள் பல சீரழிந்துவிட்டன. சரி! நடந்தவை நடந்து முடிந்தவையாக இருக்கட்டும். உங்கள் கணவரைக் கூப்பிடுகிறேன்" என்று கூறினேன். புஸ்பவதியின் முகத்தில் மாற்றம் தெரிந்தது. தன் உடைகளை ஒரு தரம் சரி செய்தாள். முகத்தைத் துடைத்துக் கொண்டாள். மகிழ்ச்சியில் அவள் முகத்தில் புன்முறுவல் இழையோடியது.

நான் எழுந்து சென்று தர்மலிங்கத்தை அழைத்து வந்தேன். எனக்கு எதிர்பாராத அதிர்ச்சி. இருவரும் கட்டிப் பிடித்துக்கொண்டு அழத் தொடங்கினார்கள். நான் அவர்களைத் தொந்தரவு செய்யாமல் சற்று வெளியேறினேன். ஐந்து நிமிடங்கள் கழித்து உள்ளே வந்தேன். "நான் உள்ளே வரலாமா?" என்று நகைச்சுவைக்காகக் கேட்டேன். புஸ்பவதியும் தர்மலிங்கமும் வெட்கத்திலும் மகிழ்ச்சி வெள்ளத்திலும் தம்மை மறந்திருந்தனர். என்னுடைய மகிழ்ச்சியையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். இருவரும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றனர்.

அடுத்த நாள் முகாம் தலைவரையும் கலாவையும் எனது அலுவலகம் அழைத்திருந்தேன். தலைவரின் முன்னிலையில் கலாவுக்கு நடந்தவைகளை விளக்கினேன். ஒரு நல்ல குடும்பத்தின் வாழ்க்கையில் கலா தலையிட்டு பிரச்சினைகளுக்குக் காரணமானதைக் குற்றம் என்றும் சுட்டிக் காட்டினேன். தர்மலிங்கம் புஸ்பவதி குடும்ப விவகாரத்தில் இனிமேல் எவ்வித தலையீடும் இருக்கக்கூடாது என்று கலாவைக் கேட்டுக் கொண்டேன். கலாவும் தன் பிழையையும் இயலாமையையும் ஏற்றுக் கொண்டாள். தலைவரும் கலாவும் விடைபெற்றுச் சென்றனர். கலா சுயதொழிலில் ஈடுபட்டு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கடன் கொடுத்து உதவ எமது கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. தர்மலிங்கம் புஸ்பவதி குடும்பம் அன்பாகவும், சந்தோஷமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்கிறார்கள்.

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

தொடர்ந்து வரும்...

# நடமாடும் விபசார விடுதி

## நடத்திய நடிகை புவனேஸ்வரி



நம்நாட்டு இரசிகர்களுக்கு நன்கு அறிமுகமான சின்னத்திரை நடிகை புவனேஸ்வரி காரில் விபச்சாரம் நடத்தியதாக சென்னைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

சென்னை வட பழனியில் வசிக்கும் புவனேஸ்வரி அகல்விளக்கு, கோகுலம் வீடு, மந்திரவாசல், அர்ச்சனைப் பூக்கள், அம்பிகை, அவளுக்கு மேலே ஒரு வானம் உட்பட சுமார் 23 தொலைக்காட்சி நாடகங்களில் நடித்தவர். சினிமாப் படங்கள் சிலவற்றிலும் சிறிய பாத்திரங்களில் தோன்றியிருக்கிறார். நடிகர் விஜய்யின் பிரிய மானவள் படத்தில் விவேக்கிற்கு ஜோடியாக வந்தவர் இந்தப் புவனேஸ் வரிதான். இத்தனை அறிமுகங்கள் தேவையில்லை. அர்ச்சனைப் பூக்களில் வில்லியாக நடித்தவர் என்றாலே இலங்கை இரசிகர்களுக்கு இவரைத் தெரியும்.

நடிப்பை விடவும் விபச்சாரத்தின் மூலம் பெருமளவு சொத்துக்களை ஏற்கெனவே சேர்த்துள்ள இந்த நடிகை முன்னதாக டாக்டர் பிரகாஸின் செக்ஸ் பட விவகாரத்திலும் தொடர்புபடுத்திப் பேசப்பட்டவர். டாக்டர் பிரகாஸின் வீட்டிலிருந்து கைப்பற்றப் பட்ட சில புளூபில்ம்களில் புவனேஸ்வரி காணப்பட்டதாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

பல அரசியல்வாதிகள் இவரது அன்பைப் பெற்றிருந்ததால், நீண்ட காலமாகத் தனது தொழிலைச் சிக்கலின்றிச் செய்து வந்தார் புவனேஸ்வரி. பல்வேறு மட்டங்களில் தனது தொழிலை நடத்தி வந்த இவர் இப்போது கார்களில் தனது பிஸ்னஸை நடத்துகிறார்.

தகவல் பொலிஸாருக்குப் பறந்தது. இவருடன் விபச்சாரத்தில் ஈடுபடுவதற்கு அழைப்பு விடுவது போன்று நாடகமாடிப் பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர். செல்ஃபோன் மூலம் ஒரு நபர் புவனேஸ்வரியைத் தொடர்பு கொண்டு அழைக்க, காரில் வந்த அவர் பணத்தை வாங்கிக்கொண்டு அந் நபரையும் காரில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்.

இவரது காரை இடைமறித்த பொலிஸார் புவனேஸ்வரியைக் கைது செய்தார்கள். ■

# நெல்சன் மன்டேலாவிடமிருந்து டயானாவுக்கு ஒரு மலர் மாலை

இளவரசி டயானாவையும், நெல்ஸன் மண்டேலாவையும் உலகின் பெரும்பாலானவருக்குத் தெரியும். இந்த இருவருக்கும் பொதுவான ஒற்றுமைகளும் உண்டு.

தனது இனத்தின் விடுதலைக்காக மக்களோடு ஒருங்கிணைந்த போராட்டம் நடத்தியதனால், தன் வாழ்நாளில் கணிசமான பகுதியை சிறையில் கழிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டவர் முன்னாள் தென்னாபிரிக்க அதிபர் நெல்ஸன் மண்டேலா.


பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் இளவரசியாக இருந்தபோதிலும் பொதுமக்களின் இளவரசி என்று புகழப்படும் அளவுக்கு மக்களோடு நெருங்கிப் பழகியதால், அரச குடும்பத்தின் சம்பிரதாயங்களை மீறி நடந்த டயானாவுக்குத் தன்னையே இழக்க வேண்டி ஏற்பட்டது.

சமீபத்தில் டயானாவின் சமாதிக்கு நெல்ஸன் மண்டேலா நேரில் சென்று அஞ்சலி செலுத்திவிட்டு வந்தார்.

டயானாவின் உடல் நோத்ஹம்டன்ஷயரில் உள்ள அல்தோப் என்ற இடத்தில் சிறிய தீவு ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது தனது உடல் நிலையையும் மோசமான கால நிலையையும் பொருட்படுத்தாது, நெல்ஸன் மண்டேலா டயானாவின் கல்லறைக்குச் சென்று வந்தார்.

தன்னைப்போன்றே துன்பப்பட்ட மக்களுக்காக தனது காலத்தின் பெரும்பகுதியை அர்ப்பணித்து செயற்பட்ட டயானா மீது தனக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் இருப்பதாக மண்டேலா கூறியிருக்கிறார்.



குளிரை மறைப்பதற்காக, தடிப்பமான போர்வையொன்றைப் போர்த்திக்கொண்டு டயானாவின் சகோதரர் ஏர்ல்ஸ் ஸ்பென்சர் சகிதம் கல்லறைக்குச் சென்று வந்தார் மண்டேலா.

டயானா, தனது புகழையும் பிரபலத்தையும் நல்லவற்றிற்காகப் பயன்படுத்தினார். நோய், வறுமை காரணமாக துன்பத்தில் இருந்த மக்களுக்கு குறிப்பாகக எயிட்ஸ் நோயாளிகளின் நலனுக்காக அவர் பல சவால்களுக்கு முகம் கொடுத்துப் போராடினார். டயானாவின் சமாதியைப் பார்வையிட்டு வந்த மண்டேலா செய்தியாளரகளிடம் இப்படிக் கூறியிருக்கிறார்.

மனிதர்களின் கவனத்தில் இருந்து விடுபட்டுப் போன விடயங்களில் டயானா தனது ஆர்வத்தை வெளிப்படுத்தினார். சமுகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுக்கு அவர் தனது அன்புக் கரத்தை நீட்டினார் என மேலும் சொல்கிறார் நெல்சன் மண் டேலா.

டயானா எனக்குள் பாரியளவிலான ஒரு அழுத்தத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்திய பெண் என டயானாவுடனான தனது சந்திப்பை நினைவுகூருகிறார் மண்டேலா.

நெல்சன் மண்டேலா சிறுவர் நிதியமும் வேல்ஸ்சில் இயங்கும் இளவரசி டயானா நினைவு நிதியமும் இணைந்து தென்னாபிரிக்காவில் எயிட்ஸ் நோய் காரணமாக ஒதுக்கப்பட்டிருக்கும் சுமார் 660,000 சிறுவர்களுக்கு உதவி அளிக்கும் பொருட்டு நிதி சேகரிக்கும் நிகழ்ச்சிகளுக்காகவே மண்டேலா லண்டனில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

தென்னாபிரிக்காவின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதம். அதாவது 4.7 மில்லியன் மக்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

# ஓரினத் தம்பதிகளுக்கு சுவிஸில் சட்ட அங்கீகாரம்!

ஓரினத் தம்பதிகள் திருமணம் செய்துகொண்டு குடும்பமாக வாழ்க்கை நடத்த சுவிற்சர்லாந்து அரசாங்கம் புதிய சட்டங்களைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் ஓரினத் தம்பதிகள் சேர்ந்து வாழ்வது குற்றமாகக் கருதப்படாவிட்டாலும், சட்டரீதியில் அதற்கு முழுஅளவிலான சமூக அங்கீகாரம் வழங்கப்பட்டதில்லை.

தங்களையும், பொதுவான ஆண், பெண் தம்பதிகள் போன்று சமூகமும் சட்டமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அந் நாடுகளில் வசிக்கும் ஓரினச்சேர்க்கையாளர்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

சுவிற்சர்லாந்தில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபாடுள்ள பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களைக் குடும்பமாக வாழ அனுமதிக்க வேண்டுமென அரசாங்கத்தைக் கோரிவரும் நிலையில், புதிய சட்டவரைவு குறித்த தகவலை அந்நாட்டு நீதித்துறை அமைச்சர் ரூத் மட்சிலர் வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

உத்தேச சட்டமானது ஓரினத் தம்பதிகளுககு அங்கீகாரமளிப்பதுடன் பாரம்பரிய முறையிலான தம்பதி (ஆண், பெண்) பெறும் உரிமைகளை அவர்களும் பெறுவதற்கு, வழிசெய்வதோடு சமூகப் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கிறது.

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால், ஏராளமானோர் ஓரினத் தம்பதிகளாகக் குடும்ப வாழ்வில் இணைவார்கள் என நம்பப்படுகிறது. ■

# காலணியில் அழுக்கு. ஷேவாக், ஹர்பஜனுக்கு அபராதம்

இந்தியக் கிரிக்கெட் அணி நீண்ட சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு நியூசிலாந்து சென்றுள்ளது. இந்தியாவில் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான போட்டியில் பங்குபற்றி முடித்துக் கொண்டு, விடுமுறை ஏதுமின்றி இரண்டே நாட்களில் நியூசிலாந்து சென்றார்கள் இந்திய வீரர்கள்.

ஏற்கெனவே நடைபெற்ற போட்டிகளின் போது தாம் பயன்படுத்திய காலணிகளைச் சுத்தம் செய்யாமல் அப்படியே சுருட்டிக் கட்டிக்கொண்டு நியூசிலாந்துக்குள் நுழைந்த இந்திய வீரர்கள் இருவரை அந்நாட்டுச் சுங்க அதிகாரிகள் தடுத்து நிறுத்தி அபராதம் விதித்துள்ளார்கள்.

இந்தத் தர்மசங்கடத்திற்கு முகம் கொடுக்க நேர்ந்திருப்பது வீரேந்தர் செவாக்கிற்கும், ஹர்பஜனுக்குமாகும்.

இவர்கள் இருவரதும் பயணப் பொதியிலிருந்த காலணிகள் அழுக்குடன் இருந்ததால், இந்திய நாணயத்தில் தலா 5,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத் தொகையைச் செலுத்திய பின்னரே இவர்கள் இருவரும் வெலிங்டன் விமான நிலையம் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

நியூசிலாந்து நவீன விவசாய முறைகளில் முன்னேற்றம் கண்ட நாடு. அங்கு பாரியளவிலான கால்நடை வளர்ப்புப் பண்ணைகள் இயங்குகின்றன. இந்த விவசாயப் பண்ணைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து ஆபத்தான தொற்றுநோய்க் கிருமிகள் வந்துவிடாமல் தடுப்பதில் நியூசிலாந்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

இதன் காரணமாக விமான நிலையம் துறைமுகம் என்பவற்றினூடாக நியூசிலாந்துக்குள் செல்வோரின் சுத்தம் குறித்து அதிகளவு அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள் அதிகாரிகள்.


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் Basel S.P.T. யின்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

BERN ZURICH மாநகரில் நத்தார் புதுவருட மலிவு விற்பனையை நடத்தவுள்ளோம்.

இடம்: BERN மாநகரில்
HOTEL ALFA (City West) BERN
பழைய மக்கள் கடைக்கு அருகாமையில்
காலம்: 19.12.2002 வியாழன்
20.12.2002 வெள்ளி
21.12.2002 சனி
நேரம்: காலை 11$^{00}$ மணிமுதல் இரவு 20$^{00}$ வரை

இடம்: ZURICH மாநகரில்
Volks. Hous மண்டபத்தில்
Stufaucher. Str 60-(கெல்விஸ்ய பிலர்ஸ்) (Zurich)
காலம்: 26.12.2002 வியாழன்
27.12.2002 வெள்ளி
28.12.2002 சனி
நேரம்: காலை 11$^{00}$ மணிமுதல் இரவு 20$^{00}$ வரை

குறிப்பு: 1பவுண் கல்லுநகை, முத்துநகை Bombay Design உட்பட கூலியின்றி 134.$^{50}$ S.F.r. மட்டுமே.
சுவிற்சர்லாந்து நாட்டிலேயே தங்க நகை விற்பனையில் முன்னணி ஸ்தாபனமாகத் திகழும் Basel S.P.T

பெண்களின் அழகோ இரகசியம் S.P.T.யின் தங்க நகை அணியும் போது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

உங்கள் தொடர்புகளுக்கு: S.P.T. Ravi Prop
Te & Fax: 061 2720990 Hand Phone: 079 3562278

## சச்சின், சஹீர்கான், ட்ராவிட், கபில்தேவ்

# இணைந்து ஒரு சினிமாப்படம்

இந்தியக் கிரிக்கெட் அணி வீரர் சச்சின் டெண்டுல்கரைக் கிரிக்கெட் மைதானத்தில் பார்த்துப் பழகிவிட்ட இரசிகர்கள் அவரை சினிமாத் திரையில் காணும் வாய்ப்பை பெற இருக்கிறார்கள்.

சச்சின் டெண்டுல்கர் உட்பட முன்னணி நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் பலர் நடிக்கும் திரைப் படமொன்று இந்தியாவில் தயாராகி வருகிறது.

இத். திரைப்படத்தைத் தயாரிப்பவர் பிரபல ஹிந்தி நடிகை ரவீனா தண்டன்.

படத்திற்குப் பெயர் ஸ்டம்ப். (Stumped ) என்பதாகும்.

ஸ்டம்ப் என்றால் கிரிக்கெட் விளையாட்டில் துடுப்பாட்டக் காரர் ஒருவர் கிறீஸ் எனப்படும் அவரது எல்லைக்கு வெளியில் சென்று ஆடும்போது விக்கெட் மீது பந்தை வீசி ஆட்டமிழக்கச் செய்வதாகும்.


இத் திரைப்படத்தின் கதை கிரிக்கெட்டையும், யுத்தத்தையும் மையமாகக் கொண்டு எழுதப் பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் படப்பிடிப்பு ஆரம்பமாகவிருக்கும் இத் திரைப்படத்தை கௌராப் பாண்டி என்ற புதிய ஒருவர் இயக்குகிறார்.

காஸ்மீரில் பாரிய யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில் ஆயிரக்கணக்கான துருப்பினர் நாட்டுக்காக உயிர் துறக்கும் நிலையில், இந்தியாவிலுள்ள பெரும்பாலான மக்கள் கிரிக்கெட் மோகத்தில் திளைத்திருப்பதை இத் திரைப்படம் சித்திரிக்கிறது.

ஆனாலும், "எனது திரைப்படத்தில் கிரிக்கெட் இரசிகர்களையோ, கிரிக்கெட் விளையாட்டையோ தேவையில்லாத ஒன்று என நான் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படைவீரர்களுக்கு கௌரவத்தைப் பெற்றுக் கொடுப்பதே எனது நோக்கம்" என்று கூறுகிறார் ரவீனா.

சச்சின் உட்பட ஆறு முன்னணி கிரிக்கெட் வீரர்களுடன் பல நடிகர், நடிகைகள் இத் திரைப்படத்தில் தோன்றவுள்ளனர். ஆனாலும், ஒரேயொரு பெண் பாத்திரம் மட்டுமே வலுவானதாக அமையவிருக்கிறது.



குடும்பத்தில் சகலரும் தொலைக்காட்சிக்கு முன்னால், மெய்மறந்து கிரிக்கெட் விளையாட்டை இரசித்துக்கொண்டிருக்க, இராணுவத்தில் பணியாற்றும் தனது கணவனை நினைத்து உருகும் ஒரு பெண்ணாக ரவீனா நடிக்கிறார்.

திரைப்படத்தில் வரும் கிரிக்கெட் வீரர்கள் இராணுவத்தினரை வாயாராப் புகழும் பல காட்சிகள் இடம்பெறவுள்ளன.

கபில்தேவ், ராகுல்ராவீட், சஹீர்கான், யுவராஜ்சிங், ரவி சாஸ்திரி, ஆகியோரும் இத் திரைப்படத்தில் நடிக்கவுள்ளனர். இத்திரைப்படத்தின் மூலம் கிடைக்கும் நிதியின் ஒரு பகுதியை காகில் நிதி என்ற பெயரில் அமைக்கப்பட்டிருக்கும் போர் வீரர்களுக்கான நிதியத்திற்கு வழங்கத் திட்டமிட்டுள்ளது.



## உண்மைக் காதலுக்கு விலை உயிர்!

"நீ என்னை நிஜமாகவே காதலிக்கிறாயா, யாபோ?" என்றாள் அவள்.

"சந்தேகமே வேண்டாம்" என்றான் அந்த 19 வயது காதலன்.

"எப்படி நம்புவது?" அவள்.

"காதலுக்காக உயிரையே தருவேன்" என்றான் யாபோ.

"பொய் சொல்கிறாய், நீ" என்று சிணுங்கினாள் அந்தப் பெண்.

அவ்வளவுதான், அடுத்த கணம் தன் கையில் இருந்த துப்பாக்கியை எடுத்து தன் நெற்றிப் பொட்டில் வைத்துச் சுட்டான். காதலன் சரிந்தான். காதலி கதறினாள்.

இச் சம்பவம் பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் நடந்தது.

சம்பவத்தை விசாரிக்கும் பொலிஸாரிடம் அந்தப் பெண் அழுதபடி சொன்னாள். "விளையாட்டாகக் கோபித்துக் கொண்டேன். இப்படிச் செய்து விட்டானே..."

## இடி மின்னல் இருந்தால்தான் இனப்பெருக்கம்

இடி,மின்னலுக்கும் இனப்பெருக்கத்துக்கும் சம்பந்தம் உண்டா என்று கேட்டால், முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடுவதாகச் சொல்வீர்கள்.

ஆனால் இருக்கிறது.

இடி, மின்னலோடு மழை இல்லாவிட்டால் முதலைகள் இனப்பெருக்கத்தில் ஈடுபடாது என்பது அனுபவரீதியிலும், விஞ்ஞான ரீதியாகவும் நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை.

அவுஸ்திரேலியாவில் முதலைகளை இறைச்சிக்காகவும், தோலுக்காகவும் பண்ணைகளில் வளர்க்கிறார்கள். கடந்த சில மாதங்களாக அங்கு இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யவில்லை.

இதனால், தங்கள் முதலைகள் இனப்பெருக்கத்தில் ஈடுபடாமல் எண்ணிக்கை அதிகரிக்காத நிலையில் முதலைப் பண்ணையாளர்கள் நட்டமடைந்து வருவதாக ஒரு செய்தி சிட்னியிலிருந்து அறியக் கிடைக்கிறது.

சிட்னிக்குத் தெற்கில் பாரிய முதலைப் பண்ணை வைத்திருப்பவர் ஜோன் லிவர். இவரது பண்ணையில் ஆண்டுதோறும் சுமார் 1,600 முதலைக் குட்டிகள் பிறக்கும். கடந்த ஆறு மாதமாக இப் பகுதியில் மழையே இல்லை.

இதனால், ஜோன் லிவரின் பண்ணையிலுள்ள முதலைகள் இனப்பெருக்கம் செய்வதை தவிர்த்து வருகின்றன. இடியோசையின் போது ஆண் முதலைகள், பெண் முதலைகளுடன் சேர்வதாகக் கூறப்படுகின்றது. நீண்ட நாட்களாக இடிச் சத்தம் கேட்காததனால் ஆண் முதலைகளுக்கு, வீரியம் குறைந்து விட்டதாகவும், பெண் முதலைகள் தங்களுடைய சினை முட்டைகளைத் தாங்களாகவே உள்ளிழுத்துக் கொள்வதாகவும் ஜோன் லிவர் கூறுகிறார்.

இதனால், முதலைகள் கூடினாலும் கருத்தரிப்பு நிகழ்வதில்லை. வானில் இடியோசை கேட்கும்போதே முதலைக்கு உணர்ச்சி உண்டாகிறது. இதை செயற்கையாகச் செய்ய வேண்டுமானால், முதலைப் பண்ணையின் மீது ஹெலிகொப்டர்களைப் பறக்கவிட வேண்டும்.

அதற்கு அதிக பணம் செலவாகிறது. மேலும் இயற்கையில் உரிய மாறுதல் ஏற்படாது வெறுமனே பாரிய சத்தத்தை எழுப்புவதன் மூலம் மட்டும் கருத்தரிப்பு வெற்றிகரமாக இருப்பதில்லை. இதனால் ஏற்கெனவே நட்டத்தை எதிர்கொண்டுள்ள அவுஸ்திரேலிய முதலைப் பண்ணையாளர்கள் மழைக்காகத் தவம் கிடப்பதாகக் கூறுகிறார் அவர்.


## துபாய் நாட்டில் வேலை வாய்ப்புகள்

துபாய் நாட்டிலுள்ள பிரசித்திபெற்ற கம்பனிகளுக்குக் கீழ்க் கண்டவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தகுதியுடையவர்கள் பாஸ்போட், புகைப்படம், சான்றிதழ் என்பவற்றுடன் உடனடியாகக் காரியாலயத்திற்கு வரவும். வெளிநாட்டு முகவர்களால் தினமும் நேர்முகப் பரீட்சை நடைபெறுகின்றன. தெரிவு செய்யப் படுகின்றவர்கள் உடனடியாகப் பயணம் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| Electrical Engineer | - இலக்றிகல் என்ஜினியர் | DHMS 3500-4000 |
| Mechanical Engineer | - மெக்கானிகல் என்ஜினியர் | 3500-4000 |
| A/C Duct Foreman | - A/C டக்ட் போர்மன் | 1500-1700 |
| A/C Duct Fabricator | - A/C டக்ட் பெப்ரிகேடர் | 1000 |
| A/C Duct Erector | - A/C டக்ட் எரெக்டர் | 1000 |
| A/C Piping Foreman | - A/C பைப்பிங் போர்மன் | 1500-1700 |
| A/C Pipe Fabricator | - A/C பைப் பெப்ரிகேடர் | 1000 |
| A/C Pipe Fitter | - A/C பைப் பிட்டர் | 1000 |
| A/C Mechanic | - A/C மெக்கானிக் | 1000 |
| Welder | - வெல்டர் | 1000 |
| Electrician | - இலக்ரீசியன் | 1000 |
| Electrical Foreman | - இலக்ரிக்கல் போர்மன் | 1000 |
| Plumbar | - பிளம்பர் | 1000 |
| Pipe Fitter | - குழாய் பொருத்துனர் | 1000 |
| L/V Driver | - சிறிய ரக வாகன சாரதி | 800-1000 |
| (Gulf License) | - (கல்ப் சாரதி அனுமதிப் பத்திரம்) | |
| Riggers | - ரிகர்ஸ் | 750+Food |
| Petrol Mechanic | - பெற்றோல் மெக்கானிக் | 950 |
| Furniture Carpenters | - பேணிச்சர் கார்பென்டர் | 750 |
| Upholster | - குசன் செய்வோர் | 900 |
| Welder Tig/mig/arc | - வெல்டர் டிக்/மிக்/ஆர்க் | 800 |
| Fabricator | - பெப்ரிகேட்டர் | |
| Estimater Cum Auto CAD | - எஸ்ரிமேற்றர் கம் ஒடோ கெட் | |
| Draughtsman/Engineer | - டிராப்ஸ்மென்/இன்ஜினியர் | 2000 |
| Sales Engineer | - சேல்ஸ் இன்ஜினியர் | 2500 |
| Welder (Tic) | - வெல்டர் (டிக்) | Negotiable |
| Auto Electrician | - வாகன எலக்ரீசியன் | Negotiable |
| Steel Fabricator | - ஸ்ரீல் பெப்றிகேடர் | Negotiable |
| Workshop Supervisor | - வேக் சொப் சுப்பவைசர் | Negotiable |
| Electrician | - இலக்ரீசியன் | 800-900 |
| Plumber | - பிளம்பர் | 800-900 |
| Pipe Fitter | - பைப் பிட்டர் | 800-900 |
| Duct Insulator | - டக் இன்சுலேட்டர் | 800-900 |
| Western Cook | - மேறகத்தைய சமையற்காரர் | 1250 |
| Pest Control Technician | - பூச்சி மருந்து அடிப்போர் | 800+Food |
| Carpenter | - காபென்டர் | 700+Food |
| Mason | - மேசன் | 700+Food |
| Steel Polisher | - இரும்பு சுத்தம் செய்வோர் | 900 |
| Welder | - வெல்டர் | 1000 |
| Moulder | - மோல்டர் | 1000 |
| Glass Fitter | - கிளாஸ் பொருத்துனர் | 900 |
| Painter | -பெயின்டர் | 900 |
| Shovel Operator | - சவல் ஒப்பரேட்டர் | 1000+Food |
| Dozer Operator | - டோஸர் ஒப்பரேட்டர் | 1000 |
| Excavator Operator | - எக்ஸ்ஸகவேட்டர் ஒப்பரேட்டர் | 1000 |
| Diesel Mechanic | - டீசல் மெக்கானிக் | 1500 |
| Room Boy | - ரூம் போய் | 600+Food |
| Helper | - உதவியாளர் | 600+Food |
| Scaffolder | - உயர்ந்த கட்டிடங்களுக்குச் செல்லக்கூடியவர்கள் | 800 |
| Labourers | - தொழிலாளர்கள் | 450+Food |
| Store Keepers | - களஞ்சியக் காவலர்கள் | 950+Food |

### சேவைகளும் நிபந்தனைகளும்

☆ 02 வருட ஒப்பந்தம்
☆ உணவுக் கொடுப்பனவு சம்பளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
☆ மருத்துவம், தங்குமிடம் இலவசம்.
☆ சேவைக் காலம் முடிந்தவுடன் திரும்பி வருவதற்கு விமானப் பயணச்சீட்டு இலவசம்.

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**தனா மேன்பவர் (பி) லிமிடெட்**

104, 2 ம் மாடி , செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொ.பே:- 01-385046/ 385047, 075-333346-9.

அனுமதி இல-701

Approval No. AL/701, ADVT/EX/102/ 95, 93, 90, 89, 087, 078, 077, 083, 91, 89.

# மன்னாதி மன்னன்

133

இராஜகுமாரன்

கல்வியறிவே அற்ற கோகுலவரதன் மிகக் குறுகிய காலத்திற்குள் பூரண அறிவு பெற்ற ஒருவனாகத் திரும்பி வந்த காரணத்தை விக்கிரமாதித்த மன்னன் கேட்டபோது, தேவகன்னியர்கள் எண்மரால் தனக்குக் கிடைத்த பேறுதான் இந்தக் கல்வி ஞானம் என்று பதிலளித்தான்.

கோகுலவரதன் குறிப்பிட்ட கோவில் எங்கிருக்கிறதென்று விசாரித்த விக்கிரமாதித்த மன்னன், கோகுலவரதனையும் அழைத்துக் கொண்டு, வேதாளத்தின் துணையுடன் அந்த ஆலயத்தைச் சென்றடைந்தார். இவர்கள் சென்றபோது தேவகன்னியர்கள் எண்மரும் ஆலயத்தில் பூசையை முடித்துக் கொண்டிருந்தனர்.

பூசை முடிந்ததும் அவர்கள் எண்மரும் கோயிலுக்குப் பின்புறமாக ஓடும் நெருப்பாற்றங்கரையை அடைந்து, அருகில் இருந்த குகையினூடாக உட்செல்வதைப் பார்த்துத் தான் மட்டும் அந்தக் கன்னியர்களுக்குத் தெரியாமல் அவர்களைப் பின்தொடர்ந்தார். அந்தக் குகையினுள் எட்டுச் சித்தர்கள் அமர்ந்திருந்தனர். எட்டுக் கன்னியர்களும் சென்று அச் சித்தர்களை வணங்கினர். பின்னர் அவர்கள் மாயமாக மறைந்தனர்.

மன்னர் விக்கிரமாதித்தன் தேவகன்னியர்கள் மறைந்ததும் அந்த எட்டுச் சித்தர்களையும் வணங்கினார். அவர்களில் மூத்தவராகத் தோன்றிய சித்தர் மன்னரை நோக்கி, "நீர் ஒரு மானிடர். இந்த இடத்திற்கு எப்படி வந்தீர்?" என்று கேட்டார். தேவகன்னியர்களைத் தொடர்ந்து வந்ததாக மன்னர் கூறினார். அத்துடன் தன்னையும் அறிமுகப்படுத்தினார். அந்த எட்டுச் சித்தர்களும் மன்னர் விக்கிரமாதித்தனுக்கு ஒளிபொருந்திய எட்டு இரத்தினக் கற்களைப் பரிசளித்தனர்.

கோகுலவரதனை அழைத்துக் கொண்டு உஜ்ஜயினி மாகாளிப் பட்டணம் சேர்ந்த மன்னர் அந்த இரத்தினக் கற்களைக் கோகுலவரதனுக்குப் பரிசாக அளித்து வாழ்த்தி அனுப்பினார். நகரத்திற்குள் செல்வதற்கு முன்னர் ஆலயத்தின் மூலஸ்தானம் அருகில் சென்று அம்பாளை வணங்கினார். வழிபாட்டின் பின்னர் பிரதான வாயிலை நோக்கி நடந்து வரும்போது அவருடைய காலில் அங்கிருந்த ஒரு கல்பட்டு இடறினார். கீழே விழுந்துவிடாமல் ஒரு தூணைப் பற்றி நிதானித்துக் கொண்டார்.

எக்காலத்திலும் இல்லாமல் இத்தகையதொரு துர்க்குறி ஏற்பட்டுள்ளதை அவதானித்த போது அவர் மனம் சஞ்சலமடைந்தது. அரண்மனை வந்ததும் அமைச்சர் பட்டி மன்னரை எதிர்கொண்டு வரவேற்றார். அப்போது மன்னரின் முகத்தில் சஞ்சலம் தென்பட்டதைப் பட்டி அவதானித்த போதும் எந்தக் கருத்தையும் கூறாமல் அவருடைய முகமும் வாட்டமடைந்தது.

இந்தக் கதையை முப்பத்தோராம் படிக்கட்டில் நீதிவாக்கியவல்லிப் பதுமை கூறியதும் போஜ மன்னர் தனது அரண்மனை சென்றார்.

அடுத்தநாள் அதிகாலையில் ஆலயத்துக்குச் சென்ற போஜ மன்னர், தனக்கு இன்று விக்கிரமாதித்த மாமன்னரின் அரியணையில் ஏறி அமரும் பாக்கியம் கிடைக்கப் போகிறது என்று மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். ஆலய வழிபாட்டை முடித்துக் கொண்டு அரியணை வைக்கப்பட்டுள்ள மண்டபத்தை அடைந்தார்.

மிக்க மகிழ்ச்சியுடன் படிகளைக் கடந்து முப்பத்திரண்டாவது படிக்கட்டில் கால் பதித்ததும் அப்படிக்குக் காவலாக இருந்த பதுமை போஜ மன்னரைத் தடுத்து நிறுத்தி, "மன்னரே இதுநாள்வரை எனது சகோதரிகள் கூறிவந்த விக்கிரமாதித்த மாமன்னரின் வீரதீர பராக்கிரமச் செய்கைகளைப் பற்றிக் கதைகளைக் கேட்டீர். இவற்றை அறிந்த பின்னரும் இவ்வரியணையில் ஏறி அமர்வதற்கு ஆசை கொண்டு வந்திருக்கிறீரே" என்று ஏளனமாகக் கேட்டது.

போஜ மன்னர், "பதுமையே இத்தகைய ஆற்றல்கள் நிரம்பிய மாமன்னர் விக்கிரமாதித்தனுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பதை அறிய விரும்புகிறேன், அதனைக் கூறுமாறு உம்மிடம் கோருகிறேன்" என்றார்.

## மாமன்னரின் காலம் முடியப் போகிறது

மாமன்னர் விக்கிரமாதித்த பூபதியின் இறுதிக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பதுமை கூறியது. காவிரிக்கரையில் உள்ள பல்லாண்டுபுரி என்ற நகரில் சகல கலைகளிலும் வல்லவனான, இராமகிருஷ்ண அவதானி என்ற அந்தணன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவி திவ்யசிந்தாமணி. எதிர்காலத்தை அறிவதிலும், சோதிடக் கலையிலும் இணையற்ற பாண்டித்தியம் பெற்ற அவதானி, அவனுடைய மனைவி திவ்யசிந்தாமணி ருதுவான நாளைக் கணக்கிட்டுப் பார்த்தான். அன்றிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்த பின் வரும் சித்திரை மாதத்தில் பதினைந்தாம் நாளன்று சுக்கிலவார இரவில், தான் எந்தப் பெண்ணோடு சேர்ந்தாலும் அதன் மூலம் பிறக்கும் ஆண் குழந்தை உலகத்தையே ஒரே குடைக்கீழ் கட்டியாழும் வல்லமை பெற்றவனாக விளங்குவான் என்று கணக்கிட்டிருந்தார்.

அந்தப் பன்னிரண்டாண்டுகளுக்குள் தான் காசி யாத்திரை சென்று திரும்பி வந்துவிடலாம் என்று எண்ணியவராக யாத்திரை புறப்பட்டார்.

தனது யாத்திரையைச் சீராக முடித்துக் கொண்டு பல்லாண்டுபுரி நோக்கி வரும் வழியில் காவிரி ஆறு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றைக் கடக்கும் மார்க்கம் தெரியாமல் இராமகிருஷ்ண அவதானி தவித்துக் கொண்டிருந்தான். படகை ஓட்டுவதற்கு எவரும் முன்வரவில்லை. அவர் குறித்து வைத்திருந்த நல்ல காலம் நெருங்கிக் கொண்டிருந்தது.

(இறுதியாக மன்னன் அடுத்த இதழில் வருவான்...)

---

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

எல்லாம் சரி, நாங்கள் நாடு நாடாப் பிச்சா பாத்திரமேந்தித் திரியாமல் நாடுகளெல்லாத்தையும் ஒண்டாக் கூப்பிட்டுப் பிச்சை கேட்டது கெட்டித்தனந்தான். ஆனால் விழுந்த பிச்சை எவ்வளவெண்டதுதான் கவலையாக் கிடக்கு. யானைப் பசிக்குச் சோளப் பொரி எண்டுவாங்களே! ஆனால் இங்க யானையும் புலியும் சேந்தெல்லே பிச்சை கேட்டவை. சோளப் பொரிய எப்பிடிப் பங்கு பிரிக்கப் போகினமோ, அவனுக்குத்தான் வெளிச்சம்!

எண்டாலும் ரணிலார் கொஞ்சம் கெட்டித்தனத்தக் காட்டித்தான் இருக்கிறார். தான் சொல்லப்போனால் தம்பி சண்டைக்கு வந்திடுவாரெண்டிட்டு நைசாப் பள்ளிக்கூடம் கூட்டிக் கொண்டு போய்ப் பிறின்சிப்பலைக் கொண்டு சொல்லுவிச்சிட்டு, ஏதோ தனக்குச் சம்பந்தமில்லாதது போல நிக்கிறார். பிறின்சிப்பலோ, இருத்தி வைச்சு ரூள்ஸ் விதிச்சு, சத்திய வாக்குமூலம் தந்தாத்தான் ஸ்கூலில சேர்ப்பாரெண்டு அறிவுறுத்தி அனுப்பியிருக்கிறார்.

எல்லாம் ஒரே ராஜதந்திர விளையாட்டாக் கிடக்கு. யாருக்கு யார் செக் வைக்கினமெண்டே தெரியேல்லை.

இங்க பொலிஸ்டேஷனும் நீதிமன்றமும் ஊருராய்த் திறபடுது. அங்க, ஏதோ, முழு நாட்டுக்கும் கொழும்பு அரசாங்த்துக்கு இறைமையிருக்கிறதெண்டு அங்கீகரிக்கச் சொல்லி அமெரிக்கன் சொல்லிப்போட்டு வீட்ட போய்ட்டான். நடக்கிறத யாரும் பேசிறதாயுந் தெரியேல்லை, பேசிறபடி யாரும் நடக்கிறதாயும் தெரியேல்லை.

ஏதோ சண்டை ஓஞ்சுது. அமைதி வருமெண்டு பாத்தால் மாறி மாறி டென்ஷனாத்தான் கிடக்குது. கிழக்கில குழப்பம் தீந்திட்டு தெண்டிருக்க, வடக்கில வெடிக்குது. பாடப் படிப்பை விட்டுட்டுப் பல்கலைக் கழகத்தார் கொஞ்சப் பேர் மழைக்குள்ள குடையும் பிடிச்சுக்கொண்டு நிண்டு கூச்சல் போடினம். நாங்கள், தமிழருக்க சண்டை பிடிப்பம், சிங்களவர் உங்களுக்கென்ன வேலையெண்டு பொலிஸ் காரரைப் பாத்துக் கேக்கினம். இப்பிடித்தான் முந்தி நாங்கள் ஒரு நாட்டுக்க, தமிழரும் சிங்களவரும் சண்டை பிடிப்பம், அன்னியர் உங்களுக்கென்ன வேலையெண்டு இந்தியாக் காரரக் கேட்டது ஞாபகம்.

எங்கயும் எவரோடயும் சண்டை பிடிக்கிறதுக்குத்தான் ஞாயம் தேடுற கதையாக் கிடக்கு. ஒருத்தரோட சமாதானமெண்டால், இன்னொருத்தரோட சண்டை. எப்பதான் சண்டையே இல்லாத காலம் வருமோ தெரியாது. எல்லாரும் மண்டையப் போட்ட பிறகுதான் வருமெண்டால் சமாதானமெண்டதை சுடலையிலதான் போர்ட் போட்டுத் தொங்கப் போட வேணும்.

ஆயிரம் மலர்கள் மலரட்டும். ஆயிரம் கருத்துக்கள் பிறக்கட்டுமெண்டு மாவோ சொன்னார். இங்க மாற்றுக் கருத்து ஏதுவுமே இருக்கக் கூடாதெண்டு துடியாத் துடிக்கிறம். தனியொருவனுக்கு உணவில்லை யென்றால் ஜெகத்தினை அழித்திடுவோமெண்டான் பாரதி. தனியொருவன் மட்டுமே உணவுண்ண வேணுமெண்டு நாங்கள் ஜெகத்தினை அழிக்க நிக்கிறதாத்தான் தெரியுது.

என்னவோ நடக்குதெண்டு எல்லாருக்கும் தெரியுது. என்ன நடக்குதெண்டுதான் எவருக்கும் தெரியேல்லை. சமாதானம் வந்திட்டுதா, வரயில்லையா? வரப்போகுதா? வர மாட்டுதா?

முதலில சமாதானமெண்டால் எப்பிடியிருக்குமெண்டே எங்களுக்குத் தெரியேல்லை. அது வந்தது வராதது பற்றிக் கேக்க என்ன அருகதை எங்களுக்கு?

சுப்பண்ணா சொன்னாரண்ணா,
சுதந்திரம் வந்ததெண்டு,
எப்பண்ணா வந்ததெண்டு,
எனக்கின்னும் தெரியலண்ணா,
அப்பண்ணா நாம இன்னும்
அடிமைகள் தானா அண்ணா?

எண்டுதான் நாங்களும் பாடிக்கொண்டிருக்க வேணும்.

என்ர போதனை உங்களுக்கெல்லாம் கட்டாயம் பயங்கர போராத்தான் இருக்குமெண்டது மட்டும் எனக்கு நிச்சியம். கடைசி போரடிக்க வைக்கும் உரிமையாவது தடை செய்யப்படாமலிருக்கும் வரை நான் பாக்கியசாலிதான்.

கனக்கக் கதைக்கக் கூடாது. அதுவும் தப்பு. உண்மையில கதைக்கவே கூடாது. அதுதான் சரி. கதைக்கிறதவிட கதை சொன்னால் கொஞ்சம் சுவாரசியமாயிருக்கும். கதையே சொல்லுறன்.

இது ஒரு குட்டிக்கதை. எங்களில யாருக்குப் பொருந்துதோ, நீங்கள் பொருத்திக் கொள்ளுங்கோ.

காட்டில மான்களும் குதிரைகளும் ஒரே குளத்தில தண்ணீர் குடிச்சு வந்திச்சினமாம். தண்ணிச் சண்டை வாறதுக்கு எங்கட ஆக்களுக்குச் சொல்லியே குடுக்க வேணும்? ரெண்டு பேருக்கும் துடங்கிட்டுது சண்டை. மான்களுக்குக் கொம்பிருந்ததால குதிரைகள் பாடு கொஞ்சம் கஷ்டமாப் போட்டுது. பின்ன, குதிரைகள் என்ன செய்திச்சினமெண்டால், வேட்டைக்காரனோட கூட்டுச் சேர்ந்தால் மான்களை அடக்கிடலாமெண்டு நினைச்சு அவனிட்டச் சரணடைஞ்சிச்சினம். வேட்டைக்காரன் என்ன செய்தான் தெரியுமோ? குதிரைக்கு லாடனடிச்சு, மூக்கணாங் கயிறு போட்டு, முதுகில ஏறி, சவாரி போய் மான்களை வேட்டையாடத் துடங்கிட்டான். அதுக்குப் பிறகு குதிரையினத்துக்கே முதுகு குடுத்துக்கொண்டே இருக்கிறதுதான் விதியாப் போச்சு. மானை வெல்ல வேடனை நாடி கடைசியில, அடிமை வாழ்வுக்குத்தான் வழி தேடிக் கொண்டுதாம் குதிரை!

ஓகே! எங்க ஊர்க் குதிரைகளுக்கு நீங்கள்தான் புத்தி சொல்ல வேணும். மான்களுக்கும் படிப்பினைதான்! குளத்துத் தண்ணியில குதிரையையும் குடிக்க விட்டிருந்தால் வேடனுக்கு வாய்ப்பாகி இருக்காதுதானே!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

---

# இந்தவாரம் உங்கள் பலன்

08.12.2002 தொடங்கி 14.12.2002வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

விருட்சிகம் - சூரியன், கேது. இடபம் - இராகு, மிதுனம் - சனி,
கர்க்கடகம் - வியாழன், துலாம்-வெள்ளி, செவ்வாய்.
சந்திரன் மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் விடயங்களில் அவதானம் தேவை. பணவரவு, கௌரவம் திருப்தி தரும். உத்தியோகத்தில் சிலருக்கு மாற்றம் ஏற்படும். மாணவர்களுக்குக் கல்வி உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

### இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் கஷ்டம் உண்டு. எதிர்பார்த்த கருமங்களில் தடை ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் சிலருக்கு இடையூறு தோன்றும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்தம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல: 4.

### மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் சிறப்புறும். பணவரவு சிறந்து விளங்கும். எதிர் பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் சிலர் முன்னேற்றம் பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழிலில் நன்னிலையும், பணவரவும் கிடைக்கும். வெளியிடப் பிரயாணங்களால் கஷ்டம் ஏற்படும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. உத்தியோகத்தில் சிலருக்குக் கஷ்டம் தோன்றும். மாணவர்கள் கல்வி உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் நிலையில் குழப்ப நிலை தோன்றும். வீண் செலவுகள் ஏற்படும். பெரியோர் பகை கொள்வர். உத்தியோகத்தர்கள் மனக்கலக்கம் அடைவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மை தரும்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 2.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் அவதானமாக நடந்து கொள்ளவும். மறைமுக எதிர்ப்புக்கள் உண்டு. அன்னியரால் தொல்லை சேரும். உத்தியோகத்தில் சிலர் மேலதிகாரிகளின் தொல்லைகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 7.

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) கருமங்களில் தடையுண்டாகும். தொழிலால் சிலர் கஷ்டமடைவர். பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் சிலர் மாற்றங்களைப் பெறுவர். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 4.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) புதிய முயற்சிகள் பலிதம். காரியானுகூலம், பணவரவு சேர்க்கையுண்டு. உத்தியோகத்தர்கள் எதிலும் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) செய்தொழில் நன்மை. பணவரவு, கௌரவம், பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 3.

### மகரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை. பெரியோர் உதவி. கௌரவம் உண்டு. உத்தியோகத்தர்கள் பலவித நன்மை பெறுவர். மாணவர்களுக்குக் கல்வியில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் மறையும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 5.

### கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) பெரியோர் பகை. தொழில் கஷ்டம். வீண்செலவு உண்டாகும். உத்தியோகத்தில் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்குக், கல்வி உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது.
அதிஸ்ட நாள்: வியாழன்.
அதிஸ்ட இல.: 2.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) மறைமுக எதிர்ப்புகள் தோன்றும். தொழில் கஷ்டம். பணவரவில் தடை என்பவைகளைத் தரும். உத்தியோக நிலையில் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த கல்வி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

Regd. as a News Paper in the G.P.O.




# சகிக்காத தோல்வி

இந்திய கிரிக்கட் இரசிகர்களுக்கு அவர்களது அணி எப்பொழுதும் வெற்றி பெற்றுக்கொண்டே இருக்க வேண்டும். விறுவிறுப்பாகச் செல்லும் போட்டி ஒன்றில் தப்பித்தவறி இந்திய அணி தோல்வி காணும் என்ற நிலை ஏற்பட்டாலோ அல்லது சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கும் இந்திய நட்சத்திர வீரர்கள் எவரேனும் திடீரென ஆட்டமிழந்தாலோ இந்திய இரசிகர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது.

அவர்கள் தங்களது ஆத்திரத்தை வெளிப்படுத்த உலகில் வேறெங்கும் இல்லாத ஒரு வழிமுறையைக் கையாள்கிறார்கள்.

பாவித்து முடித்த தண்ணீர்ப் போத்தல்கள், பாதி சாப்பிட்ட அப்பிள் பழங்கள் மற்றும் கையில் கிடைத்த பொருட்கள் எல்லாம் மைதானத்தின் 'எல்லைக் கோட்டுக்குச்' சமீபமாக 'பீல்ட்' செய்யும் எதிரணி வீரர்களை நோக்கி வரும். இந்திய இரசிகர்களின் இந்த விரும்பத்தகாத செயல் சர்வதேச கிரிக்கட் கவுன்ஸிலின் கடும் கண்டனத்திற்குள்ளாகியிருக்கிறது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடந்தால், இந்தியாவில் போட்டிகளை நடத்த அனுமதிக்கப்போவதில்லை எனக் கூறும் அளவுக்கு இவ் விடயத்தில் கிரிக்கட் கவுன்ஸில் ஆத்திரமடைந்துள்ளது.

தங்களது தோல்வியின்போது இரசிகர்களை எப்படி அமைதிப்படுத்துவது என்று தெரியாமல் இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை தடுமாறுகிறது. இவ்வாறான கிரிக்கட் அசம்பாவிதங்களுக்குக் கொல்கத்தாவிலுள்ள ஈடன்கார்டன் மைதானம் மிகவும் பிரபல்யமானது.






சம்பத்தில் மேற்கிந்தியத் தீவு அணியுடனான ஒரு நாள் போட்டியொன்றின் போது இந்திய அணியின் தோல்வியை சகிக்க முடியாமல் ஜமசத்பூர் இரசிகர்களும் போத்தல் வீசும் காரியத்தைச் செய்தார்கள். போட்டி இடை நடுவில் நிறுத்தப்பட்டது. ஜம்சத்பூர் மைதானத்தில் வெளியிலிருந்து வீசப்பட்ட பொருட்கள் தான் இவை.



# காதல் தொல்லை

↑ வீனஸ் வில்லியம், செரினா வில்லியம் சகோதரிகள் இன்று சர்வதேச டென்னிஸ் அரங்கின் முதல் தர வீராங்கனைகள்.

பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவில் நடைபெறும் பெண்களுக்கான திறந்த போட்டிகள் பலவற்றில் பதக்கங்களைப் பெற்று நீண்டகாலங்களாக முன்னணி வீராங்கனைப் பட்டியலில் இருந்த பலரைப் புறந்தள்ளியவர்கள்.

இந்த இரண்டு சகோதரிகளும் இருவேறு காதல் சமாச்சாரங்களில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். இருவருக்கும் டென்னிஸ் விளையாட்டோடு சம்பந்தப்படாத காதலர்கள் இருக்கின்றார்கள்.

இரசிகர்கள் எனக் கூறிக்கொண்டு தங்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முயலும் சிலர் தங்களது தனிப்பட்ட வாழ்வுக்குக் குந்தகம் ஏற்படுத்துவதாக இவ்விரு சகோதரிகளும் பொதுவான புகார் ஒன்றைத் தங்களது இரசிகர்கள் சிலர் மீது சுமத்துகின்றனர்.

இப்பொழுது செரினா மற்றும் வீனஸ் ஆகியோர் பங்குகொள்ளும் டென்னிஸ் போட்டிகளில் ஆண் இரசிகர்களுக்கு இவர்களை நெருங்கிப் போக முடியாதவாறு கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை தங்கள் உணர்வுகளைப் பாதிப்பதாகக் குறிப்பிடும் இவர்கள் வேறு வழியின்றி அவ்வாறான பாதுகாப்பைப் பெறவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

# பிரமாண்டம்

→ மோட்டார் சைக்கிள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். ஏணிவைத்து ஏறி அமர வேண்டிய நிலையில் ஒரு மாபெரும் மோட்டார் சைக்கிளை அமைத்திருக்கிறார் தாய்லாந்து தொழில்நுட்பவியலாளரான பேம்கிட் ஞன்ரோன். தனது கடும் முயற்சியால் எட்டு மாதம் சிரமப்பட்டு 650 டொலர் செலவில் இந்த மோட்டார் சைக்கிளை இவர் தயாரித்துள்ளார். ரக்டர் ரயர்கள் பொருத்தப்பட்டுள்ளன. எரிவாயுவால் இயங்குகிறது. 2.7 மீற்றர் நீளமான இந்த மோட்டார் சைக்கிள் உலகிலேயே மிகப் பெரிய மோட்டார் சைக்கிள் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவிருக்கிறது.

(படஉதவி: அப்துல் ரசூல், நிந்தவூர்.)





இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் போரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் மா. 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.